Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 22

ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් மார்ச் 16-22, 2003

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 503



# ஆன்மீகம்

## மரணம்

★ வாழ்வில் இருந்து மனிதனுக்கு இரண்டு விளைவுகள் உண்டு. ஒன்று அன்பு. இரண்டாவது மரணம்.

★ மரணத்தைத் தவிர்க்க முடியாது. மரண பயத்தைத் தவிர்க்க முடியும்.

★ மரணம் மனிதனைச் சுற்றித் தினமும் நடக்கிறது. ஆனால், வாழ்வு நிலையானது என்பது போலவே மனிதன் நடந்துகொள்கிறான்.

★ மரணம் வாழ்க்கையின் மறுபக்கம்.

★ நாம் வாழ்வு என்று கூறுவது மெதுவாக நடக்கும் மரணமே ஆகும். தினமும் உடல் ஓரளவு மரணிக்கிறது. ஆனால் அது முழுமையாக மற்ற வருக்கு நேரும்போதுதான் புறக்கண் அதனை உணருகிறது.

★ வாழ்க்கையை அறிந்து கொள்ளாமல் இருப்பதுதான் மரணமாகிறது.

★ வாழ்வைப் பற்றிய அறியாமைதான் மரணம்.

★ உண்மையிலேயே மரணம் என்பது சிரிப்புத் தான்.

(ஒஸோவின் பொன்மொழிகளிலிருந்து)



## நோன்பு இருத்தல்

"என்னுடைய அயலவன் யார்?" என்று கிறிஸ்துவிடம் ஒருவன் கேட்டான். உங்களது பக்கத்து வீட்டுக்காரனையே நீங்கள் நினைக்கக்கூடும். இந்த வார்த்தைக்கு ஓர் ஆழமான உலகளாவிய கருத்தியல் இருக்கிறது.

யார் ஆபத்திலும், துன்ப துயரத்திலும் சூழப்பட்டிருக்கிறானோ அவனே அயலவன் என்று விவிலியம் வலியுறுத்துகிறது. இனம், மதம், சாதி, பால், நிறம், பிரதேசம், நாடு என்ற எல்லைகளைக் கடந்து யார் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு நீதியை வேண்டி நிற்கிறானோ அவனே அயலவன்.

"உன்னைப் போல் உன் அயலவனை நேசிப்பாயாக" என்பதன் அர்த்தம், ஆபத்தில், துன்பத்தில் சிக்கித் தவிப்பவனுக்கு நீ உதவ வேண்டும் என்பதுதான். அன்பு என்பது ஓர் இரக்கச் செயல். தியாகத்திற்குத் துணியாமல் இந்த அன்பு நடைமுறைச் சாத்தியமற்றது. அயலவனின் விடிவுக்காக நீ துன்பங்களைச் சுமக்க வேண்டும். துன்பத்தை, நெருக்கடியை, ஆபத்தைக் கண்டு விலகிச் செல்வதால் நீ அயலவனை விடுவிக்க முடியாது.

ஆன்மீகம் என்பது ஓர் உள்ளரங்க, மனத்தளம் சார்ந்த விடுதலை மட்டுமல்ல, புறவளமாக மனிதர்கள் விடுதலை பெறுவதையும் அது குறித்து நிற்கிறது.

வாடிய பயிரைக் கண்டபோது மனம் வாடுவதல்ல. பதிலாக வாடிய பயிருக்குத் தண்ணீர் ஊற்றுவதுதான் அன்புச் செயல். இதையே கிறிஸ்து "நல்ல சமாரியன்" என்ற உவமைக் கதையில் தெளிவாக வலியுறுத்தியிருக்கிறார். எனவே அயலவன் விடிவுக்காகத் தியாகத்தைச் செய்வது ஒவ்வொருவரின் கடமையாகும்.

சாரவாகனன்.

## கியாமத்து நாளில் மூன்று நபர்கள்

மாபெரும் திடுக்கம் நிறைந்த கியாமத்து நாள் மூன்று நபர்களைத் திடுக்குறச் செய்யாது அந்நாளில் அவர்களுக்கு கேள்வி கணக்கும் இருக்காது. மனிதர்கள் அனைவரும் தங்களுடைய கேள்வி கணக்குகளை விட்டு நீங்கும் வரை அவர்கள் ஓய்வு பெற்றிருப்பார்கள்.

அவர்களில் முதலாமவர் அல்லாஹ்வுக்காக அவனுடைய திருப்தியைத் தேடியவராக அல்குர் ஆனை ஓதி அதனை ஒரு கூட்டத்தினருக்கு இமாமத் செய்பவர்.

இரண்டாமவர் அல்லாஹ்வுக்காக அவனுடைய திருப்தியைத் தேடியவராக மக்களைத் தொழுகைக்கு அழைக்கும் ஓர் அழைப்பாளர்.

மூன்றாமவர் தனக்கும் தன்னைப் படைத்த அல்லாஹ்வுக்குமிடையே உள்ள செயல்களிலும் தனக்கும் தனக்குக் கிழுள்ள அடிமைகள் வேலைக்காரர்கள் ஆகியோரின் விஷயத்திலும் நல்ல முறையில் நடந்து கொண்டவர் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ஆதாரம்: தப்ரானீ

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.500

### பரிசுக்குரிய கவிதை

### பெரியதும்மா!

தலை நிமிர்ந்து
தமிழ் சுமந்து
தரணியெலாம் உலாவரும்
தினமுரசின்
கவர்ச்சியுனை
கவர்ந்திழுத்த மாயமென்ன?
சுற்றி மிதழ்
சூழ்ந்திருக்க
சுகம் கோடி பெற்றது போல்
வெற்றிக் களிப்பினிலே
வியந்தொழுகி நிற்பவளே!
விருது சிறிதெனினும்-நீ
விற்றிருக்கும் ஆசனமோ
பெரிதம்மா..!

நிந்தவூர்-ஹஸனார் ஷகாப்.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### முரசின் பெருமை

முரசின் சுவையும்
ஆழ் கருத்தும்
அறியும் வயதல்ல
நேற்றைய நடப்புகளை
நாளை படித்தறிய
முரசு மலர்களை
குவித்து வைத்துவிட்டு
காவல் காக்கும்
இளசோ இவள்.

எஸ்.சிவலோஜன்-வவுனியா.

### ஏக்கம்

திரண்ட பாறையினிலே
தினமுரசுக் குவியலிலே
ஆடலாம் பாடலாம்
படுத்தும் கொள்ளலாம்
படித்து சுவைக்க முடியலயே
என்னதான் செய்ய என
ஏங்கித் தவிக்குது பால் மனம்

அப்புத்தளை-எஸ்.எம்.ரமீஸ்.

### 'நீ யாரோ?'

அறிவின் தேடலாகி-அற்புத
கலைக்களஞ்சியமாய் விளங்கும்-மனங்கவர்
தினமுரசில் கொலுவிருக்கும்-இந்த
முழுநிலவே நீ யாரோ?

க.மலர்ராஜன், திருகோணமலை.

### இருந்து பார்....

நீ மலரும் முன் மலர்ந்துவிட்ட தினமுரசின்
500 இதழ்களையும் கண்டு மலைப்பா?
இன்னும் இருந்து பார், எத்தனை
புதுமைகளை படைக்கப் போகின்றது என்று.

செ.பிறேம்குமார்-மானிப்பாய்.

### அற்புத(ன்)ம்!

பத்தாரிகையுலகில்...
பல காத்திரமான
கருத்துக்கள்-ஆருடங்கள்
தந்தும்,
இன்றும் அதே வண
காத்திரத்துடன்
பத்தாண்டையும் தாண்டி
வீறுநடைபோடும் முரசு;
'முத்தெ'ன்றால் சொல்லுக்கு
சிறுமையில்லை...
வாழ்த்த;
வார்த்தைகளுக்கு
வலிமையில்லை...
நின்புகழ் வாழி,
அற்புத(னா)மாய்.!

தாராபுரம் நிலாம்-கரம்பை.

### அற்புத(ம்)ன்

அற்புதனின் அற்புதமே
செந் தமிழின் பொற் பதமே
பிஞ்சுக் குழந்தை ஒன்று
உன் மீது வாஞ்சை கொண்டு
தந்தை தாயை மறந்து
உந்தன் மடியில் தவழ்ந்து
உன் ஈரைந்து ஆண்டினை
இன்பமுடன் வர வேற்க-கரத்தில்
அன்பளிப்புடன் இன்றிருந்தே
காத்திருக்க இலவு காத்த
கிளி போல!

இராமையா தமிழ்வாணன்-
அப்புகஸ்தனை.

## கவிதைப் போட்டி இல.503



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 22.03.2003

கவிதைப் போட்டி இல.503
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அதிசயம்

மலர்கள்
மீதுதான்
இதழ்கள்
இங்கே
இதழ்கள் மீது
ஒரு மலர்!

சி.நாகேந்திரன்-
ஆரையம்பதி-03.

### தெய்வப் பாவை

"திரும்பும் இடமெல்லாம் தினமுரசின் அணிவகுப்பு!
தெரியும் படமெல்லாம் தினமுரசின் பல முகப்பு!
கரும்பின் சுவையும் கற்கண்டின் தனிச் சுவையும்
விரும்பியே உண்டோம்! விரைந்தது பத்தாண்டு!
அரும்பின் கையில் பாவை-தமிழ்
அவனியின் கைகளில் நீ ஒரு தெய்வப்பாவை!"

நா.ஜெயபாலன்-பிபிலை.

### அடம்பிடிப்பு

பொம்மையெல்லாம்
எனக்கு வேண்டாம்.
ஏழுநாட்களா? என்னால்
பொறுக்க முடியாது.
எனக்கு..
தினமும் வேணும்
தினமுரசு

தி.கணேஷ்-காந்தியூர்.

### மகிழ்ச்சி

தித்திக்கும் தினமுரசை
சுவைத்திடத்தான் வயதில்லை.
சூழ இருந்தாவது
சுகம் காணுவோம் என்று
மடிமீது உனை வைத்து
மகிழ்கிறேன் நானும்.

ஸீனத் எம்.ஸாபிர்-
ஹேனமுல்லை.

### அன்பளிப்பு முரசு!

திரும்பும் திசையெல்லாம்
தினமுரசின் தித்திப்பு!
படிக்க இயலாப்பாவைக்கு
புரியாத தத்தளிப்பு!!
ஆர்வங் கொண்ட
வாசகர்க்கோ-ஆக்கங்களெலாம்
இதில் அன்பளிப்பு
பிரதி வாரமும் செய்தியாய்
பிந்தாமல் தருவதோ உலக நடப்பு!!!

ப்ரிய நேசி-களுத்துறை (தெற்கு)

### நல் வாழ்த்துக்கள்

பத்தாம் ஆண்டில் 'முரசு' போல்
பட்டுச் சட்டைப் பாப்பாவும்
பல்லாண்டு சிறப்பாய்த் திகழ
பாசமுடன் வாழ்த்துகிறோம்

செல்வி கௌசிகா மகேந்திரன்-உடுவில்.

## வாசக[ர்] சாலை

வருக! வருக! வருகவே!
இருபது பக்கங்களில்
இடைவிடாது
வார மொரு தடவை
குருவார நன்னாளில்
முருகு தமிழ் பரப்பி
மிக அருமையாக
வெளி வரும் தினமுரசு
பத்து வருடங்களை
முத்தமிட இருக்கும்
பொன்னான
நன்னாளை
முரசு வாசக உள்ளங்கள்
கரகோசம் செய்து
தரமான பல படைப்புக்களுடன்
வந்து மகிழ்வூட்டும் என
வழிமேல் விழிவைத்திருக்கின்றோம்.
எங்கள் ஆசை முரசே!
பத்திரிகை உலகில்
பரபரப்பை ஊட்டிவரும்
தர முரசே, உன்னை
வரவேற்கின்றோம்-நீ
வருக! வருக! வருகவே!

கவிக்குயிலன்-சேனையூர்.


500ஆவது இதழில் கால்பதித்திருக்கும் என் அன்பான தினமுரசே! நீ 2003 ஜூன் மாதத்தில் 10வது ஆண்டையும் நிறைவு செய்யவுள்ளாய் என்பதை நினைக்கையில் மனதுக்குள் மிகவும் சந்தோசமாக உள்ளது. எனவே என்னுடைய வாழ்த்தையும் நான் உனக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் நீ 10வது ஆண்டு நிறைவை யொட்டி உன்னுள் இன்னும் இன்னும் புதிய ஆக்கங்களை எம்போன்ற வாசக நெஞ்சங்களுக்கு வழங்க இருக்கின்றாய் என்பதை அறிந்துகொண்டேன். உன்னுள் தரமான ஆக்கங்களை அதிகமாகக் கொண்டு வர வேண்டும். என்பதே என் விருப்பம். உன்னை வாழ்த்த இந்த தபால் அட்டை போதாமல் இருக்கின்றது. உன்னை வாழ்த்தி விடை பெறும் உன் அன்பான வாசகன்.

எச்.எம்.நிபாஜி-
திருகோணமலை.

### அன்புடன் முரசு ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்

முரசின் பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பிறந்திருக்கும் புத்தாண்டிலிருந்து குறுக்கெழுத்துப் போட்டியை அறிமுகப்படுத்தியதால் மிக்க மகிழ்ச்சி. குறுக்கெழுத்துப் போட்டியை அறிமுகப்படுத்திய முரசு ஆசிரியருக்கும், சக ஊழியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள். முரசு மென்மேலும் வெற்றிநடை போட வாழ்த்துக்கள்.

வி.ராமன்தேவர் ராம்குமார்-மடுல்லை.




உன் வாசகனின் அன்பு மடல், வாசகர்களின் மனம் புரிந்து 500வது இதழாய் மலர்ந்தாய். என்றென்றும் உன் சேவை நூற்றாண்டு மலர, என்னுடைய அன்பான வாழ்த்துக்கள்.

ஆ.ஜீவகுமார், அக்கரபத்தனை.

**ஆசிரியர்க்கு,**

பத்திரிகைத் துறையில் இன்று, மக்களின் நலனுக்காக, வெளிவரும் ஒரே பத்திரிகை, ஏனெனில் இன்று எவ்வின மக்களாய் இருந்தாலும் அம் மக்களின் உரிமைகளைக் கருத்திற் கொண்டு தனது ஆதங்கத்தை வெளிக்காட்டிவரும் ஒரே முரசு, குறிப்பாக அண்மைக் காலமாக கிழக்கில் இடம் பெறும் வன்முறைகளையும் அடக்கு ஒடுக்கு முறைகளையும் துணிந்து, வெளியிட்டாய், பாராட்டுக்கள் நன்றிகள், குறிப்பாக, தாகூர், கிழக்கான் மற்றும் அனைத்து அம்சங்களும் தரமாக உள்ளன, இன்டநெட், ஆறுமனமே ஆறு, எக்ரே றிப்போர்ட், முரசம், செய்திகள், உங்கள் பக்கம், தாகூர், கிழக்கான், அனைத்தும் சூப்பர்.

அ.ஜெயகுமார்-கிரான்.

## உங்கள் பக்கம்

### இடமாற்றங்களைத் தவிர்த்து, ஏழை மாணவர்களுக்கு உதவுவீர்களா?

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட மட்/மகிழூர்முனை சக்தி வித்தியாலயம் பின்தங்கிய கிராமத்துப் பாடசாலை. இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். சிலகாலம் இங்கு மேலதிகாரிகளின் தவறான செயற்பாடுகளால் மாணவர்களின் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. இது விடயமாக மாவட்ட பா.உ.கௌரவ யோசப் பரராசசிங்கம் அவர்களிடம் பேசியதின் காரணமாக சென்ற 1994இல் 6ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதனால் பெற்றோரும் மாணவர்களை ஊக்குவித்தனர். பாடசாலை வருடாந்த கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இதே போல் இங்கிருந்த ஆசிரியர்கள் பாடசாலை தவிர்ந்த நேரங்களிலும் மாணவர்களுக்கு வகுப்புகளை நடத்திப் புலமைப் பரிசில் போன்ற பரீட்சைகளில் சித்தியடையச் செய்தனர்.

தற்போது இங்குள்ள ஆசிரியர்களிடையே போட்டி, பொறாமை நிலவும் காரணமாக நிர்வாகம் சீரின்மையால் சில தரமானவர்கள் வேறு இடங்களுக்கு மாறிச் சென்றுள்ளனர். சிலர் திடீர் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இதே போல் சென்ற வருடம் இக் கிராமத்தை சேர்ந்த ஆசிரியை ஒருவர் வருடத்தின் இடைநடுவில் திடீர் மாற்றம் பெற்றார். இதன் மர்மம் என்ன? அரசியல் செல்வாக்கா அல்லது அதிகாரிகள் அறிமுகச் செல்வாக்கா என்பதை பாடசாலை மாணவர்கள், பெற்றோர் போன்றோர் அறிந்துகொள்ள முடியுமா?

ஆகவே சுமார் 270க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட இப் பாடசாலைக்கு 05க்கு மேற்பட்ட ஆசிரியர்களின் தேவை இருந்தும் இங்கிருப்பவர்களை தொடர் மாற்றம் செய்வதை தவிர்த்து மாற்றம் பெற்றவர்களை மீண்டும் இப் பாடசாலைக்கு மாற்றி இக் கிராம ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவுமாறு பெற்றோர், மாணவர்கள் சார்பாகத் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆ.கெங்காசலம்-மகிழூர்முனை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# தாக்கப்பட்டது ஆயுதக் கப்பலா, சரக்குக் கப்பலா?

## யாருக்காகவும் வாதாட முடியாத சங்கடத்தில் அரசாங்கம்

முல்லைத்தீவுக்குச் சமீபமாக சர்வதேச கடற்பரப்பில் திங்கட்கிழமை காலை இலங்கை கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்ட புலிகளுக்குச் சொந்தமான கப்பல் ஆயுதங்களை ஏற்றிவந்த கப்பல் என்று கடற்படையினர் உறுதியாகக் கூறிவரும் அதேவேளை இது தங்களது சரக்குக் கப்பலெனப் புலிகள் தெரிவித்துவரும் நிலையில் இந்த இரண்டு கருத்துக்களில் எதற்கும் ஆதரவாகப் பேச முடியாத மிகவும் தர்மசங்கடமான நிலைக்குப் பாதுகாப்பு அமைச்சு தள்ளப்பட்டுள்ளது.

திங்களன்று காலை 7.45 மணியளவில் இந்தக் கப்பலை அவதானித்த இலங்கைக் கடற்படையின் சயுர என்ற ரோந்துப்படகு அதனை நிறுத்துமாறு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் இந்தக் கப்பல் தப்பிச் செல்ல முயற்சித்ததோடு அதிலிருந்து கடற்படைப் படகை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் முற்பகல் 11 மணியளவில் கடற்படை நடத்திய தாக்குதலில் சேதமடைந்த இக் கப்பல் மூழ்கத் தொடங்கியது. சுமார் 3 மணி நேரம் இரு தரப்பினர்களுக்குமிடையில் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளதாகவும் இதன்போது 4 கடற்படையினர் காயமடைந்ததாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இது தமது இயக்கத்துக்குச் சொந்தமான சரக்குக்கப்பல் என்பதை ஒப்புக்கொண்டிருக்கும் புலிகள் இயக்கம் எவ்வித சட்ட விரோத நடவடிக்கையிலும் ஈடுபடாத தமது கப்பலைக் கடற்படையினர் வலியச் சென்று தாக்கியழித்ததன் மூலம் போர் நிறுத்த உடன்படிக்கையைப் பாரதூரமாக மீறியுள்ளனர் என்று இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் இயக்கம் முறைப்பாடு செய்திருக்கிறது.

இது தொடர்பாக தமிழ்ச்செல்வன் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இந்தச் சம்பவம் சமாதான முயற்சிகளில் பலத்த பின்னடைவை ஏற்படுத்தக்கூடியது என விபரித்திருந்தார்.

இந்தக் கப்பலில் புலிகள் இயக்கம் பெருந்தொகை ஆயுதங்களைக் கடத்தி வந்ததாக இலங்கை கடற்படையினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இத்தகையதொரு கப்பல் பாரிய அளவிலான ஆயுதங்களுடன் இலங்கையை நோக்கி வந்து கொண்டிருப்பதாகக் கடற்படையினருக்கு வெளிநாட்டு உளவு நிறுவனமொன்று இரண்டு வாரங்களுக்கு முன்னர் தகவல் வழங்கியிருந்தது. இந்தத் தகவலை அடிப்படையாக வைத்து இலங்கையின் கடற்பரைப்பை விஷேட கண்காணிப்புக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

நவீன கண்காணிப்பு கலங்களும் செய்மதி கண்காணிப்பு வசதியும் கொண்ட நாடொன்று இலங்கைக் கடற்பரப்பைக் கண்காணிக்க கடற்படையினருக்குத் துணைபுரிந்துள்ளது.

சம்பவ தினத்தன்று முன்னதாகக் கிடைத்த தகவலையொத்த அடையாளம் காணப்படாத கப்பல் இலங்கையை நோக்கி வருவதை அதே வெளிநாட்டு உளவு நிறுவனத்தின் உதவியுடன் உறுதி செய்துகொண்ட கடற்படையினர் தேடிச் சென்று புலிகளின் கப்பலைத் தாக்கியழித்துள்ளனர்.

இதில் கப்டன் உட்பட 16 புலிகள் இயக்கச் சிப்பந்திகள் இருந்ததாக அந்த இயக்கம் உரிமை கோரியுள்ளது.

கப்பல் மூழ்கடிக்கப்பட்ட இடத்தில் சுழியோடிகளின் உதவியுடன் தேடுதல்களை மேற்கொள்ளக் கடற்படை ஆலோசித்துள்ளது.

இந்தக் கப்பல் தாக்கப்பட்டது தொடர்பாக புலிகள் பாதுகாப்பு அமைச்சிடமும் தமது விசனத்தையும் கவலையையும் தெரிவித்துள்ளார்கள்.

இந் நிலையில் கடற்படையினரின் கூற்றை மறுத்துக் கருத்துக் கூறுவதன் மூலம் கடற்படையின் மனக்கசப்பை சம்பாதித்துக் கொள்ள விரும்பாதது போலவே புலிகளின் கருத்துக்கு எதிராகப் பேசி சமாதான முயற்சிகளில் இருந்து அவர்கள் விலகிச் செல்ல அனுமதிக்க முடியாது என்ற இக்கட்டான நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது. இது இவ்வாறிருக்க திங்களன்று நடைபெற்ற எதிரணியின் கூட்டமொன்றின் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் மங்கலசமரவீர, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேரடியாகத் தலையிட்டு நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே புலிகளின் ஆயுதக் கப்பலைத் தாக்கி அழிக்க உத்தரவிட்டார் எனக் கூறியிருக்கிறார்.

### முக்கியஸ்தர்களுக்கு விசேட அழைப்பு

இது இவ்வாறிருக்க கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து வவுனியா, மன்னார் உள்ளிட்ட இடங்களில் உள்ள புலிகளின் அலுவலகங்களின் முக்கியஸ்தர்கள் விசேட அழைப்பின் பேரில் வன்னி சென்றுள்ளனர்.

இவ்வாறு திடீரென அவர்கள் பின்தளத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதானது நடந்த கப்பல் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதா? அல்லது புலிகளின் வழமையான நடவடிக்கைதானா? என்பது தெரியவில்லை.

# தயார் நிலையில் இருக்குமாறு படையினரிடம் அமைச்சர் பீரிஸ் வேண்டுகோள்!

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைதிச் சூழல் நூறுவீதம் நம்பகத்தன்மை வாய்ந்தது எனக் கூறிவிட முடியாது என்று அமைச்சரும், அரச தரப்பு பேச்சுவார்த்தைக் குழுத் தலைவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார். வவுனியாவில் முப்படையினர் மத்தியில் உரையாற்றிய அவர், தனிநாடு தவிர்ந்த எந்த விடயத்தையும் பேச அரசு தயார். நாட்டைப் பிரிப்பதற்காக நாம் பேச்சுக்களில் ஈடுபடவில்லை. நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்யப் படையினர் எந்த நேரமும் தயாராக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

படையினருக்கு அரசாங்கம் வழங்கிவரும் சலுகைகளில் எவ்வித குறைப்பும் செய்யப்பட மாட்டாது எனவும் ஜி.எல்.பீரிஸ் உறுதியளித்துள்ளார்.

# அமைதியாக முடிந்த ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை எதிர்த்தும் விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடிகளைக் கண்டித்தும் தேசத்தைப் பாதுகாக்கும் அமைப்பு என்ற பெயரில் பொ.ஐ.மு, ஜே.வி.பி. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்திருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் அமைதியாக நடந்து முடிந்தது.

இந்த ஊர்வலத்தில் எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கொழும்பு நகர மண்டபத்திடலில் மகிந்த ராஜபக்ஷ, அனுர பண்டாரநாயக்க, விமல் வீரவன்ச, மங்கள சமவீர உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டதோடு விரைவில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசைக் கவிழ்த்து நாடு துண்டாடப்படுவதை தமது அமைப்பு தடுக்கும் என்று பேச்சாளர்கள் சூளுரைத்தனர்.

முன்னதாக இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்ட திங்கட்கிழமை கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் வெடிக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இத்தகைய கலவரங்களை அரசாங்கம் தூண்டிவிட்டு எதிர்க்கட்சிகளின் மேல் பழி போட எத்தனிப்பதாக எதிர்க்கட்சிகளும் ஆர்ப்பாட்டமென்ற பெயரில் கலவரமொன்றை அரங்கேற்ற எதிரணி முயற்சிப்பதாக அரசாங்கமும் பரஸ்பரம் குற்றம் சாட்டியிருந்தன. ஆனால் குறிப்பிடத்தக்க அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாத நிலையில் இரண்டு தரப்பினர்களது குற்றச்சாட்டுக்களும் பொய்யாக்கப்பட்டது.

# உபவேந்தராக பேராசிரியர் மோகனதாஸ்

யாழ் பல்கலைக் கழகத்தின் உபவேந்தராக பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் நியமிக்கப்படவுள்ளார். 14ம் திகதி வெள்ளிக்கிழமை இவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக பீடாதிபதியாகக் கடமையாற்றிய பேராசிரியர் மோகனதாஸ் பாலசுந்தரம் பிள்ளையை அடுத்து யாழ். பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக நியமிக்கப்படவிருக்கிறார்.

இந்த இடத்திற்குத் தனது மைத்துனரான கிழக்கு பல்கலைக் கழக கணிதத்துறை விரிவுரையாளர் க.கனகநாதனை நியமிக்க அமைச்சர் மகேஸ்வரன் பலத்த முயற்சி மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

# புத்தளம் பகுதியில் தொடரும் முறுகல்நிலை

புத்தளத்தில் இரண்டு குழுக்களுக்கிடையே நீண்ட காலமாக நிலவிவரும் பகைமை கடந்த ஞாயிறன்று மோதலாக வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் உடைமைகளுக்கும் சேதமேற்பட்டது.

புத்தளம் நூர் பள்ளி அருகில் முஸ்லிம் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் பின்னர் பிரதேசத்தில் பதற்றம் நிலவியது. சில வீடுகளும், வியாபார ஸ்தலங்களும், ஆட்டோ வண்டிகளும் சேதமாக்கப்பட்டன.

இதனையடுத்து ஞாயிறு, திங்கள் தினங்களில் இரவு வேளையில் புத்தளம் பிரதேசத்தில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. தற்போது நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாகப் பொலிஸார் கூறிவருகின்ற போதிலும் அங்கு இவ்விரு குழுக்களுக்குமிடையில் முறுகல் நிலை தொடர்கிறது.

கடந்த மூன்று மாதங்களுக்குள் இரண்டாவது தடவையாக புத்தளம் பகுதியில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# ஈராக் உளவாளிகளைக் கண்டுபிடிக்க உதவுமாறு உள்துறை அமைச்சு வேண்டுகோள்!

பாக்தாத்திலிருந்து இலங்கை வந்து இங்கு தலைமறைவாகி விட்டதாகக் கூறப்படும் மூன்று ஈராக்கிய உளவுத்துறை அதிகாரிகளைத் தேடி உள்துறை அமைச்சு வலைவிரித்துள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா நடத்தப்போகும் உத்தேசத் தாக்குதலைக் கண்டிக்கும் ஆர்ப்பாட்டங்களை இலங்கையில் ஒழுங்கு செய்யும் நோக்குடன் இந்த அதிகாரிகள் கொழும்பு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் வியாபார நடைவடிக்கைக்காக எனக் கூறி கொழும்பிலிலுள்ள ஈராக் தூதரகம் ஊடாகவே விசா பெற்று இங்கு வந்துள்ளார்கள். அதனால் இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க உதவுமாறு உள்துறை அமைச்சு ஈராக் தூதரகத்தைக் கேட்டிருக்கிறது.

இந்த அதிகாரிகள் கடைசியாக ஹிக்கடுவைப் பகுதியில் உள்ள ஹொட்டலொன்றில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. அதன் பின்னர் இவர்கள் எங்கு சென்றனர் என்று தெரியவில்லை.

கொழும்பிலும் ஏனைய சில இடங்களிலும் கடந்த வாரங்களில் இடம்பெற்ற அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் இந்த உளவுத்துறை அதிகாரிகளே செயற்பட்டதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்திருந்தது. ஆனால் இதனை மறுத்திருக்கும் கொழும்பிலுள்ள ஈராக் தூதரகம் அமெரிக்காவின் நியாயமற்ற போர் முயற்சிக்கு உலகளாவிய ரீதியில் தெரிவிக்கப்பட்டுவரும் எதிர்ப்பின் ஓர் அங்கமாகவே இலங்கையிலும் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் நடந்ததாகக் கூறியுள்ளதோடு அரசியல் கட்சியொன்றிற்குப் பணம் கொடுத்து இத்தகைய ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்ததாக அமெரிக்கத் தூதரகம் கூறுவதையும் மறுத்துள்ளது.

இதற்கிடையில் இந்த உளவுத்துறை அதிகாரிகள் கொழும்பு வந்தது தொடர்பாக முன்னதாகவே அமெரிக்கத் தூதரகம் இலங்கை அரசாங்கத்திற்கு இரகசிய அறிக்கை ஒன்றின் மூலம் தெரியப்படுத்தி இருந்தது.

# புலிகளின் முகாம் மீது தாக்குதல் படைவீரர் பலி!

தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாமில் படைவீரர்களின் குடும்பத்தினருக்காக நடத்தப்பட்ட இராணுவ கண்காட்சி ஒன்றின் போது தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படைவீரர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தக் கண்காட்சியின்போது படையினர் புலிகளின் முகாம் ஒன்றைத் தாக்கியழிப்பது போன்ற காட்சி அரங்கேற்றப்பட்டது. இதன் போது சகவீரர் ஒருவர் சுட்டதில் திஸாநாயக சோமதிலக (வயது 26) என்ற சிப்பாய் உயிரிழந்தார்.

பொதுவாக இத்தகைய கண்காட்சிகளின்போது செயற்திறன் மிக்க துப்பாக்கி ரவைகள் பாவிக்கப்படுவதில்லை. ஆனால் இந்தக் கண்காட்சியில் அவ்வாறு நடைபெற்றிருப்பது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோசமாகும் உடல்நிலை!

களுத்துறைச் சிறைச்சாலையில் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகள் பலரது உடல்நிலை நாளுக்கு நாள் மிக மோசமான கட்டத்தை அடைந்து வருவதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாவது வாரமாக உண்ணாவிரதத்தைத் தொடரும் கைதிகள் தமிழ் அரசியல்வாதிகளினால் வழங்கப்படும் வழமையான வாக்குறுதிகளை ஏற்பதில்லையெனக் கூறி வருகின்றனர்.

# முரசம்

## மோசமடையும் அரசியல் நிலையும் எட்டப்படாத சமாதானத் தீர்வும்

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

இந்த வாரத்தில் நிகழ்ந்தேறிய விடயங்கள் நிலைமையை மோசமாக்குவனவாக உள்ளன. ஒருபுறம் பொதுஜன ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி கூட்டுப் பேரணி, மறுபுறம் புலிகளின் கப்பல் கடற்படையால் மூழ்கடிப்பு. இதற்கு மத்தியில் தமிழ்ச் சிறைக் கைதிகள் உண்ணாவிரதம். யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை என்ற வகையில் ஏறுவரிசையில் நிகழ்ந்தேறிய விடயங்கள் ஏதோ ஒரு இடரில் தடைப்பட்டு இப்போது இறங்கு முகத்தை அடைந்திருக்கிறதா என்ற கேள்வி அனைவருக்கும் எழுகிறது. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்வதிலும் பங்கீட்டிலும் மட்டுமே பெருமளவு சிரத்தை காண்பிக்கப் படுவது போல் காணப்படுகிறது. அரசியல் தீர்வுக்கான எந்த விடயமும் கடந்த மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் எடுத்துக்கூடப் பார்க்கப்படவில்லை. இதேவேளை யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய முறைப்பாடுகள் வரவர அதிதீவிரமான சம்பவங்கள் பற்றியதாக மாறி வருகின்றன. கண்காணிப்புக் குழுக்களின் செயற்பாடு கச்சிதமானதாக இருந்து, யுத்த நிறுத்த மீறல்கள் உரியவகையில் கையாளப்பட்டுத் தீர்த்து வைக்கப்படுவது உண்மையாக இருந்தால் யுத்த நிறுத்த மீறல்களின் தீவிரம் வரவர குறைந்து செல்வதாகவே இருக்க வேண்டும். முரண்பாடுகள் நீங்கிச் செல்வதாகவே இருக்க வேண்டும். மாறாக விடயங்கள் தீவிரமடைந்து செல்கின்றன. கடந்த மாதம்தான் நெடுந்தீவுக் கடலில் புலிகளின் ட்ரோலர் புலிகளாலேயே வெடிக்க வைத்து மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் பெரும் அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இப்போது சர்வதேசக் கடலில் புலிகளின் கப்பல் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டதும், 11 புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதும் நிலைமையை மேலும் மோசமாக்கி விட்டுள்ளன. இவை ஒருபுறம் மோசமாகிச் செல்ல மறுபுறம் இவ் வாரம் நிகழ்ந்த அரச எதிர்ப்பு ஊர்வலமும் அதில் எதிரணிகள் ஒன்றுபட்டு நின்று, சமாதான முன்னெடுப்புகளை அரசாங்கம் கையாளும் விதத்தைக் கடுமையாக விமர்சித்ததுடன், அரசாங்கத்தைக் கூடிய விரைவில் மாற்றியமைக்கப் போவதாக அறைகூவல் விடுத்தும் உள்ளன. இவை அரசியல் ஸ்திரமற்ற நிலையை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருப்பதைக் கோடிகாட்டுகிறது. கவலை என்னவென்றால் காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்பது போல் நாம் அமைதி நிலவிய, வாய்ப்புக்கள் இருந்த காலத்திற்குள்ளேயே சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஒரு அரசியல் தீர்வை ஈட்டிக்கொள்வதற்கு மறுபடியும் தவறிவிடப் போகிறோமா என்பதுதான். காலத்தை நீடித்துச் செல்வது குழப்பங்கள் தோன்ற வழிவிடுவதாகிவிடுமென எச்சரித்திருந்த போதும் 20 வருடப் பிரச்சினையை இரண்டொரு நாளில் தீர்த்துவிட முடியாதென்று சொல்லிக்கொண்டு இறுதியில் தீர்க்காமலே கலைந்து போவதாக ஆகிவிடக் கூடாது என்பதை நாம் இத் தருணத்தில் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

அரசு புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கெதிராக ஸ்ரீ.ல.சு.க-ஜே.வி.பி. கூட்டமைத்துள்ளன.

ஐ.தே.மு. அரசு இப் புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் புலிகளுக்கு மிக அதிகமாக விட்டுக் கொடுத்துவிட்டது என்பது இக் கூட்டின் குற்றச்சாட்டாகும். 2001 இறுதிப் பகுதியில் நடைபெற்ற தேர்தலின்போதும் ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பி.யினால் இந்த உறவு அலி- கொட்டி கூட்டு என்றே வர்ணிக்கப்பட்டது.

குறுகிய காலத்திலேயே நிலைமைகள் தலை கீழாக மாறியுள்ளன.

ஐ.தே.க. 2001 இன் மத்தியிலும் அதற்கு முன்னரும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கெதிராக பாராளுமன்றச் செயற்பாட்டை ஜனாதிபதி இடை நிறுத்தியதற்கெதிராக பெரும் ஆர்பாட்டங்களை நடத்தியது. கண்ணீர்ப் புகைக்குண்டுகள், தடியடிப் பிரயோகங்கள் நடைபெற்றன. பலர் அரச தரப்பிலிருந்து எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்தனர்.

ஐ.தே.மு. 2001 இல் பதவிக்கு வந்த வெற்றிக் களிப்பில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் ஈடாடிப் போகும் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது.

> சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு உலகின் மிக முக்கிய நாடுகளும் ,இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் சம்பந்தப்பட்டுவிட்ட இச்சமாதான முயற்சிகள் தற்செயலாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் புதிய ஆட்சியாளர்களால் முன் கொண்டு செல்லப்படுமா, அல்லது கைவிடப்பட்டு தீவிர யுத்தத்தின் பிடிக்குள் நாடு மீண்டும் சிக்கி விடுமா என்பது போன்ற கேள்விகள் எழுகின்றன.

# சூடுபிடிக்கும் எதிர்க்கட்சி அரசியல்!

தற்போது இதே சூழ்நிலையின் குணங்குறிகள் திரும்பவும் ஏற்பட்டுள்ளதா என ஐயுற வேண்டியிருக்கிறது. அடிக்கடி நடைபெறும் வேலை நிறுத்தங்கள், பல்கலைக் கழக மாணவர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை என்பன பிரதானமாக விலைவாசி வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத நிலைமைகளால் எழுந்தன.

ஜே.வி.பி. கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் மிகப் பெரிய ஆரப்பாட்டங்களை நடத்திக் காட்டியுள்ளது. பெருங்குரல் எழுப்பும் ஆர்ப்பாட்டங்கள் பொதுஜனஐக்கியமுன்னணியினரால் நடத்தப்பட்டுள்ளன.

அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் உணர்ச்சிகரமான விவகாரம் சம்பந்தப்பட்டதாகும்.

இது போன்ற ஆர்ப்பாட்டங்கள் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகிய போதும் நடைபெற்றவை.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கு முன்னர் தமிழர்களின் சொத்துக்களைத் தாக்கத் திட்டம் இருப்பதாக ஜனாதிபதி பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஐ.தே.மு. அரசும் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்தது.

எது எப்படி இருப்பினும் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் எழுச்சிகள், பெருகிவரும் அதிருப்தியின் குறியீடா என நியாயமாகவே சிந்திக்க வேண்டியிருக்கிறது.

சமாதான இசை கேட்டாலும் தமது பானையில் ஒன்றுமில்லை என்ற நிலை காணப்படுகிறது. சமாதானத்தின் பலாபலன்களை நாம் நுகரவில்லை என்ற அங்கலாய்ப்பு மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளான ல.ச.ச.க, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி போன்றன ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பி. கூட்டை அவ்வளவாக விரும்பவில்லை. ஸ்ரீ.ல.சு.க. வில் உள்ள வலதுசாரிகளின் முன்னெடுப்பிலேயே இந்தக் கூட்டு உருவாகியுள்ளதாக அவர்கள் கருதுகிறார்கள்.

ஸ்ரீ.ல.சு.க. - இடதுசாரிக் கட்சிகள் என்ற பாரம் பரியமான கூட்டு தற்போது ஸ்ரீ.ல.சு.க-ஜே.வி.பி என்று மாற்றமடைந்துள்ளது. இந்த மாற்றம் நீடிக்குமா அல்லது தற்காலிகமானதுதானா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்த நாட்டின் பெரும்பான்மையான கிராமப்புற வறிய மக்களை ஸ்ரீ.ல.சு.க.வும் இடதுசாரிக் கட்சிகளும் ஜே.வி.பி.யும்தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

சிறுபான்மைச் சமூகங்களின் மத்தியில் ஸ்ரீ.ல.சு.க.வுக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் குறிப்பிடத் தகுந்தளவு செல்வாக்கு இருந்தது.

தற்போதைய ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பி. ஆர்ப்பாட்டங்கள் பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையின் வெளிப்பாடாகக் கொள்ள முடியும்.

முஸ்லிம், மலையக, வடக்கு கிழக்கு சமூகங்களைத் திட்டவட்டமாக அந்த சமூகங்களைச் சேர்ந்த கட்சிகளே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. சில இடங்களில் சிறிய விதிவிலக்குகள் இருக்கலாம்.

நாடு முழுவதும் சமாதானத்திற்காக ஏங்கித் தவித்த 2001 இன் இறுதிப் பருவம் தற்போது அலுத்துவிட்டதா என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது.

ஆனால் 1990 களின் பின்னர் சீரான முறையில் காலத்திற்குக் காலம் சமாதானத்திற்கான தமது விருப்பார்வத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள். 1994 இல் சந்திரிகா அவர்களுக்குக் கிடைத்த மகத்தான வெற்றியும் 2001 இறுதிவாக்கில் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு வழங்கிய ஆணையும் இங்கு கருத்திற்கெடுக்கப்பட வேண்டும்.



இந்த இரண்டு காலப்பகுதிகளிலும் இலங்கையின் சகல இன மக்களினதும் சிந்தனைகள் ஒரேமாதிரியிருந்திருக்கின்றன.

> ஸ்ரீ.ல.சு.க. - இடதுசாரிக் கட்சிகள் என்ற பாரம் பரியமான கூட்டு தற்போது ஸ்ரீ.ல.சு.க-ஜே.வி.பி என்று மாற்றமடைந்துள்ளது. இந்த மாற்றம் நீடிக்குமா அல்லது தற்காலிகமானதுதானா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால் அவர்கள் வழங்கிய ஆணைகளுக்கு மாறான, அரசியல்வாதிகள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறான தறிகெட்ட ஓட்டங்கள் அவர்களை விசனமடையச் செய்தன. சமாதானக் காற்றைச் சுவாசிக்கலாம் என்ற வடக்கு கிழக்கு மக்களின் முகங்களில் படையணிகளுக்கான தீவிர ஆட்திரட்டலும் மோசமான வரிவசூல்களும் வேண்டத்தகாத சம்பவங்களும் திரும்பவும் யுத்தம் ஏற்பட்டு விடுமா என்ற பீதியை உருவாக்கியுள்ளது.

ஸ்ரீ.ல.சு.க.வும் ஜே.வி.பி.யும் அரசின் அளவுக் கதிகமான விட்டுக் கொடுப்புக்கள் பற்றி தொடர்ச்சியாக கடுமையாக விமர்சித்து வந்துள்ளன.

மக்கள் மத்தியில் பெருகிவரும் அதிருப்திகள் அரசியல்வாதிகளை பாராளுமன்றத்தின் குறுக்கே எந்தப் பக்கம் பலம் பெறுகிறதோ அந்தப் பக்கத்திற்கு ஓடவைக்கலாம்.

அடுத்து வரும் மாதங்கள் அந்தவகையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

அப்படியானால் தற்போதைய சமாதான முயற்சிகளின் கதி என்னவாகும். சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு உலகின் மிக முக்கிய நாடுகளும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் சம்பந்தப்பட்டுவிட்ட இச்சமாதான முயற்சிகள் தற்செயலாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் புதிய ஆட்சியாளர்களால் முன் கொண்டு செல்லப்படுமா அல்லது கைவிடப்பட்டு தீவிர யுத்தத்தின் பிடிக்குள் நாடு மீண்டும் சிக்கிவிடுமா என்பது போன்ற கேள்விகள் எழுகின்றன.

எது எப்படி இருப்பினும் சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதிதானே இந்தச் சமாதான முயற்சிக்ளுக்கு முன்னெடுப்பை மேற்கொண்டதாக பல கருத்தரங்குகளில் கூட்டங்களில் தெரிவித்துள்ளார்.

எனவே சர்வதேச அழுத்தங்களும் சேர்ந்துகொண்டால் அதிக தூரம் விலகிச் செல்ல முடியாது என்பதே உண்மையாகும்.

வடக்கு கிழக்கு மக்கள் சோதனைச் சாவடிகள், பாஸ்முறைகள்- அவமதிப்புக்களை மீண்டும் சந்திக்கத் தயாராயில்லை. பாதைகள் மூடப்படுவதையோ, பொருளாதாரத் தடைகள் மீள்வதையோ அவர்கள் நினைத்துக் கூடப் பார்க்க தயாரில்லை. அவற்றால் அவர்கள் பட்ட வேதனைகளும் சோதனைகளும் கொஞ்ச நஞ்சமல்ல. அமைவ கடந்த ஆட்சிக்காலதிற்கு மாத்திரம் உரியனவல்ல. இருபது வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் மீது ஏற்றப்பட்டு வந்த சுமைகள். அந்தச் சுமைகள் புலிகளைக் காரணங்காட்டி மீண்டும் ஏற்படுத்தப்படுவதையோ அல்லது புதிய சுமைகள் ஏற்படுவதையோ மக்கள் விரும்பவில்லை. எனவே இலங்கை விவகாரத்தில் கூரிய கவனம் செலுத்தும் சர்வதேச சமூகம் உள்ளூர் அரசியல் இராணுவ சக்திகளிடையே முரண்பாடுகள் கூர்மையடைந்து யுத்தத்திற்கு செல்வதற்கு அனுமதிக்கமாட்டா. யுத்தத்தின் அல்லது சமாதானத்தின் தலைவிதி தற்போது உள்ளூர் சக்திகளின் கைகளில் இல்லையென்றே கூறி விடலாம்.

ஏனவே யுத்தத்தால் அழியுண்ட இலங்கையில் இணக்கப்பாட்டு அரசியலே -புரிந்துனர்வு அடிப்படையிலான அரசியலே எதிர்காலத்தின் முக்கிய நிகழ்ச்சி நிரலாக இருக்க முடியும். வரலாறு திரும்பத் திரும்ப அதைத்தான் வேண்டி நிற்கிறது.

மக்கள் ஆட்சிமாற்றத்தினூடாகவும் இணக்கப்பாட்டு அரசியலையே எதிர்காலத்தில் வலியுறுத்தலாம். நிகரான தொகையினரான மக்கள் வெவ்வேறு அபிப்பிராயங்களை வெளியிட்டிருப்பது அந்த வகையில்தான்.

எனவே குறிப்பிட்ட எந்தச் சமூகத்தினுள்ளும் அரசியல், இராணுவ ரீதியாகவும் மேலாண்மை செலுத்தும் போக்கும் கடும் அழுத்தத்திற்கு உள்ளாகி காலாவதியாகலாம்.

# அலைமோதும் கடல்மீது ஒரு வாழ்க்கைப் போராட்டம்

இரண்டு நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இரு சாராரும் தமிழர்கள், மீனவர்கள், நீண்டகால குடும்ப உறவுள்ளவர்கள் என்பதை மறுக்க முடியாது. இராமேஸ்வரம் மீனவர்களுக்கும் மன்னார் மீனவர்களுக்கும் நீண்ட காலமாகத் தொடர்புகள் உண்டு. குறிப்பாக தலைமன்னார், பேசாலை போன்ற




மீன்பிடிக் கிராமங்களிலுள்ளவர்கள் இராமேஸ்வரம் தங்கச்சி மடம், பாம்பன் போன்ற மீன்பிடிக் கிராமங்களுடன் மிக நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்து அகதிகளாகத் தஞ்சமடைந்த ஈழத் தமிழ் மக்களை வரவேற்று விருந்தாளிகள் போல அரவணைத்த கரையோர மீனவர்களையும் தமிழக மக்களையும் மறக்க முடியாது.

மன்னார் மீனவர்களின் வலைகள் தொலைந்துவிட்டால் அவற்றை இராமேஸ்வரத்தில் தேடிப் பெற்றதும் இராமேஸ்வரம் மீனவர்களின் வலைகள் தொலைந்துவிட்டால் அவற்றை மன்னாரில் தேடிப் பெற்றதும் வழமையாகியிருந்தது.

தலைமன்னாரிலுள்ள மீனவர்கள் இந்திய கடற்பரப்பிலுள்ள தீடைகளில் கரைவலைத் தொழில் செய்ததும், இராமேஸ்வரம் மீனவர்கள் பேசாலைக் கடலில் தொழில் செய்துவிட்டு கரைக்கு வந்து இளநீர் பருகிவிட்டுப் போனதும் வழமையாக இருந்தது. தமக்குள் பரஸ்பரம் ஒத்துப்போகக் கூடிய அந்தக் காலத்தில் மீன் வளம் தாராளமாக இருந்தது. குறைந்த மீன்பிடிச் சாதனங்களே பயன்படுத்தப்பட்டன. மீன்பிடித் தடைகள் ஏதும் இருக்கவில்லை. மீன் பிடிப்பவர்களின் தொகையும் குறைவாக இருந்தது. பிரச்சனைகள் ஏதும் ஏற்படவில்லை.

ஆனால் தற்போது மீன் வளம் குறைந்துவிட்டதும், நவீன மீன்பிடி உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதும், மீன்பிடித் தொழிலில் அதிக மக்கள் ஈடுபடுவதும் பிரச்சனைகள் உருவாக வழிவகுத்துள்ளது.

இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு வடக்கே உள்ள பீதுரு கடலடித்தளமேடையும் மன்னாருக்கு மேற்கே மன்னார் கடலடித்தள மேடையும் புத்தளத்திற்கு மேற்கே வோஜ் கடலடித்தள மேடையுமாக மூன்று மீன் உற்பத்தி மையங்கள் அமைந்துள்ளன. இத் தளமேடைகளில் (சல்லிகள்) அதிகமான மீன்கள் இனப் பெருக்கம் செய்கின்றன. இத்தோடு மன்னார்த் தீவுக்கும், யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கும் இடையே காணப்படும் கடற்பரப்பில் (சேற்றுக்கடல்) அதிகமாக இறால் உற்பத்தியும், மீன்வளமும் காணப்படுகின்றன.

இராமேஸ்வரத்திலுள்ள இழுவைப் படகுகள் (ரோலர்கள்) இறால் பிடிப்பதையே பிரதான தொழிலாகச் செய்கின்றபடியால் நூற்றுக் கணக்கான இழுவைப் படகுகள் மன்னார்க் கடற்பரப்பிற்குள் தொழிலிலீடுபடுகின்றன.

இராமேஸ்வரத்திலிருந்து வரும் இழுவைப் படகுகள் அசோக் லேலண்ட் இயந்திரம் பொருத்தப்பட்ட அதிக வலுக் கொண்டவை மட்டுமல்ல, பொருத்தப்பட்டிருக்கும் மடி மிக அகலமானதும் நீளமானதுமாக இருக்கும். இம் மடி கடலின் அடிப்பரப்பை உரசிக்கொண்டு செல்வதால் சங்கு, சிப்பி, அட்டை, மீன் குஞ்சுகள் உட்பட கடலின் அடியிலுள்ளவற்றை வழித்துக் கொண்டு செல்கின்றன.

மன்னார் மாவட்டத்தில் பேசாலை மீனவர்கள் மட்டுமே இழுவைப் படகுகளைப் பயன்படுத்துகிறார்கள். இவர்கள் பயன்படுத்தும் படகுகள் குறைந்த வலுவைக் கொண்டதும் சிறிய மடியைக் கொண்டதுமாகும். பேசாலை மீனவர்களின் கண்முன்னாலேயே கரையோரங்களில் கூட இந்திய இழுவைப் படகுகள் தொழில் செய்வதைப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

இப் பகுதியில் அதிக வலுக்கொண்ட இந்திய இழுவைப் படகுகள் தொழிலிலீடுபடுவதால் கடலில் வலை போட்டு மீன் பிடிக்கும் பெரும்பான்மையான மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மன்னார் மீனவர்களின் பல வலைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன அல்லது தொலைந்து போயிருக்கின்றன. இவை மட்டுமல்ல நூற்றுக்கணக்கான இழுவைப் படகுகள் ஒரே நேரத்தில் கடலைக் கலக்குவதால் மீன் வரத்தும் குறைவடைகின்றது.

இராமேஸ்வரம் இழுவைப் படகுகள் மன்னார்க் கடற்பரப்பில் தொழில் செய்வது மன்னார் மீனவர்களைப் பெரிதும் பாதிக்கின்றது என்பது உண்மை என்பதை மறுப்பதற்கில்லை.

## எஸ்.பீ. லெம்பட்

இராமேஸ்வரம் மீனவர்கள் எத்தனையோ பேர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். எத்தனையோ படகுகள் அழிக்கப்பட்டுள்ளன. புலிகள் பலரைப் பல தடவைகள் எச்சரித்துள்ளனர். பல தடவைகள் வழிமறித்து திருப்பியனுப்பியுள்ளனர். தற்போது மீனவர்களே மீனவர்கள் மேல் தாக்குதல் நடத்தவும் கைதுசெய்யவும் முற்படும் அளவுக்குப் பிரச்சனை முற்றியுள்ளது. இது இப் பிரச்சனைக்கு உடனடித் தீர்வு எட்டப்பட வேண்டுமென்பதை உணர்த்துகிறது.

நீண்டகாலமாக இரு நாட்டு அரசாங்கங்களும், தமிழ் அரசியல்வாதிகளும் அக்கறை காட்டாத இப் பிரச்சனை இரு நாட்டவராக இருந்தாலும் இரு சாராரும் தமிழரே என்ற உணர்வோடு அணுகப்பட்டுத் தீர்வை எட்ட வேண்டியது மீனவர் சங்கங்களின் பொறுப்பாகும்.

இரு தரப்பிலும் அப்பாவி மீனவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையைப் புரிந்துகொண்டு இராமேஸ்வரம் மீனவர் சங்கமும், மன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் இணைந்து சமரசமாகத் தீர்வு காண்பதே சிறந்தது.

# சங்கரியின் தலைமைக்கு சவால்

சிவசிதம்பரத்தின் மறைவோடு வெற்றிடமான கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொடுக்கப் புலிகளின் உதவியை நாடி வன்னி சென்ற பலரையும் முறியடித்துவிட்டு தனது ஆதரவாளரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அப் பதவியைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சி தோல்வியடைந்ததிலிருந்து ஆரம்பித்த ஆனந்த சங்கரியின் தனி வழிப் பயணம் இப்போது புலிகளின் அழைப்பைப் புறக்கணித்துவிட்டுத் தன்பாட்டில் வெளிநாட்டிற்குப் பறக்கும் அளவுக்கு முன்னேறியிருக்கிறது.

ஏற்கெனவே சூடுகண்ட பூனையான சிவசிதம்பரம் தனது அந்திம காலத்தில் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் நடந்து கொண்டதால் சர்ச்சைகளில் மாட்டுப்படாது வாழ்க்கையைப் பூர்த்திசெய்துவிட்டார்.

ஆயினும் தமது பழம்பெரும் கட்சியைப் புலிகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கிறார்கள் என்ற ஆதங்கத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினர்கள் பலரும் வெளியிட்டு வருகிறார்கள். அமிர்தலிங்கம் முதல், யோகேஸ்வரன், தங்கத்துரை, சரோஜினி, சிவபாலன், மதிமுகராஜா என்று கூட்டணியின் முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவராகக் கொல்லப்பட்டதை இவர்கள் விரக்தியுடன் நோக்குகின்றனர்.

மாவை சேனாதிராஜாவும், ஜோசப் பரராஜசிங்கமும் கூட்டணியின் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்காகத் தனித்தனியான போட்டியில் இறங்கியிருக்கிறார்கள். சிவசிதம்பரத்தின் மறைவோடு, இன்னும் சொன்னால் அவர் இறப்பதற்கு முன்னதாகவே அடுத்த தலைவர் யார் என்ற போட்டி கூட்டணிக்குள் ஆரம்பமாகியிருந்தது. அப்போதுகூட சங்கரிக்கு நேரடியாகச் சவால் விட்டவர் மாவை சேனாதிராஜாதான். இதேவேளை கூட்டணிக்குள் புலிகளுடன் மிகவும் நெருக்கமான உறவுகளை வைத்திருப்பவர் ஜோசப். கடந்ததற்கு முன்னைய பாராளுமன்றத்தில் இருந்த ஜோசப்பின் தலைமையை அடுத்த பாராளுமன்றத்தில் சங்கரி பறித்துக்கொண்டதால் சங்கரிமீது ஜோசப்பிற்கு உள்ளூறைந்த கோபம். இருவருமே சங்கரியைக் கவிழ்க்க கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

எவ்வாறெனினும் கட்சியின் தலைமைப் பொறுப்பை புலிகளின் அரை மனது விருப்பத்துக்கு மத்தியிலும் தன்வசமாக்கிக்கொண்ட ஆனந்தசங்கரி கட்சிக்குள் ஒவ்வொரு செயற்பாட்டையும் முன்னெடுக்கும்போது ஜோசப் பரராஜசிங்கம், மாவை ஆகியோரின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

கூட்டணிக்குள் ஏராளமான உப கூட்டணிகள் காணப்படுகின்றன. செயலாளர் சம்பந்தன்; அவரும் ஒருவகையில் தனி வழிக்காரர்தான். அவருக்கு ஐ.தே.க.வை விடவும் சந்திரிகாவோடுதான் நெருக்கம் அதிகம். ஆனால் ஏனையவர்களின் நிலைமை வேறு.

ஆனந்தசங்கரி அடிபணியாத சங்கரி என்பதை யாழ். நூலகத் திறப்புவிழா சம்பந்தமான விடயத்திலேயே புலிகள் உணர்ந்திருப்பார்கள். நூலகத்தைத் திறக்கக் கூடாது என்று புலிகள் கடுமையான உத்தரவு பிறப்பித்திருந்த நிலையிலும் யாழ் மாநகரசபை மேயர் செல்லன் கந்தையனை உஷார்படுத்தி நூலகத்தைத் திறந்தாக வேண்டும் என்பதில் உறுதியாகச் செயற்பட்டது மட்டுமன்றி தானே அதைத் திறந்து வைக்கவும் முன்வந்தவர் சங்கரி. இது நிச்சயம் புலிகளுக்கு மிகுந்த சவாலாக அமைந்தது.

புலிகளோடு ஒருமித்துச் செயற்பட்டாலும் புலிகளின் எடுபிடி வேலை செய்யும் பொம்மையாக நடப்பதில் சங்கரிக்கு எப்போதும் உடன்பாடு இருந்ததில்லை.

சரோஜினி யோகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டபோது, நாம் ஒன்றும் உணர்ச்சியற்ற மரங்களல்ல என்று ஆனந்தசங்கரி மிகக் கடும் வார்த்தைகளால் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

சமீபத்தில் ஒரு தடவை, கூட்டமைப்பு எம்.பி.க்கள் தாம் சொல்வதைக் கேட்டு மரியாதையாக நல்ல



பிள்ளைகளாக நடந்து கொள்ள வேண்டும் என்ற பொருள்பட அன்டன் பாலசிங்கம் பேட்டியளித்தபோது, “பாலசிங்கம் பொறுப்புடன் கதைக்க வேண்டும். நாங்கள் யாருடைய எடுபிடிகளும் அல்ல” என்று சங்கரி நேரடியாகப் பதில் கூறியிருந்தார்.

புலிகளின் வழிநடத்தலை ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டாலும் தன்மானத்தை மறந்து கொத்தடிமைகள் போல் கட்சியைப் புலிகளிடம் அடகு வைக்க வேண்டும் என்பதில் சங்கரிக்கு உடன்பாடில்லை. அரசியல் தீர்வை ஈட்டுவதற்கு புலிகளுடன் ஒத்துழைப்பதாக அவர் இதை எடுத்துக் கொண்டாரே அன்றி புலிகளுக்குக் கட்டுப்பட்டதாக தமது கட்சியை தாரைவார்த்துவிட அவர் இணங்கியிருக்கவில்லை. கட்சியின் சுயாதீனம் பற்றிய அவரது கருத்துக்களை, கட்சிக்குள் இருந்து அவருக்கு எதிராக குழிபறிக்கப் பார்த்திருப்போர் பயன்படுத்துகிறார்கள்.


புலிகளுக்கு எதிராக ஆனந்தசங்கரி நடந்துகொள்கிறார் என்று வன்னிக்குச் சென்று வார்த்தைக்கு வார்த்தை தமிழ்ச்செல்வனிடம் கூறி தாங்கள் புலிகளின் நல்ல பிள்ளையாகிவிட மாவையும், ஜோசப்பும் முயற்சிக்கிறார்கள்.

ஆனால் கூட்டணியின் மத்திய கமிட்டிக்குள் சங்கரிக்கு எதிரான நிலைமையைத் தோற்றுவிப்பது இவர்களுக்குச் சுலபமல்ல.

என்னதான் இருந்தாலும் கூட்டணி போன்ற ஒரு கட்சியின் தலைவரை எவ்வித காரணமும் கூறாமல் மாற்றிவிட்டு தமக்கு விருப்பமான ஒருவரை நியமித்துக்கொள்வதில் புலிகளுக்குச் சில சங்கடங்கள் இருக்கின்றன.

1990களில் ஈரோஸ் உறுப்பினர்கள் புலிகளின் பின்பலத்துடன் தேர்தலில் வென்று பின்னர் புலிகளின் உத்தரவின் பேரில் பதவி விலகச் செய்யப்பட்டார்கள்.

ஆனால் அதுபோல் இம்முறை கூட்டமைப்பையும் அந்நிலைக்கு உள்ளாக்க முடியுமா என்பது சந்தேகமே. 1990களில் இருந்த அரசியல் சூழ்நிலையுடன் ஒப்பிடும்போது இப்போதுள்ள சர்வதேசத் அக்கறைகள் குறைந்த பட்ச ஜனநாயகத்தையாவது பேணிக் கொள்ள உதவும் என்றே நம்பப்படுகிறது.



# அதிரடி அய்யாத்துரை

**கூட்டமைப்பு** எம்.பிக்களுக்கு கிளிநொச்சியில 'கிளாஸ்' நடந்ததெல்லோ? எல்லாரும் தங்கள் தங்களுக்கு முக்கிய பொறுப்புக்கள் தந்திருக்கினம் எண்ட புளுகத்தோட திரும்பி வந்திருக்கினம். 'தீர்வெண்ட ஒண்டை அரசாங்கம் வைக்குமாயிருந்தால், அதிலுள்ள பிழையளைக் காட்டி மறுப்புச் சொல்லுறது, முதல்ல உங்களின்ர வாய்களால் வரவேணுமெண்டு விருப்பப்படுகிறோம்' எண்டிருக்கினம். லோ பொயின்ட்களில திறமை காட்டக்கூடிய பொறுப்பெல்லே... சிரமேற்கொண்டு வந்திருக்கினம்.

**“சேர்,** அவர் உங்களைப் பற்றிக் கூடாமல் கதைச்சவர்; பட்டந் தெளிச்சவர்...” எண்டு கோள் சொல்லி மேல மொனிற்றராய் வந்துவிட முயற்சி செய்யிற சாதாரண பள்ளிக்கூடப் பொடியள் மாதிரித்தான் கூட்டமைப்புக்குள்ளயும் இப்ப நடக்குதாம்! தலைமைப் பதவியைப் பிடிக்கிறதுக்குச் சுருக்க வழி இருக்கத் தக்கதாய், கட்சி உறுப்பினர்களோடை மினக்கெட்டுக் கொண்டிருப்பானேன்? எண்ட 'அடித் தெளிவு' கண்டு ஓட்டங்கள் நடக்குதாம்! பாளிமென்ருக் கதிரை... அது முடிஞ்சால் கட்சித் தலைமைக் கதிரை... எண்டு கெந்தி மிதிச்சுப் பாய்ஞ்சு கொண்டிருக்கினம். இடையில மக்களைக் கவனிக்க எங்கே நேரம்?

**மண்ணெண்ணை** அமைச்சர் தன்னட்ட யாரும் 5 கோடி கப்பம் கேக்கையில்லையெண்டு பார்ளிமென்டில ரோசமாப் பேசியிருந்தவரெல்லோ. அதக் கேட்டிட்டு ஒருத்தர் சொன்னார், “அப்ப அவை ஐஞ்சரைக் கோடி கேட்டிருக்கினம் போல...”

**குமாரின்ர** பொடி கஜேந்திரகுமார் எம்.பி.யாயிருந்தும் இம்மை மறுமை விளங்கேல்லைப் போல. இங்க இருந்தபடி ரீ.வி. விவாதங்களில ஏதோ தான் கண்ணால கண்டதச் சொல்லுமாப் போல நினைச்சவாக்குக்குப் பேசித்தள்ளுறார். லைபிரரிக்குப் புத்தகங்கள் ஒண்டும் வரேல்லை, ராக்கைகள் ஒண்டும் அடிக்கேல்லை, 21 மில்லியன் காசு வரக்கிடக்கு, அதாலதான் திறக்கக் கூடா தெண்டனாங்களெண்டு சிங்களவங்களுக்குச் சமா வைக்கிறார். புத்தகங்கள் வந்து 3 லைபிரரிகளில தேங்கிக் கிடக்குது. றாக்கைகள் அடிச்சு முனிசிப்பல் வேம்புக்குக் கீழ நிண்டு காயுது. மேலதிகமா போட்ட லிப்ட்டுக்கும் கன்ரீனுக்கும்தான் 21 மில்லியன் ஒதுக்கிக் கிடக்கேயொழிய லைபிரரிக் காசு முழுக்க வந்து கட்டி முடிச்சும் விட்டாச்சு. ஐயா ஒருக்கால் காலாற நடந்து வந்து லைபிரரியப் பாத்திட்டுப் பேசுங்கோ, இல்லை.... லைபிரேரியன், முனிசிப்பல் கொமிஷனர் யாரிட்டையாவது விசாரிச்சிட்டு வாய் திறவுங்கோ. இல்லாட்டால் பொன்னம்பலம் கஜேந்திரகுமாரெண்ட பெயர் பொய்யன் கஜேந்திரகுமார் எண்டு மாறிப்போகும்.

**திங்கட்கிழமை** குமாரண்ணையின்ர நினைவு தினம் வடமராட்சியில நடந்தது, கேள்விப்பட்டிருப்பியள். அதில நடக்காததை மட்டும் கேள்விப்பட்டிருக்கமாட்டியள். நடக்காதது எது தெரியுமோ? குமாரண்ணையின்ர மனிசிதானாம். ஏன் சொல்லுங்கோ? அவ காரிலையல்லோ ஊர்வலம் போனவ! கணவற்ர ஊர்வலத்துக்கும் கால் கடுக்க நடக்க மாட்டாதவை சனத்தின்ர கஷ்டத்துக்கு கைகொடுக்கவோ போகினம். ம்...?

**போன** திங்கட்கிழமை கச்சேரியில தமிழ் கைதிகளை விடுதலை செய்ய கூட்டம் வைச்சவையெல்லோ. கூட்டத்தில ஒருத்தர் எழும்பிக் கேட்ட கேள்வி நெஞ்சை தொட்டுச்சுதுங்கோ. தன்னை இரண்டெழுத்தார் ஓல்ட் பாக்கில சிறைவச்சிருந்த நேரம் உந்த கூட்டமைப்பாரெல்லாம் எங்கே போனனீங்கள் என்று முகத்துக்கு நேர கேட்டாராம் ஒரு கேள்வி. எல்லாரும் கப்சிப்!

## புறப்பாடு

*அழகிய பூக்களைச் சிந்தும்*
*இதமான சோலைகளே....*

*அஸ்தமனத்தின்*
*செவ்விய கரைகளில்*
*கால்களை வருடி வெட்கும்*
*நாணக் கடல் அலைகளே....*

*நாங்கள் விடைபெறுகிறோம்!*

*கருமேகங்கள் சூழ்ந்தன,*
*இடிகள் இறங்கின,*
*மின்னல் கீற்றெமக்கு*
*வெளிச்சம் காட்டுது.*

*மண்ணை நனைத்ததிங்கு*
*மழையல்ல,*
*மனித ரத்தமே!*

*எங்கள் கடமையை*
*உணர்திய பெருமை*
*எங்கள் எதிரியைச் சாரட்டும்.*

*எமது மக்களைத்*
*தாக்கியதாலே*
*எம்மை விழிப்புற வைத்தான்.*
*எமது தேசத்தைக்*
*கொளுத்தியபோதே*
*புரட்சித் தீயை*
*எம் நெஞ்சில் மூட்டினான்.*
*எம்மைக் குதறி,*
*குருதியைப் பாய்ச்சி*
*தேசப் படத்துக்கு*
*நிறத்தைக் கொடுத்தான்.*
*தெருக்களில் சுட்டுக்*
*கருக்கிய உடல்களில்*
*மரணத்தின் மதிப்பைத்*
*துச்சமாய்க் காட்டினான்.*
*வெற்றுக் கையுடன்*
*பொங்கிய எம்முன்*
*துப்பாக்கியை நீட்டினான்.*

*எங்கள் கடமையை*
*அவனே உணர்த்தினான்.*

*ஓ! சோலைகளே, மலர்களே!*
*எங்கள் சந்ததிகள்,*
*இனிமையான பாட்டுப் பாடி*
*உங்களிடம் வருவார்கள்,*
*காத்திருங்கள்.*

*நாங்கள் விடைபெறுகிறோம்.*
*எங்கள் தோழர்களுடன்*
*கைகோர்த்து,*
*பூமி அதிர,*
*உரத்த கோஷம் எழுப்பியபடி....*

# அற்புதனின் டயரி 4

# உதிரம் படிந்த பாதங்கள்...



தருவது
கொம்ரேட்

(பாதம் -4)

"கருத்து மக்களைப் பற்றிக்கொண்டால் சக்தியாக உருவெடுக்கும்" என்ற கார்ல் மார்க்ஸின் வாசகம் உலகெங்கும் உள்ள புரட்சியாளார்கள் மத்தியில் எப்போதும் நம்பப்படுவது. அற்புதனைப் பற்றிக்கொண்ட கருத்து அவனையே ஒரு சக்தியாக உருவாக்கிவிட்டது என்பது உண்மை. சுகுவின் கருத்துக்களால் கவரப்பட்ட அவன் பின்னர் அடிக்கடி சுகுவைச் சென்று சந்திக்க ஆரம்பித்தான். அந்த உறவு அவனை வெறும் மாணவர் போராட்டங்களுடன் மட்டுப்படுத்தி வைக்கவில்லை. அவனுள் இருந்த புரட்சிகர உணர்வும் போர்க்குணமும் உற்சாகமும் செயலாற்றலும் அவன் ஒரு சிறந்த புரட்சிக்காரனாகத் தகுந்தவன் என்பதை மிக ஆரம்பச் சந்திப்புக்களிலேயே சுகுவுக்கு உணர்த்தியது. அவனை சுகு விரைவிலேயே தான் செயற்பட்ட தலைமறைவு இயக்கத்தோடு தொடர்புபடுத்தினான்.

அற்புதனின் முழுப் பெயர் அற்புதராஜா. அவன் போராட்டத்தில் இணைந்துகொண்ட பின்னர் தனது ஸ்தாபனப் பெயரை ரமேஷ் என மாற்றிக்கொண்டான். தலைமறைவு இயக்கங்களில் பாதுகாப்புக் கருதி வேறு பெயர்களையே பாவிப்பர்.

சுகுவின் சந்திப்பு அவனது வாழ்வில் ஒரு பெரும் திருப்புமுனையாக இருந்தாலும் அவன் அதற்கு முன்னரே போராட்ட ஈடுபாடு கொண்டிருந்தான். அவை ஒரு முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட, வழிப்படுத்தப்பட்ட செயற்பாடுகளாக இல்லாவிட்டாலும் அவனுள் நிறைந்திருந்த தன்னார்வத்தினாலும் போர்க் குணாம்சத்தாலும் உந்தப்பட்டு உதிரியான, தன்னளவிலான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தான்.

அற்புதன் நல்லூர் முடமாவடிப் பகுதியில் வசித்து வந்தான். 78ம் ஆண்டளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் 9ம் வகுப்பில் சேர்ந்த அவன் பின்னர் 80ஆம் ஆண்டில் உயர்தர வகுப்புக்காக யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் சேர்ந்தான். அப்போதுதான் வைத்தீஸ்வராக் கல்லூரியின் சார்பில் மாணவர் ஒன்றியத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டபோது சுகுவுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு அவன் போராட்ட இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டான்.

எனினும் அவன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் படிக்கும்போதே தீவிரவாத செயற்பாடுகளில் நாட்டம் காட்டி வந்தான். அப்போது தலைமறைவாக இயங்கி தீவிரவாதத்தில் ஈடுபட்டுவந்த இன்பம் செல்வம் ஆகியோருடன் செயற்பட்ட கோப்பாயைச் சேர்ந்த பரமேஸ்வரனுடன் அவனும் சில நண்பர்களும் தொடர்பு வைத்திருந்தார்கள். இவ் இன்பம், செல்வம், பரமேஸ் ஆகியோர் 1981ல் பொலிஸாரால் அதிர்ச்சி தரும் விதத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள்.

ஆரம்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் மேடைப் பேச்சுக்களால் உந்தப்பட்டு வீதி மதில்களில் தமிழீழம் வாழ்க என்று எழுதிய அற்புதன், பின்னர் அவர்களின் பேச்சுக்கும் செயலுக்கும் இடையிலிருந்த வித்தியாசத்தையும், போலித்தன அரசியலையும் கண்டு மிகக் கடுமையாக அவர்களை விமர்சித்தான். அவனது பாடசாலை நாட்களில் அவன் புத்தகங்கள் வாசிப்பதில் பெரும் ஈடுபாடு காட்டினான். அவனுடன் சேர்ந்து அவனது நண்பர் கூட்டமும் இந்த வாசிப்புப் பழக்கத்திற்குக் கவரப்பட்டது. அவன் புரட்சிகர நூல்கள், கவிதைகள், சுதந்திரப் போராட்ட வரலாறுகள் என்பவற்றை மட்டுமின்றி, கல்கி, சாண்டில்யன், கலைஞர் கருணாநிதி ஆகியோரின் சரித்திரக் கதைகளையும் பேரார்வத்துடன் வாசிப்பான். இதில் அவன் அவர்களது எழுத்து வன்மையையும், நுட்பத்தையும் ஆர்வத்துடன் கிரகித்தான். இந்த ஈடுபாட்டால் ஏற்பட்ட அடித்தளம்தான் பின்னாளில் அவனுக்கு தான் சார்ந்த புரட்சிகர இயக்கத்தில் சித்தாந்த அறிவில் தேர்ச்சி பெற வைத்ததுமல்லாமல் யாவரைம் வியக்க வைக்கும் ஈடு இணையற்ற எழுத்தாளனாகவும் அவனை மிளிரச் செய்தது.

அவனது வீட்டினருகேதான் 1975களில் தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்த இன்ஸ்பெக்டர் பத்மநாதனின் வீடு இருந்தது. அற்புதன் நண்பர்களுடன் சைக்கிளில் அந்த வீட்டைக் கடந்து செல்லும்போது பயமேதுமின்றி, 'துரோகி ஒழிக' என்று கத்திவிட்டுச் செல்வான். கூட்டணியினரால் அப்போது மேடைகளில் துரோகியெனப் பேசப்பட்ட யாழ் மேயர் துரையப்பாவின் வீட்டுக்கு முன்னாலும் சென்று 'துரோகி ஒழிக' என்று கோஷம் போட்டுவிட்டுச் செல்வான். அவனிடம் இத்தகைய துடிப்பும் போர்க் குணாம்சமும் மட்டுமன்றி மிகுந்த நகைச்சுவை உணர்வும் நடிப்பாற்றலும் குடிகொண்டிருந்தது. அவன் எதிரணிகளை விமர்சிக்கும்போது, அவற்றில் அவனது தர்க்கமும் கருத்தும் மட்டுமன்றி மிகுந்த நகைச்சுவை கலந்த கிண்டல்களும் தொனிக்கும்.

அற்புதனின் அன்றைய கால நெருங்கிய நண்பர்களான றோகன், றெக்ஸ் ஆகியோரும் அற்புதனுடன் சேர்ந்து சுகுவை அடிக்கடி சென்று சந்திக்கத் தொடங்கினர். சுகுவின் கருத்துக்கள் அற்புதனுக்கும் அவனது நண்பர்களுக்கும், உதிரியான தீவிரவாதத்தின்பாலிருந்த கவர்ச்சியை நீக்கி, ஒரு புரட்சிகர ஸ்தாபன வடிவத்தையும் அதன் தத்துவார்த்த வழிகாட்டலையும் பற்றிய புதிய சிந்தனைகளை ஏற்படுத்தின.

*சுகுவின் கருத்துக்கள் அற்புதனுக்கும் அவனது நண்பர்களுக்கும், உதிரியான தீவிரவாதத்தின்பாலிருந்த கவர்ச்சியை நீக்கி, ஒரு புரட்சிகர ஸ்தாபன வடிவத்தையும் அதன் தத்துவார்த்த வழிகாட்டலையும் பற்றிய புதிய சிந்தனைகளை ஏற்படுத்தின.*

ஒருபுறம் அற்புதன் இவ்வாறு சுகுவுடன் உறவுகளை வளர்த்துக்கொண்டிருந்தபோது மறுபுறம் அவர்கள் ஆரம்பித்த மாணவர் ஒன்றியத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான வேலைகள் மும்முரமாக நடைபெறத் தொடங்கின. டேவீட்சனின் தலைமையில் ஒரு பிரமாண்டமான பொதுக்கூட்டமொன்றை நடத்துவதற்கான திட்டங்கள்



வகுக்கப்பட்டன. அதற்கான தயாரிப்புகளை மேற்கொள்வதற்காக அடுத்த கூட்டமொன்றை விரைவில் நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

இதற்கமைய அற்புதனும் அடுத்த கூட்டத்தை நடத்துவதற்கான பிரசார வேலைகளில் மும்முரமாகச் செயற்பட்டான். பாடசாலைகள்தோறும் சைக்கிளில் சென்று மாணவர் தலைவர்களைச் சந்தித்து விளக்கி, உற்சாகப்படுத்தி, கூட்டத்திற்கான அழைப்புக்களைக் கொடுக்கும் பணியில் டேவீட்சனுடன் அற்புதனும் அவனது நண்பர்களும் இணைந்துகொண்டனர்.

அந்தக் கூட்டம் இரகசிய ஸ்தாபனத்தில் சுகுவுடன் சேர்ந்து இயங்கி வந்த கமல் எனப்படுபவனால் அவரது மைத்துனனான வாகீசன் என்பவரது வீட்டில் ஒழுங்கு செய்யப்பட்டது. வாகீசனின் வீடு யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் அமைந்திருந்தது.

அந்தக் கூட்டம் - மாணவர் ஒன்றியத்தின் இரண்டாவது கூட்டம், டேவீட்சன் தலைமையில் நடைபெற்றது. ஏற்கெனவே மாணவர் ஒன்றியத்தின் முதலாவது கூட்டத்தில் யாவரும் கருத்தொருமைப் பட்டிருந்ததனால் இக் கூட்டத்தில் அதிக விளக்கங்கள் அவசியமாக இருக்கவில்லை. முக்கியமாக இங்கு பேசப்பட்ட விடயங்கள் பொதுக்கூட்டத்தை ஒழுங்கு செய்வது பற்றிய தயாரிப்புக்கள் பற்றியே.

மாணவர்களது போராட்டமாக இருந்தாலும் இது ஒரு சமூகப் போராட்டமென்ற உணர்த்தலை ஏற்படுத்த வேண்டிய அவசியம் பற்றி அங்கு டேவீட்சனால் எடுத்துரைக்கப்பட்டது. அதனால் இப் பொதுக்கூட்டத்தில் வெறும் மாணவர்கள் மட்டுமன்றி, மாணவர் போராட்டத்துக்கு ஆதரவாக, ஆசிரியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், தொழிலாளர், மதத் தலைவர்கள், பொது ஸ்தாபனங்கள், பொதுமக்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரையும் திரட்ட வேண்டிய அவசியமும், அதற்காக, அவர்கள் மத்தியிலும் ஆதரவு கோரும் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளமையும் அங்கு விளக்கப்பட்டது. அத்தோடு பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதற்கான வேலைத் திட்டங்கள் பற்றியும், வேலைப் பங்கீடு பற்றியும் விவாதிக்கப்பட்டுப் பொறுப்புக்கள் மாணவர்களிடையே பகிரப்பட்டது.

இந்தக் கூட்டத்தின்போது மிகுந்த அக்கறையும் உற்சாகமும் காட்டிய மற்றொரு நபர் அங்கு அறிமுகமானார். அவன்தான் பின்னாளில் தாஸ் என்ற பெயரில் ஸ்தாபன வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முக்கிய பங்காற்றிய சமரக்கண்ணன். சமரக்கண்ணன் அப்போது ஒரு ஆசிரியராக டியூட்டரி நடத்திக்கொண்டிருந்தான். அவனது செயற்பாட்டு ஆர்வமும் ஈடுபாடும் அற்புதனுக்கு மிகவும் பிடித்திருந்தன. பின்னர் சிலகாலமாக அற்புதன் தாஸின் வதிவிடத்தையே தனது தலைமைறைவு உறைவிடமாகக் கொண்டிருந்தான்.

வாகீசனின் வீட்டில் நடந்த கூட்டமும் வெற்றிகரமாக முடிவடைந்தது. அடுத்ததாக பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கான வேலைகளில் இறங்கலாமென டேவீட்சன் முடிவு செய்தான்.

இப்படி மாணவர்களால் ஒழுங்கு செய்யப்படும் ஒரு பொதுக்கூட்டம் எவ்வளவுதூரம் வெற்றியளிக்கும் என்ற சந்தேகம் அப்போது பலருக்கு இருந்தது. அன்றைய காலத்தில் அரசியல்வாதிகளே பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்பவர்களாக இருந்தனர். இவ்வாறான மாணவர் பொதுக்கூட்டமொன்று முன்னெப்போதும் நடந்திருக்கவில்லை.

இது போன்ற முற்றிலும் புதிய பொதுக்கூட்டமொன்றை மாணவர்கள் ஒழுங்கு செய்தால் அதற்கு பொதுமக்கள் எவ்வளவுதூரம் திரள்வார்கள் என்பது பலருக்குச் சந்தேகமாக இருந்தது. சூடான அரசியற் பேச்சு இல்லாமல் வெறும் மாணவர்கள் பிரச்சினையைக் கேட்பதற்கு யார் ஆர்வம் காட்டப் போகிறார்களென இவர்கள் எண்ணினர். அத்தோடு இத்தகைய கூட்டங்களை நடத்த முற்படும்போது ஏற்படும் பொலிஸாரின் கெடுபிடிகளை மாணவர்களால் தாக்குப்பிடிக்க முடியுமா என்பதும் அவர்களுக்கிருந்த மற்றுமொரு கேள்வி.

இவ்வாறான கூட்டத்தை நடத்த வேண்டுமெனில் ஏதேனும் ஒரு சிறிய மண்டபத்துக்குள் நடத்தி முடித்துவிட்டால் குறைந்தளவு சனத்துடனாவது கூட்டத்தை ஒப்பேற்றிக்கொள்ள முடியுமெனச் சிலர் அபிப்பராயப்பட்டார்கள். ஆனால் டேவீட்சனும் அற்புதனும் அதனை நிராகரித்தனர். கூட்டணிக்காரரின் அரசியல் கூட்டங்களை விஞ்சிய அளவில் நம்மாலும் பொதுக்கூட்டமொன்றை நடத்திக் காட்ட முடியுமென அவர்கள் அடித்துக் கூறினர். அதானால் எந்த ஒரு மண்டபத்திலுமல்ல, யாழ். திறந்தவெளி அரங்கிலேயே அக் கூட்டத்தை நடத்திக் காட்டுவோம் என அவர்கள் சூளுரைத்தனர். இது அதிகப் பிரசங்கித்தனமாக முடிந்துவிடப் போகிறதெனச் சிலர் அஞ்சினர். ஆனால் அவர்களோ கூறியபடியே செய்தும் காட்டினர்.

ஆம்! அவ்வாறே யாழ்ப்பாணத்தின் திறந்தவெளி அரங்கில் யாவரையும் திகைக்க வைத்த பிரமாண்டமான பொதுக் கூட்டமொன்றை டேவீட்சன் தலைமையில் மாணவர் ஒன்றியம் நடத்தியது. அது ம்ாணவர்களுக்கு ஒரு பேரெழுச்சியாக அமைந்தது. அங்கேதான் டேவீட்சனது சரமாரியான பேச்சாற்றலை யாழ்ப்பாணம் கண்டது. மேடைப் பேச்சுக்குத் தம்மை விட்டால் யாருமில்லையென்று அன்று இறுமாந்திருந்த கூட்டணித் தலைவர்களுக்கு அது ஒரு சிம்ம சொப்பனமாக விளங்கியது.

*பாதங்கள் இன்னும் படியும்...*

# தனியான முஸ்லிம் பிரதிநிதித்துவம்! புலிகளின் நிலைப்பாடு என்ன?

கடந்த வாரம் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம்களையும் தமிழ் அரசியலோடு அரவணைத்துச் செல்ல வேண்டும் எனக் கேட்டிருந்தனர்.

அதற்குப் பதலளித்த அன்டன் பாலசிங்கம் தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடில்லாமல் தமிழ் பேசும் சமூகம் என்ற அடிப்படையில் முஸ்லிம்களை "அரவணைத்துச்" செல்வதில் தமது தரப்புக்கு ஆட்சேபனை இல்லை என்று பதில் கூறியிருந்தார்.

**முஸ்லிம் குழு எந்தச் சந்தர்ப்பத்தில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என்பதை அரசும் புலிகளுமே தீர்மானிக்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர் குழுவில் உள்ள எரிக் சொல்ஹெய்ம் கனேடிய வானொலி ஒன்றுக்குத் தெரிவித்திருக்கிறார்.**

பேச்சுவார்த்தையில் தனியான பிரதிநிதிதுவம் அதாவது தனியலகு, தனி மாகாணம், முஸ்லிம் பகுதிகளுக்கென்று தனியான அபிவிருத்தி நிதி, முஸ்லிம்களிடம் வரி அறவிடப்படுகிறது என்று இன அடையாளத்தை முன்னிறுத்திய முறைப்பாடுகள் என்று தனியாக எதுவுமின்றி தமிழர் தரப்புடன் ஒன்றிணைந்து செயற்படத் தயார் என்றால் முஸ்லிம்களை அரவணைத்துச் செல்வதில் புலிகள் பின்நிற்கப் போவதில்லை.

அமைச்சர் ரவூப் ஹகீம், திரு மதி ஃபேரியல் அஷ்ரப் தலைமையிலான முஸ்லிம் எம்.பி.க்கள் குழு ஒன்றுடனான சந்திப்பில், சமாதானப் பேச்சுக்களில் தனியான முஸ்லிம் தரப்பை அனுமதிப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான நாள் முதல் படிப்படியாக முஸ்லிம் தரப்பிலிருந்து வலுப்பெற்று வந்த தனியான பிரதிநிதித்துவம் குறித்த கோரிக்கை இறுதியில் முஸ்லிம் அரசியல் வட்டாரங்கள் அரசாங்கத்திற்குச் சிவப்பு சிக்னல் கொடுக்கும் அளவு சீரியஸ் பிரச்சனையாக மாறிய நிலையிலேயே பிரதமரின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இனப் பிரச்சனைக்கான இறுதித் தீர்வு வடிவத்தைத் தயாரிக்கும்போது அதில் முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கருத்துக்களிலும் கவனம் செலுத்தப்படும் என்று அன்டன் பாலசிங்கம் கூறியிருந்தார்.

ஆனால் தீர்வின் இறுதி வடிவமான, அதிகாரப் பரவலாக்கல் குறித்த பேச்சுக்களின் போது மாத்திரமன்றி அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் முஸ்லிம்களும் இடம் பெற வேண்டும் என்றே பரவலான கோரிக்கை விடுக்கப்பட்டுவந்தது.

கல்முனையைச் சேர்ந்த ஒரு பாடசாலை அதிபரின் கருத்து இது.

"இறுதித் தீர்வை எட்டுவதற்கு வருடக் கணக்கில் செல்ல வாய்ப்பிருக்கிறது.

வரி அறவீடுகள், காணிப் பிரச்சனைகள், உடமைகள் அபகரிப்பு, ஆட்கடத்தல், இடப்பெயர்வு, சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டமை என்று முஸ்லிம்கள் ஏற்கனவே பல விதமான பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள்.

அதனால் மீண்டும் பல மாதங்களின் பின்னர் அல்லது வருடங்களின் பின்னர் நடக்கும் இறுதித் தீர்வு குறித்து பேச்சுக்கள் வரும் வரை தமது பிரச்சனைகளை மறந்து விட்டிருக்கும் பொறுமை நேரடியாகப் பாதிப்புகளை எதிர்கொள்ளும் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு இருக்கும் என நம்ப முடியாது."

இத்தகைய கருத்தைக் கிழக்கில் வாழும் பெரும்பாலான முஸ்லிம்கள் கொண்டிருக்கிறார்கள். பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு கட்டத்திலும் தமது பிரச்சனைகள் தொடர்பாகப் பேசப்பட வேண்டும், அதற்கான தனியான முஸ்லிம் பிரதிநிதித்துவம் இடம்பெற வேண்டும் என்று அழுத்தம் எழ ஆரம்பித்தது. சமூக, பல்கலைக் கழக, தொழிற்துறை மட்டங்களில் இருந்து வந்த அதிக பட்ச அழுத்தம் காரணமாக இது விடயத்தில் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு முஸ்லிம் அரசியல் தலைமை தள்ளப்பட்டது.

தனியான முஸ்லிம் பிரதிநிதித்துவம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக, இது வரை அரசியல் அரங்கில் எதிரிகளாக நடந்து கொண்ட ஃபேரியல் அஷ்ரப், ரவூப் ஹக்கீம் குழுவினருக்கு ஒன்றாகச் சென்று பிரதமரைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. தொடர்ந்தும் தமது அரசியல் கசப்புணர்வுகளை வெளிக்காட்டிக்கொண்டு, சமாதானப் பேச்சுக்களில் அரசாங்கத்தின் பேச்சாளராக நாடு நாடாகச் சுற்றிக்கொண்டிருந்தால் முஸ்லிம்களிடமிருந்து தான் அன்னியப்படுத்தப்படலாம் என்ற பயம் அமைச்சர் ஹக்கீமுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

திடீரெனத் தனது நிலைப்பாட்டைக் கடுமையாக்கிய அவர், சக முஸ்லிம் எம்.பி.க்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு இத்தகையதொரு சந்தர்ப்பத்துக்கான அங்கீகாரத்தை அரசாங்கத்திடமிருந்து பெற்றிருக்கிறார்.

ஆனால் மத்தியஸ்தர்களான நோர்வே தரப்பினரிடமிருந்து வெளிப்பட்டிருக்கும் கருத்தை நோக்குகையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குகொள்வதும் பேச்சுவார்த்தை மேசையில் சுதந்திரமாகத் தமது கருத்துக்களை முன்வைப்பதும் அத்தனை இலகுவான காரியம் இல்லை என்பது போல் தோன்றுகிறது.

முஸ்லிம் குழு எந்தச் சந்தர்ப்பத்தில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என்பதை அரசும் புலிகளுமே தீர்மானிக்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர் குழுவில் உள்ள எரிக் சொல்ஹெய்ம் கனேடிய வானொலி ஒன்றுக்குத் தெரிவித்திருக்கிறார்.

"முஸ்லிம் சமூகத்துடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிப் பேசும் போது முழு அளவிலான முஸ்லிம் குழு பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என்பது கவனத்தில் எடுக்கப்படும்" என்று அரசும்-புலிகளும் இணங்கியிருப்பதாக எரிக் சொல் ஹெய்ம் மேலும் தெரிவித்துள்ளார்.

அதாவது இனப் பிரச்சனைத் தீர்வில் முஸ்லிம் தரப்பு கட்டாயமானதல்ல. அரசும், புலிகளும் இணங்கினால் ஒரு கட்டத்தில் முஸ்லிம்களையும் பேச்சுவார்த்தையில் இணைத்துக் கொள்ளலாம் என்று எரிக் சொல்ஹெய்ம் கூறுகிறாரா எனக் கேள்வி எழுப்புகிறார் ஒரு முஸ்லிம் எம்.பி.

அப்படியாயின் கடந்த 5 சுற்றுப் பேச்சுக்களிலும் முஸ்லிம்கள் தொடர்பான விடயங்கள் எதுவும் பேசப்படவில்லையா?

எரிக் சொல்ஹெய்ம் சொல்வது போல் பேச்சுவார்த்தை அந்த "முக்கியமான கட்டத்தை" அடையும் வரை முஸ்லிம்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடரும் என்று அர்த்தம் கொள்ள முடியுமா? இப்படிக் கேட்கிறார் கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மைப் பலத்தை பாதுகாக்கவேண்டும். அதற்கு முஸ்லிம் எம்.பி.க்களின் உதவி தேவை. அரசாங்கம் நாளுக்கு நாள் ஸ்திரமற்ற நிலையை நோக்கி நகர்கிறது. விரைவில் தேர்தல் வரலாம். ஆகலால் முஸ்லிம் தரப்பின் முக்கிய கோரிக்கைகளை நிராகரித்து அவர்களுடன் மனக் கசப்பை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. குறிப்பாக அவர்களது ஆதரவு மறுதரப்பான பொது ஜன ஐக்கிய முன்னணிக்குக் கிடைக்க வழி செய்துவிடக்கூடாது." இந்த அச்சங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கலாம். ஆனால் புலிகளுக்கு இது பற்றியெல்லாம் கவலையில்லை.

அன்டன் பாலசிங்கம் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களிடம் கூறியிருக்கும் கருத்து மீண்டும் ஆரம்ப நிலைக்கு முஸ்லிம்கள் தொடர்பான பிரச்சனையைக் கொண்டு சென்றிருக்கிறது.

"முஸ்லிம்கள் இஸ்லாமியத் தமிழர்களாக வாழும் பட்சத்தில் அவர்களையும் நமது தேசத்தில் அனுமதிப்போம்" இது மிகப் பழைய கருத்து. முஸ்லிம் சார்பு இனத்துவ கருத்தியல் சுயநிர்ணயம், தன்னாட்சி என்று சிந்திக்கப்படும் நிலையில் பாலசிங்கம் மீண்டும் பழையதையே கூறியிருக்கிறார் என்பதே முஸ்லிம் அரசியல் வட்டாரங்களின் கருத்து.

"தமிழர்-சிங்களவர் என்று" நாம் சிந்தித்துப் பார்க்கவில்லை நாம் எல்லோரும் இலங்கையர்களாக வாழ்வோம் என்று அரசாங்கம் கூறுவதைப் புலிகள் எப்படி நோக்குகிறார்களோ அதே போல்தான்-தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக வாழலாம் என்பதை முஸ்லிம்கள் நோக்குகிறார்கள்" எனக் கூறுகிறார் ஒரு பல்கலைக் கழகப் பேராசிரியர்.

**எம்.பி.எம். பர்ஸான்**

# "விலைமதிக்க முடியாத காட்டிக் கொடுப்பு"

சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்ப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்துவதால் பயங்கரவாதத்தை ஒடுக்கும் தனது முந்தைய திட்டத்தை ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் மறந்துவிட்டார் என்ற அமெரிக்க எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்களை முறிடிக்கப் போதுமான வெற்றி ஒன்றை புஷ் கடந்த வாரம் ஈட்டிக்கொண்டார்.

அல் கைதா இயக்கத்தின் மூன்றாவது இடத்தில் உள்ள தலைவர் எனக் கருதப்படும் காலித் ஷேக்முகமத் அமெரிக்க-பாகிஸ்தான் கமாண்டோக்கள் கூட்டாக நடத்திய சுற்றிவளைப்பொன்றின்போது பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரில் உள்ள வீடொன்றில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

அமெரிக்கா மீது செப்டம்பர் 11ம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் அந்த நாட்டு புலனாய்வு அதிகாரிகளினால் பல மில்லியன் டாலர் விலை நிர்ணயம் செய்யப்பட்டவர்களுள் இந்தக் காலித் ஷேக் முகம்மதும் ஒருவர்.

அப்போது இவர் குறித்து மிகக் குறைந்தளவிலான தகவல்கள் மாத்திரமே எஃப்.பி.ஐ.வசமிருந்தது.

ஒசாமா பின்லேடன் அல் கைதா அமைப்புக்குத் தலைமை வகிக்கின்ற போதிலும் அமெரிக்க நகரங்கள் மீதான தாக்குதலைத் திட்டமிட்டுச் செயற்படுத்தியது இந்த காலித் ஷேக்தான் என வாஷிங்டன் அதிகாரிகள் திடமாக நம்புகின்றனர்.

இவர் தொடர்பான பயன் மிக்க தகவல் ஒன்றை வழங்கும் நபருக்கு இரண்டரைக் கோடி அமெரிக்க டாலர். (நம் நாட்டு மதிப்பில் சுமார் 240 கோடி ரூபா) வழங்கப்படும் எனவும் பென்டகன் அறிவித்திருந்தது.

***பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி ஒன்றிலிருந்து முகமட் ஓமர் அப்துல் ரஹ்மான் என்ற தலிபான் வீரர் ஒருவர் சில காலங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார். இவர் அவ்வியக்கத்தின் முக்கியஸ்தர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த வர்.காலித் ஷேக்கைத் தொலைபேசியூடாக தொடர்புகொள்ளும் முறை இந்த ஓமர் ரஹ்மானுக்குத் தெரிந்திருந்தது.***



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி ஒன்றிலிருந்து முகமட் ஓமர் அப்துல் ரஹ்மான் என்ற தலிபான் வீரர் ஒருவர் சில காலங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார். இவர் அவ்வியக்கத்தின் முக்கியஸ்தர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்.காலித் ஷேக்கைத் தொலைபேசியூடாக தொடர்புகொள்ளும் முறை இந்த ஓமர் ரஹ்மானுக்குத் தெரிந்திருந்தது. இவரை லண்டனில் மிகவும் பாதுகாப்பான இடமொன்றில் வைத்திருந்த எஃப்.பி.ஐ.அதிகாரிகள் காலித் ஷேக்குடன் தொடர்பை ஏற்படுத்துமாறு ஓமரை நிர்ப்பந்தித்தனர்.

இத்தகைய தொலைபேசி உரையாடலின் ஒலி அலைகளைச் செய்மதி மூலம் கணித்து ஷேக் காலித் தங்கியிருந்த வீட்டைச் சரியாகக் கண்டுபிடித்தது எஃப்.பி.ஐ. எகிப்து நாட்டவரான ஓமர் ரஹ்மான் கைதுசெய்யப்பட்ட ஆரம்ப நாட்களிலேயே காலித் ஷேக் பாகிஸ்தானில் அடையாளம் காணப்படாத இடமொன்றில் தங்கியிருக்கும் தகவலை விசாரணையாளர்களிடம் கூறிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலித் ஷேக் குறித்த அதிக அளவிலான தகவல்களை இலங்கை எழுத்தாளர் ஒருவரது நூலில் இருந்து எஃப்.பி.ஐ. (அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவு) பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சில காலம் இலங்கையில் பத்திரிகையாளராகப் பணியாற்றிய றொஹான் குணவர்தன தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

இவர் அல்கைதா இயக்கத்தின் செயற்பாடுகள் குறித்துப் பல சர்ச்சைக்குரிய தகவல்கள் அடங்கிய நூல் ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கிறார். இந்தப் புத்தகத்தில் அல் கைதா அமைப்பின் நிர்வாக ஒழுங்கமைப்பு, முக்கிய தலைவர்கள், அந்த இயக்கத்திற்குப் பணம் வந்து சேரும் வழிவகைகள் போன்ற ஏராளமான தகவல்கள் காணப்படுகின்றன.

காலித் ஷேக் கைதுசெய்யப்படுவதற்கு றொஹான் குணவர்தனவின் நூலில் இருந்து பெறப்பட்ட முக்கிய தகவல்கள் உதவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலித் ஷேக் கைதுசெய்யப்பட்டதும் அமெரிக்கப் பத்திரிகைகள் பல றொஹான் குணவர்தனவின் பேட்டிகளைப் பிரசுரித்துள்ளன. சீ.என்.என். சேவை தனது முக்கியமான நிகழ்ச்சி நேரங்களில் இவரது பேட்டிகளை ஒளிபரப்பியது.

ஒசாமா பின்லேடனுடனும், முல்லா முகமட் ஓமரிடமும் தொடர்புகளை வைத்துக்கொண்டு வெளியுலகில் வாழும் ஓரிருவரில் காலித் ஷேக் அடங்குவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அல் கைதா அமைப்புக்கு நிதி சேகரித்துக் கொடுப்பவர் இவர்தான் என உறுதியாக நம்பப்படுகிறது.

குவைத்தில் பிறந்த காலித் ஷேக் அரபி, ஆங்கிலம், உருது, பலுக் மொழிகளில் சரளமாகப் பேசக் கூடியவர்.

1986ம் ஆண்டு அமெரிக்காவின் வட கரோலினா விவசாய தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். அதன் பின்னர் தனது பெற்றோர் சகிதம் பாகிஸ்தானில் குடியேறிய இவர் "அரப் சேர்க்கில்" (Arab Circle) என்ற அமைப்பை ஒசாமா பின்லேடனுடன் இணைந்து நிறுவினார். அன்று தொடக்கம் இவர் படிப்படியாக அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்.

உலகம் முழுவதும் உள்ள அல் கைதா உறுப்பினர்களுடன் இவர் தொடர்புகளைக் கொண்டிருப்பதாக அமெரிக்கா கருதுகிறது. இவர் கைதுசெய்யப்பட்ட போது கைப்பற்றப்பட்ட கம்பியூட்டர்கள், சீடிக்கள், தொலைபேசிகள் போன்றவற்றை சீ.ஐ.ஏ. அதிகாரிகள் ஆராயத் தொடங்கியுள்ளனர்.

இவர் கைதுசெய்யப்படுவதற்குக் காரணமாக இருந்த எகிப்தியரைக் கொலை செய்யும் நபருக்குப் பல கோடி டாலர் சன்மானம் வழங்கப்படும் என்று ஒசாமா பின்லேடன் அறிவித்துள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது.



நாமம்பல் கோடியொா் உண்மைக் குளவென்று
நான்மறை கூறிடுமே- ஆங்கோா்
நாமத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றந்
நான்மறை கண்டிலதே.

சுப்பிரமணிய பாரதியாா்-



## பாப்பா முரசு சிறுகதை

## ஷாஜகான் கொடுத்த பரிசு!

தாஜ்மஹாலைக் கட்டியவர் ஷாஜகான் என்பது உங்க எல்லாருக்கும் நல்லா தெரியும் இல்லையா? சக்கரவர்த்தி ஷாஜகானுக்கு வேட்டையாடுவதென்றால் கொள்ளை விருப்பம்.

ஒரு நாள் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தார் ஷாஜகான். அப்போது அழகிய மான் ஒன்றைக் குறிவைத்துத் துரத்திக் கொண்டு சென்றார். மான் வாயு வேகத்தில் ஓடியது. ஷாஜகானும் விடாமல் அந்த மானைத் துரத்தினார்.

இதனால் காட்டுக்குள் வெகு தூரம் தனியாக வந்துவிட்டார். அருகில் வேலையாட்கள் இல்லை. உச்சி வெயில் மண்டையைப் பிளந்ததால் தாகம் எடுத்தது.

தாகத்தால் நாக்கு வறண்டு போன ஷாஜகான் நீர் நிலைகள் எங்காவது இருக்காதா என்று ஏங்கினார். எங்குமே காணோம். நொந்து போன ஷாஜகான் மனிதர் யாராவது தென்படமாட்டார்களா என்று நினைத்தபடி நாலா பக்கமும் பார்த்தபடியே குதிரையை வேகமாகச் செலுத்தினார்.

அங்கே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான் சிறுவன் ஒருவன்.

அவனிடம் சென்று "தம்பி! ரொம்ப தாகமா இருக்கு. தண்ணீர் இருக்கா?" என்றார். உடனே ஆடுகளைப் பிடித்துப் பாலைக் கறந்து பாதுஷாவிடம் கொடுத்தான் சிறுவன். ஆசையுடன் அதைக் குடித்தார் ஷாஜகான். அவரது தாகமும், களைப்பும் போன இடம் தெரியவில்லை.



அந்த ஏழைச் சிறுவனுக்கு ஏதாவது கொடுக்க நினைத்தார். ஆனால், அவரிடம் அப்போது கையில் ஒன்றுமே இல்லை. எனவே, ஒரு இலையை எடுத்து அதில் ஒரு அடையாளத்தை வரைந்து "வெள்ளிக்கிழமை தோறும் டில்லியில் உள்ள மசூதியில் தொழுகைக்கு வருவேன். அப்போ என்னிடம் கொண்டு வந்து கொடு. உனக்கு இரண்டு கிராமங்களைப் பரிசாகத் தருகிறேன். நீ என்னுடைய அரண்மனையில் நுழைவது கடினம். உன்னை அவ்வளவு எளிதில் உள்ளே விட மாட்டார்கள். எனவேதான் நீ என்னை இங்கு வந்து பார். மறந்துடாதே! இலை பத்திரம். இதன் மதிப்பு இரண்டு கிராமம்" என்றார்.

அப்போதுதான் அவர் சக்கரவர்த்தி ஷாஜகான் என்பதை அறிந்த குஷியில் மேலும், கீழும் குதித்தான். அவர் காலில் விழுந்து வணங்கினான்.

சிரித்துக் கொண்டே ஷாஜகான் அவனிடமிருந்து விடை பெற்றார். மிகுந்த சந்தோசத்துடன் அந்த இலையை தன் தலைமாட்டில் வைத்துக்கொண்டு தூங்கினான் சிறுவன்.

அதிகாலையில் எழுந்து ஆவலுடன் இலையைத் தேடினான். அய்யோ பாவம்! அந்த இலையை ஆடு தின்று விட்டது.

"ஐயோ! இரண்டு கிராமங்கள் போச்சே!" என்று கதறி அழுதான். அவனால் அந்த இழப்பை மறக்க முடியவில்லை.

"இரண்டு கிராமங்களை ஆடு விழுங்கி விட்டதே," என்று புலம்பியபடி தெருத் தெருவாக அலைந்தான்.

மக்கள் எல்லாரும் பைத்தியம் என்று கூறிக் கேலி செய்தனர். ஆனால், அந்த வழியே வந்த துறவி ஒருவர் சிறுவனைக் கூப்பிட்டு "என்னப்பா விசயம்," என்று கேட்டார். நடந்த விஷயங்களைக் கேவிக் கேவி அழுதபடியே கூறினான் சிறுவன்.

அவனுக்காக வருத்தப்பட்ட துறவி, "தம்பி அழாதே! நம் சக்கரவர்த்தி ஷாஜகான் நேர்மை தவறாதவர். அவர் சொன்னதைச் செய்வார். நீ டில்லிக்குப் போய் பெரிய மசூதி முன்பாக நின்று 'இரண்டு கிராமங்களை ஆடு விழுங்கிவிட்டது' என்று சத்தமாகக் கத்து. அவர் புரிந்து கொண்டு கட்டாயம் உனக்குப் பரிசளிப்பார்." என்றார்.

சந்தோசத்துடன் சிறுவனும் டில்லிக்குப் போனான். மசூதியின் முன் நின்று கொண்டு "என் ஆடு இரண்டு கிராமங்களை விழுங்கிவிட்டது." என்று கத்திக் கொண்டே இருந்தான்.

'என்னடா இந்தப்பைத்தியம் இங்கு வந்து நின்று கத்துது.' என்று சொல்லிக் கொண்டே சென்றனர்.

ஆனால், இவனது கத்தல் ஷாஜகானின் காதில் விழுந்தது. உடனே அவருக்கு விசயம் புரிந்துவிட்டது. 'அந்த இலையை ஆடு தின்றுவிட்டது' என்று புரிந்து கொண்டார். உடனே சிறுவனை அழைத்து, அவனுக்கு எழுதிக் கொடுத்தபடியே இரண்டு கிராமங்களைப் பரிசாக வழங்கினார். மேலும் பல பரிசுகளைக் கொடுத்துச் சிறுவனை மகிழ்வித்தார் ஷாஜகான். இதுதான் செய்நன்றி மறவாமை என்பது புரிந்ததா பாப்பாக்களே!

## விடுகதைகளும் விடைகளும்

1) இலை இல்லாத மரம் தலை மேல முளைத்திருக்கு அது என்ன?
2) மண்ணுக்குள்ளே வெள்ளிக் கட்டி அது என்ன?
3) ஜாடி மேலே குரங்கு அது என்ன?
4) மணியடித்தால் மலைப்பாம்பு நகரும் அது என்ன?
5) அம்மா தந்த தட்டில தண்ணீர் விட்டால் நிற்காது அது என்ன?
6) தினம் ஒரு சட்டையை கழற்றுவான் அவன் யார்?
7. வெள்ளை வெள்ளைக் குடம் விழுந்தால் ஓட்டைக் குடம் அது என்ன?
8) பார்த்தால் பார்ப்பான், சிரித்தால் சிரிப்பான் அவன் யார்?
9) பரந்த காட்டேறிக்கு பக்கமெல்லாம் சடை அது என்ன?
10) நெருப்பை ருசித்தவனுக்கு நீண்ட ஆயுள் அவன் யார்?

### விடைகள்


1) மான் கொம்பு 2) முள்ளங்கி
3) முந்திரிப்பழம் 4) ரெயில்
5) தாமரை இலை 6) காலண்டர்
7) முட்டை 8) கண்ணாடி
9) ஆலமரம் 10) செங்கல்

## அதிசய உலகம்!

தமிழ்நாட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் அமிர்தகடேஸ்வர் என்ற ஆலயம் உள்ளது. கார்த்திகை மாதத்தில் வரும் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் ஆயிரத்து எட்டு சங்குகளில் நீர் நிரப்பி கர்ப்பக் கிருகத்தில் வைத்து பூஜை செய்வர். சங்குகளில் உள்ள தண்ணீர் கங்கை ஆற்று நீரைப்போன்று புனிதமானதாகக் கருதப்படுகிறது. விஷ்ணுவின் ஆயுதமான சங்கை இந்துக்கள் மிகவும் புனிதமானதாகக் கருதுகின்றனர்.



தேவர்கள் கடலைக் கடைந்து அமுதம் எடுத்தபோது இந்தச் சங்கு கிடைத்தாகப் புராணங்கள் கூறுகின்றன.



படத்தில் இருப்பவர்தான் குழாய் மீன். ஏன் இந்தப் பெயர் தெரியுமா? இவர் உடம்பைப் பாருங்க... அப்படியே ஸ்லிம்மா... குழாய் மாதிரி இல்லே... அதனால்தான் இந்தப் பெயர். இவர் கடல் குதிரைகள் இருக்குது இல்லையா அவற்றின் சொந்தக்காரர். அதாவது அவரது இனத்தைச் சேர்ந்தவர். இந்தக் குழாய் மீன்களில் மட்டும் அப்பா மீன்கள்தான் அடைகாக்கும். மம்மி மீன்கள் ஜாலியா முட்டை இட்டு... இந்த டாடி மீன்களின் வயிற்றுப் பகுதியில் பை போன்ற அமைப்பு இருக்கும். அதற்குள் முட்டைகளை வச்சிட்டு ஜாலியா சுற்ற ஆரம்பிச்சிடுவார். ஆனா... இந்த டாடி குழாய் மீன்கள் பதினேழு முதல் இருபத்தி ஒரு நாட்கள் வரை அப்படியே அமர்ந்து அடைகாக்கும். நாட்கள் முடிந்ததும் மெதுவாக டாடி மீனின் பையிலிருந்து வெளியே வருவார் குஞ்சு குழாய் மீன்கள். இவைகள் அளவைத் தவிர அப்படியே பெற்றோரை ஒத்திருக்கும். ஹவ் ஸ்வீட் நோ!

## வாரம் ஒரு TOP TEN

இவ்வாரம்:- சந்திரனில் காலடி பதித்த முதல் பத்து வீரர்கள்

| விண்வெளிவீரர் | விண்வெளி ஓடம் | விண்வெளியில் செலவிட்ட நேரம் மணி நிமிடம் | நிகழ்ந்த காலம் |
|---|---|---|---|
| 1. நீல் ஆம்ஸ்ரோங் | அப்பலோ 11 | 2:32 | ஜூலை 16-24, 1969 |
| 2. எட்வின் அல்டிறின் | அப்பலோ 11 | 2:15 | ஜூலை 16-24, 1969 |
| 3. சார்ள்ஸ் கொன்ராட் | அப்பலோ 12 | 7:45 | நவம்பர் 14-24,1969 |
| 4. அலன் பீன் | அப்பலோ 12 | 7:45 | நவம்பர் 14-24, 1969 |
| 5. அலன் செப்பாட் | அப்பலோ 14 | 9:23 | ஜனவரி 31- பெப். 9,1971 |
| 6. எட்கர் மிச்செல் | அப்பலோ 14 | 9:23 | ஜனவரி 31-பெப். 9,1971 |
| 7. டேவிட் ஸ்கொட் | அப்பலோ 15 | 19:08 | ஜூலை 26-ஒகஸ்ட் 7,1971 |
| 8. ஜேம்ஸ் ஜர்வின் | அப்பலோ 15 | 18:35 | ஜூலை 26-ஒகஸ்ட் 7,1971 |
| 9. ஜோன் யங் | அப்பலோ 16 | 20:14 | ஏப்ரல் 16-27, 1972 |
| 10. சார்ள்ஸ் டக் | அப்பலோ 16 | 20:14 | ஏப்ரல் 16-27, 1972 |

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **22.03.2003.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 488**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 485


பரிசுக்குரியவர்:
**ஆர். மின்னலொளி**
பொரனுவை, கஹவத்தை.

பாராட்டுக்குரியவர்கள்:


| | |
|---|---|
| **செல்வி கௌஷிகா முரளிதரன்,** அருணகிரி வீதி, திருகோணமலை. | **ஜெ. றிஸ்வான்** பி.எம்.பி. லேன், கிண்ணியா-03. |
| **யு. விதுஷா,** 85/7A, சமுத்ராசன் மாவத்தை, கல்கிசை. | **சி. ஜெயாபரன்,** திருமலை வீதி, வாகரை. |
| **சிஹானியா ஆப்தின்,** யோனக புர, திக்வெல்ல. | **செ. பிரசலா** கருவேப்பங்கேணி விபுலாநந்த வீதி, மட்டக்களப்பு. |
| **செல்வி துஷானா எட்வேட்,** 309, நீதிமன்ற வீதி, திருகோணமலை. | **சிறிஸ்கந்தராஜா ஷோபனா** மேபீல்ட் லேன், கொட்டாஞ்சேனை, கொழு.13. |
| **சி. சரண்ய தீபா,** பு/அ.த.க மகா வித்தியாலயம், சிலாபம். | **கோ. ஆர்த்தி** பரமன் ஒழுங்கை, ஆரையம்பதி-01. |

## அறிவுத் தேடல்

சென்ற வாரப் புதிரின் விடை:



## இந்த வாரப் புதிர்



கேள்விக் குறியிட்ட இடத்தில் எத்தனை வட்டங்கள் வர வேண்டும்?

# முயற்சிக்கு மற்றொரு உதாரணம்



விளக்கு வெளிச்சத்திலிருந்து படித்து அமெரிக்க ஜனாதிபதியாகிய ஆப்ரஹாம் லிங்கனின் கதையை நம்மில் பலரும் அறிந்து வைத்திருக்கிறோம். நவீன ஆப்பிரஹாம் லிங்கன் ஒருவர் தென் கொரியாவிலிருந்து உலகுக்கு மீண்டும் அறிமுகமாகியுள்ளார்.

தென் கொரியாவின் 16ஆவது ஜனாதிபதியாகக் கடந்த வாரம் பதவியேற்ற ரோமு ஹியு மிகவும் வறுமைப்பட்ட விவசாயக் குடும்பம் ஒன்றில் பிறந்து அதே வறுமையில் கல்வி பயின்று இன்று தென்கொரியாவின் தலைமைப் பதவிக்குத் தெரிவாகியிருக்கிறார்.

அந்த நாட்டின் பிரபல மனித உரிமை சட்டத்தரணியாகத் தனது வாழ்வை ஆரம்பித்த ரோ மு ஹியு பின்னர் பல்வேறு புரட்சிகளில் சம்பந்தப்பட்டுச் சிறையில் வாடி... ஏராளமான சிரமங்களுக்கு மத்தியில் இன்று உயர்ந்து நிற்கிறார்.

வழமையான வடகொரிய வெளியுறவுக் கொள்கையிலிருந்து இவரது போக்கு மாறுபட்டிருக்கும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கப் படைகள் தென்கொரியாவில் நிலை கொண்டுள்ளதைப் பகிரங்கமாக விமர்சித்து வரும் இவர், தற்போதைய உலகளாவிய அமெரிக்க எதிர்ப்புச் சூழ்நிலையில் ஒரு முக்கிய அரசியற் தலைவராகப் பேசப்படுகிறார்.

பதவிக்கு வந்து ஒரு வாரத்துக்குள்ளேயே அதிகளவு உலகின் கவனத்தை ஈர்த்தவராக மாறியிருக்கிறார் ரோ-மு ஹியு

பதவியேற்பு வைபவத்தின்போது மனைவியுடன்...

# நீந்தும் அலைகள்

நீருக்கடியில் நீந்திக் கொண்டு எஃப்.எம். அலைவரிசைகளை லாவகமாகக் கேட்கக்கூடிய வானொலி ஒன்று தயாராகியுள்ளது. இதுவரை காலமும் பூமியின் மேற்பரப்பில்தான் ஒலி அலைகளின் பயன்பாடு காணப்பட்டது. நீரடிப் பரிசோதனை முயற்சிகளுக்காகப் பிரத்தியேக கருவிகள் மூலம் ஒலி அலைகள் பயன்படுத்தப்பட்டாலும் தண்ணீருக்குள் ஃபிரிகுவன்ஸி அலைவரிசைகளை ஈர்த்து பாடல் கேட்கக் கூடிய ரேடியோ இப்போதுதான் தயாராகியுள்ளது.

இன்னமும் இது பரிசோதனை மட்டத்தில்தான் இருக்கிறது. விரைவில் சந்தைக்கு வரும்.






# தகவல் பெட்டி



# பூனை சுகம்

சுத்தமான குடிநீரும் காற்றும் கிடைக்காமல் கோடிக் கணக்கான மக்கள் அவதியுறும் உலகில் ஒரு பூனைக்குக் கிடைக்கும் சுகபோக வாழ்விது.

மாசு கலந்த காற்றைச் சுவாசிப்பதால் பூனைகள் விரைவில் நோய்வாய்ப்படுகின்றன என்று கண்டறிந்த இஸ்ரேலிய விலங்கியல் நிபுணர்கள் காற்றைச் சுத்தப்படுத்தும் கூண்டொன்றைத் தயாரித்திருக்கிறார்கள்.

தலைநகர் டெல்அவிவ் விலங்குகள் மருத்துவ மனையில் நோயாளிப் பூனையொன்று விசேட கூண்டில் வைக்கப்பட்டிருப்பதையே காண்கிறீர்கள். ஒரு போனஸ் பூனைத் தகவல்:-

செல்லப் பிராணிகளுக்கு பிரிட்டிஷ் குடிமக்கள் அதிகளவு செல்லம் கொடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு ஒருபுறமிருக்க, பூனைகளுக்குச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமது வீட்டுப் பூனைகளுக்கு வீதியில் திரியும் கட்டாக்காலிப் பூனைகளின் சிறுநீரகத்தை எடுத்துப் பொருத்துவதுதான் திட்டம்.

சுதந்திரமாகத் திரியும் பூனைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக, இத் திட்டம் குறித்துச் சில 'மிருக ஆதரவு' அமைப்புகள் ஏற்கனவே குற்றஞ்சாட்டியுள்ளன.

பூனைகளுக்கு இவ்வாறு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்தால் அதிக பட்சம் இரண்டு வருட காலம் அவை உயிர் வாழும். அதுவும் தொடராக மருந்து பாவிக்க வேண்டும்.

# புத்தகங்கள் குண்டுகளல்ல

ஈராக்கைத் தாக்க அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகளுக்கு உலகளாவிய ரீதியில் காணப்படும் எதிர்ப் புணர்வின் ஒரு துளியிது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கடந்த வாரம் பாடசாலை மாணவர்கள் வீதியில் இறங்கிப் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"புத்தகங்கள் குண்டுகளல்ல" என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஈராக் போருக்கு அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட் ஆதரவு தெரிவித்து வருகின்றமை கடும் கண்டனத்துக்கு உள்ளானது.

ஆசியர்கள், பெற்றோர்களின் எதிர்ப்பையும் மீறிப் பல பாடசாலைகளில் சிறிய வகுப்பு மாணவர்களும் இந்த ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

# இரவு விடுதியில் பிபாஷாவிடம் சீண்டல்

மாடலாக இருந்து நடிகையாக உருவெடுத்து தற்போது பாலிவுட்டின் கனவுக்கன்னியாக விளங்கும் பிபாஷா பாசுவுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு சோதனையான நாளாக அமைந்துவிட்டது. ஜூஹுவில் உள்ள இரவு விடுதி ஒன்றில் அடையாளம் தெரியாத மனிதர் ஒருவர் திடீரென பிபாஷாவை 'பேட் டச்' செய்ய ஆரம்பித்து விட்டார்.

சினிமாவில் வருது போல நிஜத்திலும் அக் குறும்புக்காரரை அடித்துத் துரத்தி பிபாஷாவைக் காப்பாற்றியிருக்கிறார் ஜான் ஆப்ரஹாம். இவர் பிபாஷாவின் நண்பர் மற்றும் துணை நடிகர் இருவரும் 'ஜிஸம்' படத்தில் இணைந்து நடித்துள்ளனர்.

இரவு சுமார் 11 மணியளவில் விடுதியில் இவர்கள் முன்பு திடீரெனத் தோன்றிய குறும்புக்காரர் பிபாஷாவைச் சீண்டியுள்ளார். இதனால் கோபமுற்ற ஆப்ரஹாம் அம் மனிதரை அடித்துள்ளார்.



## மினி சினி

* 'தத்தித் தாவுது மனசு' படத்தில் மும்தாஜைத் தவிர ஊர்வசி பட்டேல் என்ற மும்பை அழகியும் கவர்ச்சிக் களத்தில் இறங்கியிருக்கிறார்.

* ஸ்ரீகாந்த்- மீரா ஜாஸ்மின் ஜோடி நடிக்கும் படம் ஒன்றை லட்சுமி புரொடக்ஷன்ஸ் தயாரிக்கிறதாம். இப் படத்தை இயக்குபவர் அழகம்பெருமாள் ('டும் டும் டும்' படத்தை இயக்கியவர்).

* 'ஆஹா எத்தனை அழகு' படத்தில் முக்கிய வேடத்தில் ரகுவரன் நடிப்பதாக இருந்தார். இப்போது அந்த வாய்ப்பு நாசருக்குக் கிடைத்திருக்கிறதாம். படத்தில் நாசரின் மனைவியாக-ஹீரோ மிதுனுக்கு அண்ணியாக நடிக்கிறாராம் ரஞ்சிதா.

* வத்தலும் தொத்தலுமாகக் காணப்படும் சங்கவி, புதுப்படம் எதுவும் ஒப்பந்தமாகாத கவலையில் மூழ்கியுள்ளார். சொந்தப் படம் தயாரிக்க ஆசை இருந்தாலும், சக நடிகைகள் படம் தயாரித்துச் சந்தித்த கஷ்ட நஷ்டங்களைக் கண்டு பயப்படுகிறாராம். எனவே, சின்னத்திரை தொடர்களில் நடிக்க முடிவு செய்துள்ளார் சங்கவி!

* பத்திரிகைகளில் என் சம்பந்தப்பட்ட செய்திகளே வர வேண்டாம். அதனால் எனக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை என்று கையெடுத்துக் கும்பிடுகிறார், பாடலாசிரியர் சினேகன்!

* தனக்கு நடிக்க வாய்ப்பில்லாதபோது சம்பாதிக்கும் இரகசியத்தைக் கற்றுக்கொண்டிருக்கிறார் நடிகை மௌனிகா. வளசரவாக்கத்தில் வீடு ஒன்றை வாங்கியிருக்கிறார். இதை ஷூட்டிங்குக்கு வாடகைக்கு விட இருக்கிறாராம். வீட்டை மட்டும்தான்!

* 'பவளக்கொடி' படத்தின் மூலம் திரையுலகுக்கு அறிமுகமாகிறார் பவள். இவர் கோல்கத்தாவைச் சேர்ந்தவர். தமிழுக்காக 'பவள்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறதாம்.

* பாலா இயக்கும் 'பிதாமகன்' படத்துக்காகத் தலைமுடியைக் குறைத்து, உடல் எடையை ஒழுங்குபடுத்தியுள்ளார் விக்ரம். தற்போது அவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் மாமல்லபுரம் கடற்கரை அருகே அமைக்கப்பட்ட அரங்கு ஒன்றில் படமாக்கபபட்டு வருவதால், பார்வையாளர்கள யாரையும் படப்பிடிப்புத் தளத்தில் அனுமதிப்பது இல்லை.

* ஆர்.கே.செல்வமணியிடம் உதவியாளராகவும், பிரகாஷ்ராஜ் நடித்த 'தயா' படத்தில் உதவியாளராகவும் பணிபுரிந்த மோகன் இயக்கும் படத்தில் நடிக்க கால்ஷீட் கொடுத்துள்ளார் விஜய். இந்தப் படத்தை கவிதாலயா நிறுவனம் தயாரிக்கிறது.

## ஹீரோவின் நம்பிக்கை

அருண் பாண்டியன் அதிக நம்பிக்கையுடன் எதிர்பார்க்கும் படம் 'விகடன்'. தனது இயக்கத் திறமையை இரசிகர்களிடையே வெளிச்சம் போட்டுக் காட்டும் படம் என்று சொல்லும் அவர், மும்பை அழகி சொப்னாவுடன் ஒரு அதிரடி ஆட்டம் போட்டுள்ளார். சொப்னாவோ போதும்... போதும் என்று சொல்லுமளவுக்குக் கவர்ச்சி விருந்து படைத்துள்ளார். இந்தப் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து திரைப் படங்களில் நடிக்க முடிவு செய்துள்ள பின்னணிப் பாடகர் ஹரீஸ் ராகவேந்திரா, மென்மையான கேரக்டர்களை எதிர்பார்க்கிறாராம்.



அடுத்து தான் தயாரிக்கும் படத்துக்கு ...
பாண்டியன் இயக்கும் அடுத்த தமிழ்ப் பட...
ராக்லைன் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் ...
றேன். இசை என்பது மிகப் பெரிய கட...
துளி. இந்தத் துளி பெரிய அலையாக ...
தேவை" என்று சொன்ன அவர் பதினே...
பயிற்சி பெற்றுள்ள திறமைசாலி. ரஜினி...
'கங்குவா' ஆகிய படங்களுக்கு ...
ஆனந்த் என்பவரிட...
அமைப்பாளரா...
புரிந்துள்ள...

ரீமா சென்-வி...
விக்ரம்- ஜோ...
படம்: தூ...

## கிசுகிசுவை விரும்புகிறதா சூர்யா~ஜோதிகா ஜோடி!

சூர்யா நீண்ட நேரம் செல்போனில் பேசுகிறார். மறுமுனையில் ஜோதிகா செல்போனில் நீண்ட நேரம் பேசுகிறார். இருவரும் இப்படியே பேசிக்கொண்டிருந்தால், கண்டபடி கிசுகிசுக்கள் வரத்தானே செய்யும்? இதுவரை இவர்களில் யாராவது ஒருவர் இந்தக் கிசுகிசு பற்றி, இது உண்மை இல்லை என்று சொன்னதே இல்லை! இதை வைத்துப் பார்க்கும்போது, அவர்கள் இருவரும் இது போன்ற கிசுகிசுக்களை விரும்புகிறார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது!

## 'ஆசை ஆசையாய்' நாயகியின் ஆசை ஆசைகள்

'ஆசை ஆசையாய்' படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருப்பதில் அளவு கடந்த சந்தோஷத்தில் மூழ்கியுள்ள ஷர்மிலி, ஏ.வி.எம். புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் ஷாம் ஜோடியாக நடிக்கும் 'அன்பே அன்பே' படத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்.

'என்னுடைய நடிப்புத் திறமையை நன்கு வெளிப்படுத்தக்கூடிய வகையில் 'அன்பே அன்பே' படத்தில் எனக்கு நல்ல கேரக்டர் கிடைத்துள்ளது. குடும்பம் குடும்பமாக இந்தப் படத்தை தியேட்டருக்கு வந்து பார்க்கப் போகும் இரசிகர்கள், என்னையும் தங்கள் குடும்பத்தில் ஒரு பெண்ணாக ஏற்றுக்கொள்ளப்போவது உறுதி! அந்தளவுக்கு என் கதாபாத்திரத்துக்கு அழுத்தம் கொடுத்து உருவாக்கியுள்ளார் இயக்குநர் மணி பாரதி' என்று சொல்லுகிறார் அவர்.

இந்த ஆண்டு முடிவதற்குள் சினேகா, சிம்ரன், த்ரிஷா போன்றவர்களை ஓரம் கட்டிவிட்டு, தமிழ்ப் படவுலகின் நம்பர் ஒன் நடிகையாகக் கொடிகட்டிப் பறக்க மனதிற்குள் சபதம் செய்திருக்கிறாராம்!

சி னி வி




## முகப்பில்

பிரசாந்த் படம்: ஜெய் X ஐஸ்வர்யா ராய்

### போட்டோ ஆல்பத்துடன் தயார் நிலையில் அபிநயஸ்ரீ

மலையாளத்தில் அப்படி இப்படியென்று படுகவர்ச்சி காட்டி நடிக்கும் அனுராதா மகள் அபிநயஸ்ரீ, தமிழில் தனக்கு ஸ்டெடியான மார்க்கெட் இல்லையே என்று புலம்புகிறார். எனவே, புதுப் படங்களில் வாய்ப்பு வேட்டையாட ஒரு போட்டோ ஆல்பத்தைத் தயார் செய்து, அதைத் தன் அம்மாவுடன் சென்று, முன்னணி நடிகர்கள் மற்றும் இயக்குநர்களின் பார்வைக்கு வைத்து சான்ஸ் கேட்கிறார்! அந்த ஆல்பத்தில் ஒவ்வொரு போட்டோவிலும் ஏகப்பட்ட கவர்ச்சி விருந்து படைத்துள்ளதுதான் அபிநயஸ்ரீயின் ஸ்பெஷாலிட்டி!




## கவர்ச்சிகரமான மோதல்

அதென்னவோ தெரியவில்லை... கவர்ச்சி நடிகை ஜூனியர் சில்க் பற்றிப் பேசினாலே எரிந்து விழுகிறார், குலுக்கல் ஆட்டக்காரி லேகாஸ்ரீ. ஒரு மலையாளப் படப்பிடிப்பில் இவர்கள் இருவரும் கன்னாபின்னாவென்று மோதிக்கொண்டதால், இப்போது எங்கே பார்த்தாலும் வார்த்தைகளால் மோதிக்கொள்ளத் தயாராகிவிடுகின்றனர். ஆனால், ஜூனியர் சில்க் தாயார் லலிதாமணி சட்டென்று தலையிட்டு மோதலைத் தடுத்துவிடுகிறார்! வாய்ப்பு வேட்டையாடுவதில் நீயா, நானா முந்தி என்று செயற்படும் லேகாஸ்ரீக்கு குறைவான படங்களே கிடைத்து வருகிறது. அமைதியாக இருந்து, அம்மாவின் சொற்படி நடக்கும் ஜூனியர் சில்க்குக்கு கைவசம் இருபது படங்களுக்கு மேல் இருக்கிறது! ஹூம்... என்கிட்ட இல்லாதது அவகிட்ட என்ன இருக்கு? என்று புலம்புகிறார் லேகாஸ்ரீ.

## தமிழுக்கு மற்றொரு இசையமைப்பாளர்

...பிரபல கிரிமினல் வழக்கறிஞரான ...ராம் புஷ்பராஜ், 'அருண்பாண்டியன்' ...'விகடன்' படத்தின் மூலம் இசை ...மைப்பாளராக அறிமுகமாகிறார். அவ... அற்புதமான இசை அமைப்பில் ...வெளியான பாடல் கேசட் ...யில் சாதனை படைத்துள்ளது. ...வாரத்தில் பதினைந்தாயிரம் கேசட்டு ...சிறுள்ளது! 'விகடன்' பாடல்களைக் ...தயாரிப்பாளர் ஏ.எல்.அழகப்பன், ...ஒப்பந்தம் செய்துள்ளார். அருண் ...தெலுங்கில் ஒரு படம், கன்னடத்தில் ...படம் என ஒப்பந்தமாகி இருக்கி...றது. அதில் நான் ஒரு சிறு... இரசிகர்களின் நல்லாதரவ... ...ஆண்டுகளாக இசையில் நல்ல... ...நான் அடிமை இல்லை, ...இசை அமைப்பாளர் விஜய் ...தவி இசை ...பணி




## கங்குலி–நக்மா பழைய காதலை ஒப்புக்கொண்டார் நக்மா

மிகவும் பொருத்தமான நேரத்தில் தனது பழைய காதல் கதையை அவிழ்த்து விட்டிருக்கிறார் நக்மா.

தனக்கும், இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் சௌரவ் கங்குலிக்கும் இடையில் நிலவிய காதலை பத்திரிகைப் பேட்டி ஒன்றில் ஒப்புக்கொண்டிருக்கிறார் நக்மா.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நேரத்தில், இருவரும் திருப்பதியில் உள்ள காளஹஸ்தி கோயிலுக்கு ஜோடியாகச் சென்று சாமி தரிசனம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'சேவ்வி' என்னும் பெண்கள் இதழ் ஒன்றுக்கு நக்மா அளித்துள்ள பேட்டியில், "நாங்கள் இருவரும் எங்களைப் பற்றி வெளிவந்த தகவல்கள் குறித்து எந்தவித மறுப்பையும் வெளியிடாமல் இருந்ததால்தான் மற்றவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏதேதோ வதந்தி பரப்பினார்கள். அது எந்த வகையிலும் எங்களைப் பாதிக்கவில்லை.

எங்களுக்கிடையில் நட்பு இருந்தாலும், இதற்கு முன்னர் கங்குலி குறித்து எதுவும் கூறாமல் இருந்ததற்குக் காரணம், இருவருக்கும் அவரவர் துறையில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் இருந்ததே. அதை நாங்கள் இருவரும் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

ஈகோ அல்லது மற்றவர் மீது திணித்தல் என்பதைத் தவிர்த்து, நாம் பல விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. அந்த வகையில் எங்கள் நட்புக் குறித்து நாங்கள் கருத்துத் தெரிவிக்கவில்லை.

நமது சாதாரண ஆசைகளைப் பெரிய இலட்சியங்களுக்காகத் தியாகம் செய்தல் வேண்டும். அதையே நாங்கள் கடைப்பிடித்தோம்" இவ்வாறு அவர் கூறியுள்ளார். மேலும், "விளையாட்டை மக்கள் ஒரு போட்டியாக மட்டுமே கருத வேண்டும். அதைத் தாண்டி எதுவும் சிந்திக்கக் கூடாது. என்று நக்மா கூறியிருக்கிறார்.

## கமல்ஹாசனின் மற்றொரு 'மேக்கப் புரட்சி' சண்டியரில்

கமல்ஹாசன் இயக்கத்தில் சத்யராஜ், நாசர் நடிக்கும் சண்டியர்' படம் கலகலப்பான காமெடிப் படமாகவும், அதே சமயம் தங்கள் மூவருடைய வில்லத்தனத்தை வெளிப்படுத்தும் படமாகவும் இருக்கும் என்றார் கமல்ஹாசன். இதில் நடிக்க வித்தியாசமான தோற்றத்தை உருவாக்கி வைத்துள்ள கமல்ஹாசன்,

சக நடிகர்களான சத்யராஜும், நாசரும் வித்தியாசமான முறையில் மேக்கப் போட்டுக்கொள்வதற்காக வெளிநாட்டில் இருந்து நவீன மேக்கப் சாதனங்களைத் தருவித்துள்ளார்.

## ஹைக்கூ

**மழை**
பூமியின் அவலங்கண்ட
வானத்தின் அநுதாபம்
***

**பேனா**
நினைப்பதை சொல்லும்
நிதர்சன சோதிடன்
***

**சிகரட்**
உதட்டோடு உறவாடி
உயிர் குடிக்கும் காதலி
***

**மணமகன்**
திருமணச் சந்தையின்
பெருவிலைப் பண்டம்
***

**சீதனம்**
மாப்பிள்ளையென்ற பண்டத்தின்
தனியுரிமைக் கட்டணம்
***

**காதல்**
இதயங்களை இடமாற்றும்
இரகசிய ஒப்பந்தம்
***

**மரக்கிளையில் ஒரு குருவி**
காற்றுவாக்கில் உயிரொன்று
கவிதை பாடுகிறது
***

**மின் வெட்டு**
வான்மழையின் சாபத்தால்
உலகை வெறுக்கிறது
***

**அவள்நெற்றியில் பொட்டு**
மூன்றாம் பிறையில்,
ஒரு முழுநிலவு...
***

**பிரசவத்தில் தாய்**
ஒரு உயிரின் தவிப்பில்
இன்னொரு உயிரின் துடிப்பு
***

**கர்ப்பிணித்தாயின் பத்தியம்**
ஒரு முத்துக்காக
சிற்பியின் விரதம்
***

நிந்தநிலா-
எப்.மொகமட்பாயிஸ்.

## விதவை

நினைவுகளைச் சுமந்து,
கவலையில் புதைந்து,
எண்ணமெல்லாம் சிதைந்து
நிம்மதியெல்லாம் தொலைந்து
சந்நிதிக்காய் அலைந்து
வாழ்க்கையை இழித்து
மனத்திரையை கிழித்து
எண்ணமெல்லாம் உடைந்து
உள்ளம் கவலையில் புடைத்து
கண்ணீரைத் துடைத்து
வாழ்க்கையில் சளைத்து
உன்னை நினைந்து வாழும்
நான் ஒரு ஆண் விதவை

எஸ்.முஹமட் அன்சார்,
முள்ளிப் பொத்தானை.

## நிம்மதி தேடி

சோகத்தின் சிகரம்
நான் என்றாலும்
நீங்கள் நம்பப் போவதில்லை
என் இதயத்தின்
காட்டுக் காயங்களில்
உங்கள் காதை வைத்து
கேட்டுப் பாருங்கள்
கவலைகளின் குமுறல்களை
அது சொல்லும்
ஏன்!
என் கண்களின் விளிம்பினில்
விரல்களால் தீண்டிப் பாருங்கள்
மரணத் துயரத்தால்
வந்து போன கண்ணீரின்
கொடூர பள்ளமாவது
என் சோகத்தைச் சித்தரிக்கும்
என் இதயத்தைப் பிடுங்கி
எறிந்தாலும்
இரத்தக் கண்ணீர் விட்டு அழும்
ஒரு முறையாவது கேட்டு
ஆறுதல் சொல்லுங்கள்
நொந்து போன என் மனதிற்கு.

எம்.ஜெயசுதா-மூதூர்-03.

## மணிக்குயில் பாடும் தனி இசை

நேசங் கொண்ட தாயை விட்டு
நெஞ்சில் நிற்கும் சேயை விட்டு
பாசங் கொண்ட தாரம் விட்டு
பசுமை கொண்ட ஊரை விட்டு
வாசங் கொண்ட மலரை விட்டு
வசந்தங் கண்டு வாழ வென்று
தேசம் விட்டு தேசம் வந்து
தீயில் விழுந்த புழுவாய் ஆனோம்.
***
சொந்த நாட்டில் வேலை தேடி
சோர்ந்து போன மக்கள் கோடி
இந்த மண்ணின் காசை நாடி
இறக்கை கட்டி பறக்கு தங்கே!
வந்த நாட்டின் சோகம் தன்னை
வந்து இங்கே கண்டு வாடி
வெந்த கண்ணில் வேலாய் நித்தம்
வேதனை காணும் உள்ளம் இங்கே!
***
சொந்தக் குழந்தை சோறு தின்ன
சுற்றஞ் சுகத்தை எல்லாம் விட்டு
வந்த நாட்டின் சீமான் பிள்ளை
வளர்த் தெடுக்கும் ஆயா வாகி
எந்த நாளும் இரவும் பகலும்
இங்கும் நாயாய் உழைத்து ழைத்து
சிந்தும் கண்ணீர்ப் பாவைக் கூட்டம்
சிரிப்பை மறந்த ரோஜாத் தோட்டம்.
***
இனமோ சனமோ எதுவும் வேண்டாம்
இங்குதான் சொர்க்கம் உள்ளது என்றும்
மனம்போல் வாழ்வு வாழலா மென்றால்
மத்திய கிழக்கே சத்திய தெய்வம்
எனவோர் கூட்டம் இருக்குது இங்கே
இருந்தும் கையில் ஏதும் இன்றி
தனவான் போலே அபிநயங் காட்டும்
தன்மையை கவியால் எப்படி சொல்ல?
***
இல்லை என்று இங்கு வந்தோர்
இங்கு வந்தும் இல்லை என்றார்!
தொல்லை இந்த வாழ்க்கை என்று
தொண தொணத்துக் கொண்ட துஷ்டர்,
முல்லைப் பூவை பார்த்து அஃதும்
முள்ளாய் தானே பூக்கு தென்றார்!
அல்லல் கொண்ட இவர்போ லன்றி
அடுத்த அடியை அழகாய் வைப்பீர்!
***
சத்திய தேவனை நாவினில் கொண்டு
சாதனை பூக்களை தோள்களில் வைத்து
நித்திய வாழ்வெனும் நேர்மையினாலே
நித்தமும் உத்தம நடையது போட்டு
புத்தியில் உயர்வெனும் போதனை ஊட்டி
புதியதாய் உதித்திடு சூரியன் போலே
மத்திய கிழக்கது மாலைகள் போடும்
மணிக்குயில் உனக்கொரு தனிஇசை பாடும்!

மெய்யன் நட்ராஜ்-கட்டார்.

## பட்டதாரி கூலிக்காரன்

தண்டச்சோறு இவனென்று
திட்டுகின்றார் தந்தை!
பாவம் மகனென்று
பரிகாசம் செய்கின்றாள் அன்னை!
இப்படித்தான் அண்ணனென்று
இரக்கப்படுகின்றாள் தங்கை!
இத்தனையும் கண்டு
இம்சைப்படுகின்றான் ஓர் இளைஞன்!
***
பட்டப்படிப்பை முடித்து
பட்டம் பெற்றான்!
இதனால் பயனென்ன இவனுக்கு?
விரக்தி கொண்டவனாய்
திரிகின்றான் சமூகத்தில்,
"வெட்டிப்பயல்". எனும் முத்திரையோடு!
***
இலட்சம் கையில் இருந்தால்,
கிடைக்கும் இவனுக்கோர் உத்தியோகம்!
திறமைக்கு இங்கு முதலிடமில்லை.
துணிச்சலையும் கைவிட்டான்!
திரும்பிப் பார்க்கின்றான்,
இவனோடு படித்து பெயிலானவன்
கோட் சூட்டோடு அலுவலகம்
செல்கின்றான்!
***
இவனை நோக்கி இவன் மனம்
ஏளனமாய் நகைக்கின்றது.
"நீ தண்டச்சோறுதான்" என்று
நொந்து கொள்கின்றான்!
"ராசி இல்லாதவன்" என்று
கரைகின்றான் கண்ணீரில்!
***
அவன் வெற்றியீட்டிப் பெற்ற
'சம்பியன் கப்' அவன் நிலை கண்டு
கலங்கி நிற்கின்றது!
போட்டியில் பெற்ற சான்றிதழ்கள்,
இவன் நிலையறிந்து
சயனத்தில் ஆழ்ந்துள்ளன!
தொழில் வாய்ப்புத் தேடி
விண்ணப்பித்து விண்ணப்பித்து
உமிழ்நீர் வற்றிவிட்டது!
***
நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி
நேரடியாய் இலட்சம் தொகை
கொடுக்காததால்,
நிராகரிக்கப்பட்டுவிட்டான்!
உடைந்துபோன அவனுள்ளம் இனியும்
உத்தியோகத்தை எதிர்பார்க்கவில்லை!
பரம்பரைத் தொழிலைக்காக்க
புறப்படுகின்றான்,
பட்டதாரி கூலிக்காரனாய்!

பா.சுபாஜினி-பொத்துவில்.

## தேன் கிண்ணம்

## சிரிக்கிறேன்

என்றோ
நான் சிரித்தேன்
காதலர்களைப் பார்த்து
அன்று
நான் சிரித்தேன்
காதல் வசப்பட்ட
உன்னைப் பார்த்து.
இன்று
நான் சிரிக்கிறேன்
காதலில் உன்னால்
ஏமாற்றப்பட்ட
என்னைப் பார்த்து

எஸ்.ரூபிணி-
வவுனியா.

## சமஉரிமை

அன்புத் தாயென்றும்
அவளே-முன்னறி
தெய்வமென்றும்; பின்
தார மென்றும்-பெண்
குலத்தை-அகிலமே
போற்றும். போது...
***
தாய்க் குலமின்று
தாழ்வு மனம் கொண்டு
'அடிமைகள்' என
தம்மைத் தாமே
தாழ்த்திக் கொள்ளல்
தரணியில் முறையாமோ?
***
வீட்டுக்கு மட்டுமே தலைவியாய்
வீற்றிருந்த பெண்ணே-இன்று
நாட்டுக்கும் தலைவியாய்-
அமர்ந்த பின்னே-சமவுரிமை
கேட்பதென்ன பெண்ணே!
***
ஆணுக்குப் பெண்-இங்கே
அடிமை யென்று-யார்
மொழிந்தார்? கணவனின்
அன்புக்கும் ஆசைக்கும்
அடிமையாவதே பெண்ணுக்கு
பெருமை தருமே!
***
பெண்ணுக்கு உரிமை
மறுத்தவர் யார்...?
ஆணுக்கு உரிமை
கொடுத்தவர் யார்...?
***
பெண்ணுக்கு ஆண்-பொன்னால்
தாலி கட்டுகிறான்; அவளுக்கு
அவனே வேலியு மாகிறான்;
ஆணுக்குப் பெண்-தாலி
கட்டலாமா..? அவன்தான்
கழுத்தை நீட்டுவானா?
சமரசம் இருந்தால்...!
சவுரிமை-தானே தோன்றுமே!

பொத்துவில் ஏ.எல்.ஏ.முகம்மத்.

## பேனா நண்பர்கள்



பெயர்:
எஸ். ரி. ராஜா
வயது: 22
முகவரி:
AL HUDA ENG. CO.
P.O.BOX- 17015
DOHA - QATAR.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரெனிஸ்.



பெயர்: கு. ஜனகன்
வயது: 24
முகவரி:132/4, நெலும் மாவத்தை, சரணங்கர மாவத்தைக்கு முன்னால், களுபோவில, தெஹிவளை.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
எம்.எஸ்.எம்.நவ்பர் அலி
வயது: 23
முகவரி:
E-CAMP, P.O.BOX-46649,
ABUDHABI, U.A.E.
பொழுது போக்கு:
தினமுரசு, கிரிக்கெட்.

## தேடிப் பெற்றவை

### கலையும் சமுதாயமும் என்ற நூலுக்கு செ. கணேசலிங்கம் எழுதிய முன்னுரை

"கலையும் விஞ்ஞானமும் சமூக உழைப்பிலிருந்து தோன்றியவை; இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக உள்ள இரு வகைப்பட்ட வடிவங்கள்; இவையிரண்டும் மானிட உழைப்பிலே வேர் கொண்டுள்ளன" என மார்க்சிய அறிஞர் ஜியார்ஜ் தொம்சன் கூறுகிறார்.

சமூக வாழ்வு, உழைப்பு, உணர்வு உடையவனே மனிதன். மனிதன் ஒரு சமூகப் பிராணி. மனிதனின் உணர்வுகளை அவனது சமூக வாழ்நிலையே தீர்மானிக்கிறது. அவன் மக்களோடு சமூகத்தில் வாழ வேண்டியவனாகிறான். சமூகத்திலிருந்து ஒதுங்கிக் காட்டில் தவம் புரிவது முன்னைய புராண காலத்து முனிவர்களாலேயே முடிந்தது!

கலைஞானம் சமூகத்தில் வாழ்வதால் எத்தனை கற்பனையாகக் கலைகளைப் படைத்தாலும், தன்னிச்சையாகப் படைத்தாலும் அது சமுதாயத்தை ஒட்டியதாகவே இருப்பதைக் காணலாம். அக் கலை சமூகத்தவருடன் தொடர்பு தந்து, சமூக இன்ப, துன்ப உணர்வுகளை ஏற்படுத்தி, உழைப்பால் இழந்த சக்தியை மீண்டும் தர முயல்கிறது.

துன்ப உணர்வுகள் ஒப்பாரிப் பாடல்களிலும் தாலாட்டுப் பாடல்கள் மகிழ்ச்சியின் வெளிப்பாடகாவும் உழைப்பின் அசைவு கூட்டு இசை ஒலியாக, பாடலாக வெளிவருவதையும் காணலாம். இவை வற்புறுத்திக் கற்பிக்கப்பட்டவையல்ல. இயல்பாக எழும் உணர்வுகளின் வெளிப்பாடாகும்.

பேசும்போது தர்க்கரீதியாக உணர்வோடு பேசுகிறோம். கவிதையில் உணர்ச்சிகள் ஓசை நயத்தோடு கற்பனை மிக்கதாகவும் அமைவதைக் காணலாம்; உவமான, உவமேயங்களுடன் விஷயங்கள் கூறப்படுவதையும் பார்க்கலாம். சாதாரண மக்களுக்கு விஷயங்களை உவமான, உவமேயங்களுடன் கூறி விளக்குவது வழமை, மரபு. அதனாலேயே இன்றும் கவிதை பழைய மரபில் நிலைத்திருப்பதைக் காண்கிறோம்.

கலைஞனுடைய படைப்பு சமுதாய உணர்வு மட்டத்தில் எந் நிலையில் உள்ளது என்பது முக்கியமாகும். சமுதாயத்தில் சமத்துவம், சமூக நீதியை நிலை நாட்டி, மனிதரது உழைப்பில் ஆர்வந்தந்து, மேலும் உழைப்பிற்கு உந்து சக்தி தருவதுவே உயர்ந்த கலைப்படைப்பாகும்.

விஞ்ஞானத்திலும் கலையிலும் உள்ளடக்கத்திற்கும் உருவத்திற்கும்-சமூகப் பணிக்கும் அமைப்புக்கும் இடையில் இடையறாத முரண்பாடு ஏற்படுகிறது. இதுவே இயக்கவியற் கோட்பாடாகும். முரண்பாடுகளைத் தீர்க்க முயலும்போது வடிவத்தில் மாற்றம் ஏற்படுகிறது. புரட்சிக் காலக் கட்டங்களில் முரண்பாடுகள் கடுமையாகி மரபு வழிப்பட்ட வடிவங்கள் தீவிர மாற்றம் அடைவதும் தவிர்க்க முடியாதது. கலையும் சமுதாயமும் என்ற நூலுக்கு செ.கணேசலிங்கம் எழுதிய முன்னுரை,

## கவிதை நெஞ்சங்களுக்கு!

இவ்வாரச் சிறப்புக் கவிதை, உலகை உலுக்கி எடுத்த இரும்பு மனிதனைப் பற்றியது அல்ல. ஹிட்லருக்குள் இருந்த ஹிட்லர் ஒவ்வருவொருக்குள்ளும் இருக்கிறான். ஆனால் அவன் வெளியேவர சந்தர்ப்பம்தான் வாய்க்கவில்லை என்பதை சற்று வலிக்கவே குண்டூசியால் குத்தி உணர்த்துகிறது.

## சிறப்புக் கவிதை

### தோழர் ஹிட்லர்



வருக
தோழர் ஹிட்லர்
வருக வருக
***
இது உங்கள் வீடு,
எல்லா வீடுகளும்
உங்களுடையதுதான்.
***
தோழர் ஹிட்லர்
அன்பு கூர்ந்து
கொஞ்சம் தேனீர் அருந்துங்கள்.
***
வரவேற்பதில்
பெருமையடைகிறேன்
***
எல்லோராலும்
தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட
ஒரு மனிதரை,
***
இந்த நூற்றாண்டின்
மிகச் சரியான மனிதரை.
***
வரலாறு
நீங்கள் தற்கொலை
செய்து கொண்டதாக
குறிப்பிடுகிறது.
***
அது எப்போதும்
இத்தகைய பொய்களையே
உருவாக்குகிறது.
***
மற்றவர்களைப் போல
நானும் அதை நம்பியிருந்தால்
இப்போது உங்களை
அடையாளம் காண
முடியாமல் போயிருக்கும்,
***
உங்கள் பெயர் மாறலாம்
உருவம் மாறலாம்
***
ஆனால்
நீங்கள்
நீங்கள்தான்.
எத்தனையோ காலத்துப்
போராட்டம்.
***
உங்களை
யாரும் அழிக்க முடியவில்லை
***
நீங்கள்
அதிகமான
அபவாதத்திற்கு
ஆளாகி விட்டீர்கள்.
***
எல்லாக் குற்றங்களையும்
தனியொருவனின் தலையில்
சுமத்திவிடுவது நியாமில்லாதது.
***
நீங்கள்
பிறரது அடிபணிதலை
விரும்பினீர்கள்
அது குற்றமா?
***
இங்கு
மற்றெல்லோரும் விரும்புவது
இதைத் தவிர வேறென்ன?
***
யாரையாவது
அதட்ட முடியாத மனிதன்
தற்கொலை செய்து
கொள்கிறான்.
***
அல்லது
பைத்தியம் பிடித்துவிடுகிறது.
தோழர் ஹிட்லர்
இலட்சக் கணக்கான
யூதர்களை
படுகொலை செய்தீர்கள்.
***
நீங்கள்
ஏதோ கொடியவனாய்
இருந்ததால் அல்ல.
***
துரதிர்ஷ்டவசமாக
உங்கள் கையில்
ஒரு பெரிய கத்தி
கிடைத்து விட்டது.
***
அது உங்களுடைய
தவறன்று.
***
என்னிடம்
இருக்கும் குண்டூசியினால்
நான் என்ன செய்ய முடியுமோ
அதைச்
செய்துகொண்டுதானிருக்கிறேன்.
***
உங்களுக்கு
உலகம் முழுவதும்
தேவைப்பட்டது.
***
சந்தேகமில்லாமல்
இங்கே
ஒவ்வொருவருக்கும்
அவ்வாறே தேவைப்படுகிறது.
***
ஆனால்
உங்கள் பெயர்
வெளியே வந்துவிட்டது.
***
இன்றைய விலைவாசியில்
கொஞ்சம் அதிகாரத்தை
வாங்க முடியுமானால்
***
நான் என்னை
வந்த விலைக்கு
விற்று விடுவேன்.
***
அது
ஒரு டீஸ்பூன்
உள்ளே போனாலும்
யாரை என்ன செய்வேனென்று
எனக்குத் தெரியாது
அடுத்தவர்களுக்கும் தெரியாது.
***
மற்றவர்களுக்காக
தான் முடிவெடுக்கும்
பெருந்தினவுக் கொள்ளை
நோய்
எல்லா இடத்திலும்
பரவியிருக்கிறது.
***
சீழ் வைத்துப் புண்ணாகி
வலியல் தெறிக்கின்றன
நம் உறவுகள்.
***
ஒவ்வொரு இலட்சியமும்
அப் புண்ணையே
நக்கி வாழ்கின்றன.
***
தலைவர்கள்
தொண்டர்கள்
கணவர்கள்
ஆசிரியர்கள்
அதிகாரிகள்
பியூன்கள்
மருத்துவர்கள்
கலைஞர்கள்
தெய்வங்கள்
மனித தெய்வங்கள்
***
நாங்கள்
அனைவரும் விரும்புவது
தோழர் ஹிட்லர்
நீங்கள் விரும்பியதைத்தான்.
***
நாங்கள் அனைவரும் செய்வது
நீங்கள் செய்ததைத்தான்.
***
நீங்கள்
கனவு கண்ட
வாழ்க்கை முறையை
சாம்ராஜ்ஜியத்தை
பெருமளவு உருவாக்கி
விட்டோம்.

லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# உதடுகள் இனிக்குமா...?

★ நமது உடலின் எல்லா இடங்களிலும் உள்ள தோலானது இருபத்தெட்டு நாட்களுக்கு ஒரு முறை உதிர்ந்து மறுபடி உருவாகின்றன. ஆனால் உதட்டின் சருமம் மட்டும் தாமதமாகவே உதிர்ந்து, உருவாகிறது. எனவே அதற்கு அதிகபட்ச பராமரிப்பு அவசியம். சரியாகக் கவனிக்கப் படாத பட்சத்தில் உதட்டின் சருமம் சீக்கிரமே வறண்டும், சுருக்கங்கள் விழுந்தும் காணப்படும்.

★ சிலருக்கு உதடுகள் கறுத்துக் காணப்படும். இவர்கள் வெது வெதுப்பான தண்ணீரையும், குளிர்ந்த தண்ணீரையும் உதடுகளில் மாற்றி, மாற்றி அடித்துக் கொள்ளலாம். இது கருமையைப் போக்கி, உதடுகளையும் மென்மையாக வைக்கும்.

★ தினம் இரவு படுக்கச் செல்வதற்கு முன்பாக கொத்தமல்லிச் சாறு அல்லது பீட்ரூட் சாற்றை உதடுகளின் மேல் தடவி வந்தால், உதடுகள் சிவப்பழகு பெறும்.

★ முட்டையின் வெள்ளைக்கருவோடு தேன் கலந்து உதடுகளில் தடவி வந்தாலும், உதடுகள் சிவப்பாக, மென்மையாக மாறும்.

★ காலையிலும், மாலையிலும் நரிஷிங் கிரீம்கொண்டு உதடுகளை மென்மையாக மசாஜ் செய்து வந்தால் உதடுகள் நல்ல அழகு பெறும்.

கருமையான உதடுகளைத் தவிர்க்க தினம் நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டியது அவசியம்.


மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதும் உதடுகளின் அழகுக்கு முக்கியம்.

தேன் தடவி வந்தால், உதடுகள் வெடிக்காமலிருக்கும்.

வறண்ட உதடுகளுக்கு வாசலின் அல்லது கிளிசரின் தடவி வரலாம்.

### லிப் மேக்கப்

முதலில் உதடுகளின் மேல் ஃபவுண்டேஷன் தடவ வேண்டும். அதன் பிறகு லிப்ஸ்டிக் போட்டால் அது நீண்ட நேரம் இருக்கும்.



★ லிப்ஸ்டிக்கை அப்படியே தடவக் கூடாது. முதலில் உதடுகளுக்கு லிப் பென்சிலால் அவுட் லைன் வரைந்துகொள்ள வேண்டும். பிறகு லிப் பிரஷ்ஷால் லிப்ஸ்டிக்கை எடுத்து அதை அவுட் லைனுக்குள் தடவ வேண்டும்.

★ லிப்ஸ்டிக் போட்டதும் இரண்டு உதடுகளுக்கும் இடையில் டிஷ்யூ பேப்பரை வைத்து அழுத்தி விட்டு, அடுத்த கோட் போடலாம்.

★ டிஷ்யூ பேப்பரால் அழுத்தியதும் சிறிதளவு பவுடரைத் தடவி விட்டு இன்னொரு கோட் லிப்ஸ்டிக் போட்டால் லிப்ஸ்டிக் நீண்ட நேரம் இருக்கும்.

★ மென்மையான, பளபளப்பான உதடுகளை விரும்புவோர் லிப்ஸ்டிக் போட்டதும் அதன் மேல் லிப் கிளாஸ் தடவலாம். ஆனால் அதை நேரடியாக உதடுகளின் மேல் தடவக் கூடாது. அதே மாதிரி உதடுகளின் ஓரங்களுக்குச் செல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

★ உதடுகளின் வடிவம் என்பது எல்லாருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. சிலருக்குக் கீழ்ப்பக்கம் குவிந்து காணப்படும். இது பரம்பரை வாகாலும் இருக்கலாம். வயதாவதன் அறிகுறியாலும் இருக்கலாம். உதடுகளை நன்றாகப் பிரித்துச் சிரிக்கிற மாதிரியான பயிற்சியைத் தொடர்ந்து செய்து வந்தால் இப் பிரச்சனையை சரியாக்கலாம்.

★ உதடுகளின் வடிவம் பெரிதாகவோ, ரொம்பவும் சிறியதாகவோ இருந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை. பெரிய உதடுகளைச் சரியாக்க, லிப்லைனரால் அவுட் லைன் போடும்போது சிறியதாகப் போட்டு, அதற்குள் லிப்ஸ்டிக்கை நிரப்பலாம். அதே மாதிரி சிறிய உதடுகளைப் பெரிதாக்கவும் அவுட் லைனைக் கொஞ்சம் பெரிதாக்கி லிப்ஸ்டிக் போடலாம். அவுட்லைனுக்கு வெளியே உள்ள உதட்டினை ஃபவுண்டேஷன் மற்றும் பவுடர் தடவி சருமநிறத்தோடு ஒன்றும்படி செய்து விடலாம். ●

# கர்ப்பவதியா?

குழந்தைகளையும் செல்வங்கள் என்றுதான் அழைப்போம். அத்தகைய செல்வத்தைப் பெற்றெடுக்க ஒரு தாயானவள் அடையக் கூடிய துயரங்களையும் இன்னல்களையும் எண்ணிவிட முடியாது. அப்படி பேறு காலத்தில் வருகின்ற உடல் ரீதியான தொல்லைகளில் ஒன்றுதான் பேறுகால இரத்த சோகையாகும்.



நம் நாட்டிலும், வளர்ந்து வரும் நாடுகளிலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் இரத்த சோகையே தாயின் இறப்பிற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. சில நல்ல ஆரோக்கியமான தாய்க்குக் கூட கர்ப்ப காலத்தில் சிறிது இரத்த சோகை ஏற்படும்.

இதற்குக் காரணம், தாயே தனக்கும், குழந்தைக்குமான தேவைகளைப் பூர்த்தி செய்கிறாள். இதன் காரணமாக இரத்த சோகை ஏற்படுகிறது. இதில் இரத்த சோகையுள்ள, சத்து குறையுள்ள ஒரு பெண்மணி கருவுற்றால் பிரச்சனை பன்மடங்காகிறது. இரத்த சோகையின் விசுவரூபமே பிரசவத்தில்தான் தெரிகிறது என்றே கூறலாம். இரத்த சோகையுள்ள தாய் பிரசவிக்கும்போது மூச்சுத்திணறல் ஏற்பட்டு, இதயம் பாதிக்கப்பட்டு, உதிரப்போக்கு அதிகமாகி உயிரைக்கூட இழக்க நேரிடும். அத்தனை அபாயகரமானது இரத்த சோகை. பலர் அதன் முக்கியத்துவத்தையும் அபாயத்தையும் சிறிது கூட உணருவதில்லை.

இதன் காரணமாக இன்றும் மகப்பேறு மரணங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பது தான் மிகவும் வருந்தத்தக்க செய்தியாகும். இரத்த சோகையைத் தடுக்க ஹீமோகுளோபின் சோதனை (இரத்தத்தில் உள்ள அணுக்களின் அளவு) செய்யப்பட வேண்டும். இதை கர்ப்பக் காலத்தில் அடிக்கடி செய்து கொள்வது தாய்க்கும், சேய்க்கும் மிகவும் நல்லது. ஒரு கர்ப்பிணிப்பெண் கர்ப்பத்தினுடைய மூன்று நிலையிலேயும் இந்த மாதிரியான ஹீமோகுளோபின் பரிசோதனையைச் செய்து கொள்வது மிகவும் நல்லது.

மகப்பேறு மருத்துவரிடம் கர்ப்பிணிப் பெண்கள் வருகின்றபோது டாக்டர்கள் அவர்களிடம் இது போன்ற பரிசோதனைகளைச் செய்துகொண்டால் நல்லது என்று கூறும்போது சில கர்ப்பிணிப் பெண்கள், டாக்டர்கள் சம்பாதிப்பதற்காகத் தேவையற்ற பரிசோதனைகளை மேற்கொள்ளச் சொல்கிறார்கள் என்று தவறாக நினைத்து இது மாதிரியான பரிசோதனைகளைத் தவிர்த்து விடுகின்றனர். கர்ப்ப காலத்தில் மகப்பேறு மருத்துவர்கள் சொல்கிறபடி நடந்து கொண்டால் நிச்சயம் நல்ல குழந்தைகளை நல்ல முறையில் பெற்றெடுக்கலாம் என்பதில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

கர்ப்ப காலத்தில் ஒரு பெண்ணிற்கு அதிகபடியான மசக்கையின் காரணமாகவும்கூட சில சமயம் இரத்த சோகை ஏற்படலாம். சிலர் கர்ப்பமான முதல் மூன்றிலிருந்து நான்கு மாதங்கள் வரை ஒன்றுமே சாப்பிடப் பிடிக்காமல் இருப்பதனால், இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபினின் அளவு குறையலாம். இதை உடனடியாகக் கண்டுபிடித்தால் உணவு மற்றும், மருந்து மாத்திரை உட்கொண்டு சரி செய்துவிடலாம்.

### இரத்த சோகையை எப்படித் தவிர்ப்பது?

1.இரும்புச்சத்து மிகுந்த உணவுகளை நிறையச் சாப்பிட வேண்டும். வெல்லம், பேரீச்சம்பழம், தேன், வேர்க் கடலை முருங்கைக் கீரை, முதலிய வற்றை தொடர்ந்து சாப்பாட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

2. இரும்புச்சத்து மற்றும் பாலிக் அமில மாத்திரைகளைப் பேறு காலம் முழுமைக்கும் தொடர்ந்து சாப்பிட்டு வருவதும்கூட இரத்த சோகைக்கு மிகவும் நல்லது.

3. ஒரு சில கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேறு மருத்துவர்கள் பரிந்துரை செய்தாலும்கூட குழந்தையின் தலை பெருத்துவிடும், இதனால் பிரசவம் சுகமாக இருக்காது என்று அவர்களாகக் கற்பனை செய்கின்றனர்.

இதுவொரு தவறான மருத்துவ மூட நம்பிக்கையாகும்.

மகப்பேறு காலத்தில் மற்றும் பிரசவம் போன்றவைக்காக ஏற்படும் தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்யவே இந்த மாதிரியான மாத்திரைகளை மகப்பேறு மருத்துவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். எனவே கண்டிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்ப காலத்தில் இரும்புச் சத்து, பாலிக் அமில மாத்திரைகளைச் சாப்பிடுவது நல்லது.

4. கர்ப்பக் காலத்தில் மகப்பேறு மருத்துவர்களால் குடற்புழு நீக்க பரிசோதனை மேற்கொள்ளப்படும். குடற்புழு இருந்தால் அதனை நீக்க மருந்து உட்கொள்ள வேண்டும்.




செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் 31

பெயர்:........................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22- 03-2003

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு சல்வார்?
## டிக்கோயா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

செல்வி தேஷ்யாரா ஷாலினி,
24/2, ஹோன்சி பசார், டிக்கோயா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# நீங்களும் ஸ்லிம்ரன்தான்



கல்யாணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பிறகு பல பெண்களுக்கு தங்கள் உடம்பின் மீதிருக்கிற அக்கறை குறைந்து விடுகிறது. இனிமேல் என்ன... என்கின்ற அலட்சியம்தான் இதற்குக் காரணம்.

அதுவும் நாற்பதைத் தொடுகின்ற வயதில் பெண்களில் பலரது உடம்பு பெருத்துவிடுகிறது. உடம்பின் மீதிருக்கிற அக்கறையின்மையால் உணவு உண்பதில் சரியான கவனம் செலுத்துவதில்லை.

தீதும் நன்றும் பிறர் தர வாரா.. என்பது உடம்புக்கும் பொருந்தும் என்பது பல பெண்களுக்குத் தெரியவே இல்லை. உடல் பெருத்த பிறகு பிட்னஸ் சென்டருக்கு போகவும், ஸ்லிம் செய்து கொள்ளவும்தான்... மூச்சிரைக்கப் போவார்கள். நாலு படி ஏறி இறங்கினாலே தஸ்புஸ் என்று மூச்சு முட்டும். இதெல்லாம் எதனால்..? சாப்பிடுகின்ற சாப்பாட்டில் கவனம் செலுத்தாமைதான் முதலும் முடிவுமான காரணம்.

முறையற்ற உணவு உண்ணும் முறையுடன் சிலருக்கு தைராய்டு, ஹார்மோன் குறைபாடு, உடல் உழைப்பின்மை, டென்ஷன்.. போன்ற காரணங்களும் சேர்ந்து கொண்டால் அவர்கள் குண்டாவதை யாராலும் தடுக்க முடியாது.

பெண்கள் முப்பந்தைந்து வயதைத் தாண்டிவிட்டால்... பாதாம் பருப்பு, முந்திரி, நெய், எண்ணெயில் பொரித்த உணவுகள், இனிப்புகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம்.. போன்றவற்றைக் கண்டிப்பாகத் தவிர்ப்பது நல்லது. இவற்றுக்குப் பதிலாக... காய்கறிகள், பழங்களைச் சாப்பிட வேண்டும். கார்போஹைடிரேட் அதிகமுள்ள அரிசிப் பண்டங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, எவ்வளவு வீட்டு வேலைகள் இருந்தாலும் உணவைச் சரியான நேரத்துக்கு உண்ண வேண்டும்.

# போலி இணக்கம்

இரண்டு பணக்கார நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இப்போது நிலைமை மிகவும் கஷ்டமானதாகிவிட்டது. ஏனென்றால், வீட்டில் இப்போது நானும் மனைவியுமே இருக்கின்றோம்.

"நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமே, ஒரு காதல் திருமணமல்லவா"

"இப்போது காதல் என்ற வார்த்தையை நான் பயன்படுத்துவதே இல்லை. அந்த வார்த்தைதான் எனது வாழ்க்கையை நாசம் செய்துவிட்டது. எனது மனைவிக்காக மட்டுமே நான் இந்தத் தொழில் மற்றும் தொழிற்சாலையை நடத்தி வருகிறேன். அதன் மூலம் அவளைத் தவிர்க்க முடிகிறது."

"அப்படியென்றால் ஒரு அழகான மலைவாசஸ்தலத்தைக் கண்டுபிடித்து அங்கே குடியேறி அமைதியாக வாழுங்களேன்."

"ஆனால், இந்த மலைவாசஸ்தலத்தில் இந்தப் பெண்மணியோடு தனியாகவா? கொலை விழும்!"

"என்ன பேசுகிறீர்கள்? யார் யாரைக் கொலை செய்வார்கள்"

"அதை யார் முதலில் செய்யப்போகிறார்கள் என்பதைப் பொறுத்துதான் அது. இந்தப் பெண்மணியோடு தனியாகவா? முடியாது. ஒருவேளை நீங்கள் எங்களோடு தங்குவதாக இருந்தால் பாதுகாப்பாக உணர்வேன். எந்த மலை வாசஸ்தலத்துக்காவது போகலாம். ஒரு நண்பன் இல்லாமல் நாங்கள் ஒரு படத்துக்குக்கூடப் போவதில்லை. நண்பர் எங்கள் இருவருக்கும் இடையில் உட்கார வேண்டும். இல்லாவிட்டால் ஏதாவது ஆகிவிடும்" என்றார் நண்பர்.

"நீங்கள் சண்டையிட்டதை நான் ஒருபோதும் பார்த்தில்லையே."

"அது உண்மைதான். பல வருடங்களாக எல்லாமே பூமிக்கடியில் போய்விட்டது. ஆனால் நாங்கள் சண்டையிட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். எனக்குள்ளே நான் அவளை அடித்துக் கொண்டு இருக்கிறேன். அவளுக்குள்ளே அவள் என்னை அடித்துக் கொண்டு இருக்கிறாள். ஆனால் அதை வெளிக்காட்டுவதில்லை. மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்?"

பேச்சினிடையே, அந்த நண்பனின் மனைவி அவ்விடத்தே வந்தாள்.

அவளிடம் மற்ற நண்பர் வினவினார். "நீங்கள் உங்கள் கணவருடன் ஒரே அறையில் உறங்குவதில்லை எனக் கூறுகிறாரே."

"அது என்றும் பெரிய பிரச்சனை அல்ல. அவர் குறட்டை விடுவதால்தான்" என்றாள் அவள்.

மீண்டும் நண்பர் அவளிடம் வினவினார்.

நான் அவ்வுடன் பலமுறை ஒரே அறையில் படுத்து உறங்கியிருக்கிறேன் அவர் குறட்டை விட்டதை நான் கேட்டதில்லையே" என நான் கூறியதும் எதுவும் கூறாமலே அங்கிருந்து சென்றுவிட்டாள். மீண்டும் நண்பரிடம்,

"என்ன விசயம், நீங்கள் குறட்டை விடுவதாக உங்கள் மனைவி கூறுகிறாள்" என்று கேட்டேன்.

"ஆம் நான் குறட்டைவிடுகிறேன். இது அவளை வேறு அறையிலே தங்க வைப்பதற்காகத்தான். நான் உறக்கத்தில் ஒரு போதும் குறட்டை விடுவதில்லை. அதனால்தான், நீங்கள் அதைக் கேட்பதில்லை. நான் குறட்டை விடுவதற்காக முயற்சி செய்ய வேண்டியுள்ளது. இது மிகவும் கடினமான ஒரு கலை. இதை ஒருவர் கற்றுக்கொள்ள வேண்டும். இது அவளுக்கு ஒரு நொண்டிச்சாக்கைக் கொடுப்பதற்காகத்தான். அவள் அடுத்த அறையில் உறங்க விரும்பினாள். அதற்கு ஒரு சாக்குத் தேவைப்பட்டது. எனக்கு இங்கே இருப்பது மிகவும் அமைதியாக உள்ளது. அவள் அங்கே இருக்கிறாள். நான் எனது கதவை உட்புறம் தாளிட்டுக்கொள்கிறேன். ஏனெனில் நடு இரவில் அவள் உள்ளே வரக் கூடும். அவளுக்கு ஏதாவது தோன்றி, ஒரு சண்டை தொடங்கிவிடும்.

வெளியே தெரியும் முரண்பாடுகளால் ஏற்படும் பாதிப்பைவிட, மூடி மறைக்கப்படும் முரண்பாடுகள் ஏற்படுத்தும் விளைவுகள் ஆபத்தானவை.

---

**மி**ருணாளினி தீவிர சிந்தனையில் முதுகு குனிந்து, முழங்கால்களில் தலை சாய்த்த வண்ணம் மாலைச் செங்கதிரவனின் பின்புலத்தில் அந்த மணலில் அமர்ந்திருந்த கோலம் ஆற்றல்மிகு சைத்ரீகன் ஒருவனின் அற்புத ஓவியம் போலிருந்தது.

அவள் மனம் முழுவதும் அரவிந்தன் நிறைந்திருந்தான். அவனை நினைப்பதே வீண் வேதனைக்குரியது என்று தெரிந்திருந்தாள். இருந்தாலும் அந்த நினைவை அவளால் விலக்க முடியவில்லை.

ஒரு முட்கிரீடத்தின் முட்கள் போல அவள் இதயத்தின் மீது அமர்ந்திருந்தன அந்த நினைவுகள். மறக்க முயலும்போது அந்த முட்கள் மேலும் மேலும் அழுத்தி அந்தக் காயங்களிலிருந்து வலியும் இரத்தமும் சிந்தின.

வேறு எதையாவது யோசிக்கலாம் என்றால் எதை யோசிப்பது? இந்தக் கேடுகெட்ட மனம், கரட்கட்டிய கழுதையைப் போல வேறு பக்கம் திரும்பவே மறுக்கிறது.

நெருப்பேறிய அவள் நெஞ்சிலிருந்து பெருமூச்சு ஒன்று பிறந்தது.

அரவிந்தனோடு இதே கடற்கரை மணலில் அமர்ந்திருந்த இன்ப வேளைகளின் பின்னால் அவள் மனம் ஓடிக்கொண்டிருந்தது. இப்போதும் அந்த நிமிடங்களை நினைத்து அவள் நெஞ்சம் விம்மியது. அவளுக்குத் தன் மீதே பரிதாபம் தோன்றியது. எவ்வித ஆதரவும் அற்று வெறுமையாகிப் போன குருநாதை உணர்ந்தாள். அழுதுவிடுவாள் போலிருந்தாள்.

அருகிலிருக்கும்போதெல்லாம் அரவிந்தன் செய்யும் விஷமங்களை, பண்பாடு விளைத்த அச்சத்தால் தான் விலகி விலகி ஒதுங்கிய நேரங்களுக்காகவும் அவள் இப்போது வருந்தினாள்.

அவன் சில்மிஷங்களெல்லாம் திருப்பத் திரும்ப நினைவில் மோதி அவளைச் சித்திர வதைப்படுத்தின.

அருகே உட்கார்ந்து ஒரு கையால் இடையைச் சுற்றிவளைத்துக் கொண்டு நெற்றியில் அலை அலையாய் பறந்து கொண்டிருக்கும் கேசங்களை இன்னொரு கையால் விலக்குவான். அவன் கண்களுக்காக விலகி விலகி முகம் திருப்பும் மிருணாளினியின் கன்னத்தில் எதிர்பாராக் கணத்தில் முத்தமிடுவான்.

"சரியான சந்தர்ப்பவாதி நீங்கள்" என்பாள் கோபத்துடன், ஆனால் உள்ளே உவகையுடன்.

"சரியாகச் சொன்னாய்" என்பான் அரவிந்தன் அவளைத் தன்னருகே மேலும் இழுத்தணைத்தபடி.

"என்ன சரி? சந்தர்ப்பவாதியாகவும் நடந்து கொள்வீர்களா?"

"ம்... சமயோசிதப்படி."

"அது சரிதான். சமயத்துக்குச் சமயம் உங்கள் தேவைக்காக மாறியபடி இருப்பதுதானே உங்கள் பழக்கம்!"

"மிகச் சரியாகச் சொன்னாய். முன்னேற விரும்புபவனுக்கு அதுதான் முக்கிய இலட்சணம்

## பொங்கும் கடலின் அலைபோல மனம் பொங்கி அரற்றுது உன் நினைவால்...

மிருணா..." என்றபடி முகத்தை அவள் மார்புக்குள் புதைப்பதற்குக் கொண்டு செல்வான்.

"போதும்... பொது இடத்தில்... வெட்கமில்லையா உங்களுக்கு?" என்று சீறுவாள்.

அரவிந்தன் அவள் கோபத்தை இலட்சியம் செய்யாமல் "ஓர் இளவயது ஆணும் பெண்ணும் தனித்திருக்கும்போது உலகச் சூழ்நிலை அர்த்தமற்றது" என்பான்.

"யாருக்கு அர்த்தமற்றது, வந்து இதைப் பார்க்கிறவர்களுக்குமா?" என்று அவள் சீறுவாள்.

அந்தச் சிற்றத்திலும் ஒரு சிரிப்பும் மயக்கமும் அந்தக் கண்களிலிருந்து உதிர்வதை அரவிந்தன் காண்பான். அந்தக் கோபச் சொற்கள் அவள் அமுத உதடுகளிலிருந்து வந்ததால் அவனுக்குத் தித்திக்கவே செய்யும். அந்த உதடுகளைப் பார்ப்பான். கோபத்தில் விரிந்த கண்களுக்கு மேலே அழகாக வளைந்து எழுச்சி பெற்றிருக்கும் இரு விற்புருவங்களைப் பார்ப்பான். பின்னர் பார்வையைக் கீழே இறக்கி மற்றுமிரு எழுச்சிகளின் அழகில் தடுமாறுவான்...

அவன் பார்வை சென்ற இடங்களை உணர்ந்த மிருணாளினி, வெட்கி நெளிந்து ஒருபக்கமாகத் திரும்பிக் குனிந்து, ஏதேனும் பேசி நிலைமையைச் சமாளிப்பதற்காக, "நான் போக வேண்டும்" என்பாள்.

அப்படியா தலைவி?" என்பான் வெகு அக்கறையாக.

மேலுக்கு அவன் குரலில் பணிவு தெரிந்தாலும் அதன் பின்னால் பெரும் விஷமம் இருப்பதையும், உள்ளூர அவன் நகைக்கிறான் என்பதையும் பரிந்துகொண்டு, "என்ன அப்படியா?" என்று வெடிப்பாள் மிருணாளினி.

"இல்லை... நாமிருவரும்தானே போக வேண்டும்?"

எங்கே?"

"சொர்க்கத்துக்கு " என்று சொல்லியபடியே அவளை இழுத்து, அந்த மலருடலைத் தன் மீது போர்த்திக்கொள்வான். அந்த முரட்டுத்தனத்திற்குள் அவள் அமிழ்வாள். அவன் மெல்ல மெல்ல சொர்க்கத்தை நோக்கி இழுத்துச் செல்வான்.

இப்போது கடற்கரை மணலில் தனித்து அமர்ந்திருந்த மிருணாளினிக்கு அந்த நினைவுகள் மிகுந்த வேதனையைத் தந்தன. இரைந்து குமுறும் கடலலைகளைப் பார்த்திருந்த அவளுக்கு கடலும் தன்னைப் போலவே துயரம் சுமந்திருந்து அரற்றுவதாகத் தோன்றியது.

தாங்க முடியாக் காமத்தால் பொங்கி அரற்றும் தன் மனத்துக்கு இந்தக் கடல்தான் துணை என எண்ணிக்கொண்டாள்.

உள்ளயே வெளியேயும் அலறும் இரைச்சலைத் தாங்கிக்கொள்ள மாட்டாமல் கலங்கினாள் மிருணாளினி. ஒவென்ற இந்த இரைச்சலைத் தவிர எந்த ஆதரவுமற்ற நிலைமையை எண்ணித் தன்மீதேயான பச்சாதாபத்தால் விம்மினாள். அடக்கிக்கொள்ள மாட்டாத கழிவிரக்கத்தால் இரு நீர்த்துளிகள் அவள் கண்களில் எட்டிப் பார்த்தன.

மலர் மொட்டொன்றின் மீது மினுங்கியபடி இருந்த பனித்துளி திடுமென்று கீழே சிந்துவது போல அவள் கண்களில் தேங்கி நின்ற நீர்த்துளிகளும் சிந்தின.

கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து தளர்வாக நடந்தாள் மிருணாளினி.

**தாங்கரும் காமத்தைத்**
**தணந்து நீ புறம் மாறத்**
**தூங்கு நீர் இமிழ் திரை**
**துணையாகி ஒலிக்குமே**
**உறையொடு வைகிய**
**போதுபோல் ஒய்யென**
**நிறை ஆனாது இழிதரும்**
**நீர் நீந்து கண்ணாட்கு**

(கலித்தொகை 4:7-10)

இலக்கிய நயம் தருவது முழடில்யன்

---

## சிந்தியா பதில்கள்

**★ சிந்தியா, நீங்கள் உண்மை பேசுவதுண்டா?**

ஏ.ராசேந்திரன், கீரியன் குடியிருப்பு.

ஏனில்லை? இதோ ஒரு உண்மையைச் சொல்கிறேன்: 'நான் எல்லாச் சமயத்திலும் உண்மையே பேசுவதில்லை.'

●●●

**★ உலகக் கிண்ணத் துடுப்பாட்டத்தில் உங்களைக் கவர்ந்த வீரர் யார்?**

எஸ். வாணி, கொழும்பு-13.

ஏமாற்றமளிக்கும் நடுவரிசை வீரர்களால் தடுமாறிக் கொண்டிருக்கும் நமது அணியைப் பார்க்கும்போது, ராம் நரேஷ் ஷர்வானும், யுவராஜ்சிங்கும் என்னைக் கவர்ந்து ஏங்க வைக்கிறார்கள்.



யுவராஜ்சிங்

●●●

**★ சண்டையால் ஏற்பட்ட அவலங்கள் நின்றுவிட்டாலும், ஹர்த்தால், கடையடைப்புகளால் அவலம் நிற்கவில்லையே?**

ஆர்.கோகுலன், வவுனியா.

மக்கள் தங்களுடைய எதிர்ப்புணர்ச்சியைக் காட்டுவதற்காக ஏற்பட்ட எழுச்சி ஊர்வலங்கள், ஹர்த்தால்கள் எல்லாம் இன்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதோ ஒரு குறிக்கோளைக் காட்டிச் சாதாரண மக்களைக் கடுமையாகத் தண்டிப்பதாகவே மாறிவிட்டன.

●●●

**★ நமது மூதையர்களைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?**

மார்க்கண்டு வாணி, கிரான்.

எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது, அவர்கள் எல்லோருமே இறந்துவிட்டார்கள் என்பது.

●●●

**★ தேர்தல் வந்து ஆட்சி மாறிவிட்டால் மீண்டும் யுத்தம் வருமா?**

த. பாலசுப்பிரமணியம், வெதமுல்லையூர்.

நம் பிரச்சனையில் சர்வதேச அவதானம் அதிகரித்துள்ள இன்றைய நிலையில், இனி பேச்சுக்களைக் கைவிட்டு சண்டைக்குப் போவதாயிருக்கும் இலகுவானதாயிருக்காது. உண்மையில் தமிழ் தரப்பு, தென்னிலங்கை அரசியலில் ஒரு கட்சி நிலைப்பாடு எடுப்பது விவேகமானதில்லை. இரு பெரும் கட்சிகளுமே தமிழ் மக்களை ஊதாசீனப் படுத்தித் தீங்கு செய்வதில் சூட்சமின்றிச் செற்பட்டவைதாம். யார் பதவிக்கு வந்தாலும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நிர்ப்பந்திக்க வேண்டுமே தவிர, ஒரு கட்சியோடு பேசுவோம் மற்றக் கட்சியோடு சண்டைதான் பிடிப்போம் என்று நாமே முன்னதாகத் தீர்மானித்துச் செயற்படுவது தமிழ் மக்கள் நலனுக்கு உகந்ததல்ல. எந்தக் கட்சியையும் நாமாக விரோதம் காட்டிப் புறக்கணித்துவிடாமல், எல்லாக் கட்சிகளையும் எங்கள் பிரச்சனை சம் பந்தமான பேச்சு வார்த்தைப் பொறிக் குள் வைத்திருக் கப் பார்ப்பதுதான் விவேகம். ஏனென் றால் இந்த நாட்டில் ஆட்சிக்கு எந்தக் கட்சி வர வேண்டும் என்பதை பெரும் பான்மையும் சிங்கள மக்களே தீர்மானிக்கப் போகிறார்கள். வருகிறவர்கள் யாராக இருந்தாலும் பேச்சுக்கு நிர்ப்பந்தப்படுத்தி பிரச்ச னைக்குத் தீர்வு கண்டு கொள்வதுதான் புத்திசாலித்தனமே தவிர, இன்னார் வந்தால் சண்டைதான் என்று எழுதிக் கொண்டிருப்பது எங்களைத்தான் சமாதான விரோதிகளாய்க் காட்டும். அதில் நம் சமூகத்தை அழிவுக்குக் கொண்டு போகும் முட்டாள்தனம்தான் உண்டு.

●●●

**★ சும்மா நடந்து போகும்போது யாரோ என்னைப் பின்தொடர்ந்து வருவது போல ஒரு பிரமை எப்போதும் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கிறது. என்ன செய்யலாம்?**

எம்.காதர், கஹடகஸ்திகிலிய.

பின்பக்கமாக நடக்கப் பழகிக்கொள்ளுங்கள்!

●●●

**★ என் அபிமானப் பாடகர் P.B.ஸ்ரீனிவாஸ் இன்னும் இருக்கிறார்தானே... இன்றைய இசையமைப்பாளர்கள் அவரை ஏன் பாட வைப்பதில்லை?**

சி.பேரின்பன், பேராறு-02.

தடபுடா என்று உடலை அதிர வைக்கும் இன்றைய பாடல்களுக்கு அவர் குரலை யோசித்தால் சங்கடமாகத் தோன்றவில்லையா உங்களுக்கு! வீணைகூட சற்று உரத்துச் சிணுங்கி விட்டால் காதைப் பொத்திக்கொண்டு விடக்கூடிய மெலோடி காலத்து இளவரசர் அவர். ஒரு பேட்டியில் அவர் சொன்னார்: 'MUSIC' என்னும் ஆங்கில வார்த்தையில் 'M' தான் மெலோடி. அதை எடுத்துவிட்டால் YOU SICK (USIC) ஆகிவிடுவாய்."

இதயத்தை மயிலிறகாய் வருடிச் சுகம் தர அவர் பாடல்கள் இன்னும் இருக்கின்றன.

●●●

**★ தமிழ்க் கூட்டமைப்பு தலைமையை மாற்ற வேண்டுமென்று இரண்டெழுத்தார் சொல்லியிருக்கிறார்களே..?**

ந.கோகுலதாசன், களுவாஞ்சிக்குடி.

ஈராக்கின் தலைமை மாற வேண்டுமென்று அமெரிக்கா சொல்லலாம் என்றால், இரண்டெழுத்தாரும் இதைச் சொல்லலாம்தான்!

●●●

**★ என்ன படம் பார்த்தீர்கள்?**

எம்.எச்.எம்.இர்பான், பொகவந்தலாவ.

'ஜுலி கணபதி'. இன்றைய தமிழ்ப் படங்களின் நியதிகளை எல்லாம் மீறி மிருக்கிறார் பாலுமகேந்திரா. ஆங்கில தொலைக்காட்சிப் படங்களின் பாணியில் முயன்று பார்த்திருக்கிறார். சரிதாவின் விசித்திர மனநிலை மட்டுமல்ல பயமுறுத்துவது, அவரது சரீரமும்தான்.

●●●

**★ சிந்தியா, பலர் திருமணம் செய்யாமலே இருக்கிறார்களே, ஏன்?**

கே.அக்கீத், ஆண்டியா புளியங்குளம்.

தங்களுக்குப் பிடிக்காத ஒன்றை வைத்துக்கொண்டு அவஸ்தைப்படுவதைவிட, தங்களுக்கு இல்லாத ஒன்றை ஆசைப்பட்டுக்கொண்டே வாழ்நாளைக் கடத்திவிடுவது பரவாயில்லை என்று நினைத்திருக்கலாம்.

●●●

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்




**Naveen Ceramic** No.307, George R. De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை

184-A, Havelock Road, Colombo-05.

Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



## கொழும்பு–சென்னை சிங்கப்பூரில் தங்குமிட வசதி

கொழும்பு-சென்னை-சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்க, திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு, தளபாட சாமான்களோடு, சகல வசதிகளுடனான தங்குமிட வசதியம், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடுகளும், அவாவா வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து இலவச வாகன வசதி. சலுகை கட்டணத்தில் வாடகைக் கார்.

மேலதிக விபரங்களுக்கு

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore-079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி

அப்பு: 0065-975 14 941



## தெய்வீக மருத்துவம்

**National Theiveega Sakthy Foundation**
**International Interregious Traditional & Medical & Divine Service**

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை

Government Approved Charity Regd No: - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P, J.P. (SL)**

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் [illegible] மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புராதன தீங்கற்ற மஹா மாந்திரிக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருந்துவப் பொருட்களை விரைவு தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)


Theiveegam SriLanka — Tele / Fax:065-24825, 078 610008
Head Office — வெளிநாட்டவர்களுக்கு
Batticaloa. — Tele / Fax: - 0094 78610098

மட்டக்களப்பிலும் சந்திக்கலாம்

"வாழ்வினிருளை நீக்கிஒளியையேற்றுவோம்"

" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "


## மரண அறிவித்தல்



### திரு. சி. நாகமுத்து

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தொண்டமானாறை வசிப்பிடமாகவும், தற்போது திருச்சியில் வசித்து வந்தவருமாகிய திரு.சி.நாகமுத்து அவர்கள் 05.03.2003 அன்று திருச்சியில் காலமானார். இவர் தங்கமயிலின் அன்புக் கணவரும் கொழும்பு திரு.பாலச்சந்திரன், திருச்சி திருமதி யமுனா தவராஜா, திருமதி வனஜா வேலுப்பிள்ளை, கனடா திருமதி திலகா தர்மலிங்கம், டென்மார்க் திருமதி கிரிஜா ராஜவரோதயம், கனடா திரு.ரவிச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். ஈமக்கிரியைகள் ஞாயிறுமாலை திருச்சியில் நடைபெற உள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் இதை ஏற்றுக்கொள்ளவும்.

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்ப விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை, தபாற் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும். உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@dialogsl.net edmurasu@dialogsl.ne

## விளம்பரப் பகுதி


### லண்டன், பாரிஸ் இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

டாக்டர் ஆர். தியாகராஜன் **DHMS, AMRSH (LON)**

**24.03.2003** முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.

மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை,பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும்.

ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு லண்டன்

தொலைபேசி: **07984803488 - 07833341693**

**Email: homoeocare@rediffmail.com**

தொடர்பு: **0091/9843051099 (இந்தியா), 0094-777602513**

மார்ச் மாதம் இலங்கை விஜயம் 18/03/2003 முதல் 21/03/2003வரை



### காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

**142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.**

சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

**Tel: 074-519754**



### இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி



மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர். டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.



**★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை**

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

**★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.



**★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.**

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

**உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள**

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

**★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.**

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

**★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.**

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி**

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்**

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

**★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.**

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

**★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.**

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

**★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.**

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விடடாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

**★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்**

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.**

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

*உலக மாந்திரீக சக்கரவர்த்தி.*

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 342464, 344832, 342463, 470615, 431137. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, Fax: 009452-22508
w.w.w. imexpo lanka . com. drpk samy.

அங்கம் 11

# திரும்பும் அம்புகள்

**வே**ணு ஸ்தம்பித்துப் போயிருந்தான்!

அந்தோணியை பாம்பு கடித்து அவன் செத்துவிட்ட விஷயத்தை சில நிமிடம் முன்புதான் அவன் சகா ஒருவன் வந்து சொல்லிவிட்டுப் போயிருந்தான். வேணுவால் அதை நம்ப முடியவில்லை. நிச்சயம் பாம்புதானாக வந்து அவனைக் கடித்திருக்க வாய்ப்பு இல்லை என்றுதான் தோன்றியது.

விஷயத்தைச் சொன்னவன் "பெரியவர் உன்னை மறக்காம நம்ம டாக்டரைப் போய் பார்க்கச் சொன்னாரு. இல்லாட்டி டாக்டரே உன்னைப் பார்க்க வீட்டுக்கு வந்தாலும் வரலாம்..." என்று சொன்னது அவன் நெஞ்சை யடைத்தது.

நெஞ்சில் அடைப்பு ஏற்பட்ட அதே வேளையில் அவன் வீட்டு வாயிலிலும் அரிமா மாளிகைக்கு சொந்தமான ஜீப்பின் தேக்கம்!

எட்டிப் பார்த்தவனுக்கு பகீர் என்றது

டாக்டர் இறங்கிக் கொண்டிருந்தார்.

கையில் பிரீஃப்கேஸ்.

ஒரு விநாடி அவர் எமனாகவே வேணுவின் கண்ணுக்குத் தெரிந்தார்.

'ஞானவேலை கொன்று புதைத்ததை எப்படியோ கண்டுபிடித்துவிட்ட அந்தோணி ஒரு வழியாக உலகவிட்டு அனுப்பப் பட்டுவிட்டான்.'

'அடுத்து நானா?'

வேணுவுக்கு கைகாலெல்லாம் நடுங்கியது.

டாக்டர் சிரித்தபடி உள்ளே வந்தார்.

"என்ன வேணு... நல்ல டெம்பரேச்சராமே..? என்னை டிஸ்பென்சரில் வந்து பாக்காம இப்படி விட்டுக்கு வந்து படுத்துட்டா எப்

## இந்திரா சௌந்தர்ராஜன்

படி காய்ச்சல் குணமாகும்?"

டாக்டர் விசாரித்தபடியே அவன் அருகில் வந்து அமர்ந்தவராக அவன் கையையும் இழுத்துப் பிடித்து நாடி பார்க்க ஆரம்பித்தார்.

சூழ்ந்து நிற்கும் அஞ்சுகமும், ரேணுகாவும் லேசாக அதிர்ந்தார்கள்.

"அண்ணன் உங்களைப் பாத்து ஊசிபோட்டுகிட்டு வந்ததால்ல சொன்னிச்சு..." என்று ரேணுகா காலையில் அவன் சொன்னதை அப்படியே போட்டு உடைத்தாள்.

"அப்படியா... அப்படியா சொன்னே...?"

கேள்வியோடு ஸ்டெதாஸ்கோப் அவன் மார்பின் மேல் பதிந்தது.

"என்னப்பா... எதுக்கு உன் இதயம் இப்படி துடிக்குது என் காதையே அடைக்கற மாதிரி..."

"வேணு எதுவும் பேசாமல் அவரையே வெறித்தான்.

'டெம்ப்ரேச்சர் இருக்கு... அதே சமயம் எதையோ பாத்து மிரண்டு போயிட்ட போல இருக்கு."

அவர் சாதாரணமாக சொன்னாரா, இல்லை அவனுக்கு மட்டும் புரியும் என்று திட்டமிட்டே சொன்னாரா என்று தெரியவில்லை.

"டாக்டர் எனக்கு எதுவுமிலலை. நான் நல்லாத்தான் இருக்கேன்..." என்று அவர் எதிரில் தைரியத்தை வரவழைத்தவனாக எழுந்து உட்கார்ந்தான். அவர் சட்டையே செய்யாமல் ப்ரீஃப்கேசில் இருந்து இஞ்செக்ஷன் சிரிஞ்சையும் ஒரு ஆம்ப்யூல் ஊசி மருந்து ஒன்றையும் எடுத்தார்.

"டாக்டர் எனக்கு ஒண்ணுமில்ல டாக்டர்... எதுக்கு எனக்கு இப்ப ஊசி போடறீங்க..? வேண்டாம்."- சற்று சத்தம் போட்டு கத்தினான் வேணு.

"உனக்கு உடம்பு சரியா இருக்கு இல்லைன்னு நான் சொல்லணும். நீ சொல்லக்கூடாது வேணு."- அவர் பேச்சுக்கு பேச்சு செயலுக்கு செயல் என்று சிரிஞ்சில் மருந்தை உறிஞ்சத் தொடங்கியிருந்தார்.

"இல்ல... நான் ஊசி போட்டுக்க மாட்டேன். எனக்கு எதுவும் இல்லை. சொன்னாக் கேளுங்க..."- அலறினான் வேணு.

"டேய் என்னடா இது... எதுக்காக வீடு தேடிவந்து உனக்கு வைத்தியம் பாக்கறவரிகிட்ட இப்படி காட்டுக் கத்து கத்தறே... மரவட்டை மாதிரி சுருண்டே படுத்துகிட்டிருந்துட்டு உடம்பு நல்லத்தான் இருக்குன்னா என்னடா அர்த்தம்..?" அவன் அம்மா அஞ்சுகம் டாக்டருக்கு வக்காலத்து வாங்கினாள்.

"விடுங்கம்மா... நல்ல விஷஜுரம். கான்ஷியஸே இல்லாம போகக் கூட வாய்ப்பிருக்கு... ஒரு ஊசி போட்டாத்தான் கண்ட்ரோல் ஆகும். இல்லேன்னா பெரியவருக்கு என்னால பதில் சொல்ல முடியாது."- டாக்டர் ஊசி முனையில் மருந்தைப் பிலிற்றினார்.

வேணு அவரை அதிகபட்ச மரண பயத்தோடு பார்த்தான்.

அது மருந்தாகவே அவனுக்குத் தெரியவில்லை. விஷமாக அந்த பிளாஸ்டிக் குழாயினுள் சிவப்பு நிறத்தில் குலுங்கியது.

"வேண்டாம் டாக்டர்... இது மருந்து இல்ல... விஷம். எனக்குத் தெரியும். நீங்க என்னைக் கொல்லத்தான் வந்திருக்கீங்க. பெரியவர் உங்களை அதுக்குத்தான் அனுப்பியிருக்கார்... நான் ஞானவேலைப் பார்க்கலை. அவன் பெணத்தைப் பாக்கலை. என்னை நம்புங்க. எனக்க எதுவும் தெரியாது... என்னை விட்டிருங்க. என்னை விட்டிருங்க..." அவனது அலறலில் வீட்டுக் கூரையே நடுங்கியது.

(அம்புகள் தொடர்ந்து வரும்..)

---

அதிர்ச்சி 04

## பின் லேடன் 'அதிரவைக்கும் மனிதன்'

# அமெரிக்கக் கூடாரத்துக்குள் ஒசாமா புகுந்துவிட்ட

04

அமெரிக்க-ஈராக் யுத்தத்தின் மீதான நேரெதிர் சர்வதேச அழுத்தம், எண்ணெய் வளம் மிக்க-தென் அமெரிக்கக் கண்ட வெனிசியுலா நாட்டு உள் பிரச்சனையில் அமெரிக்கா தலையிடுவதிலான சர்ச்சை, அதி சிறந்த விஞ்ஞானிகளோடு எதிர்பாராத விதமாகக் கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறிய பதற்றத்தில், ஒரு நாளைக்குப் பதினாறு முறை பூமியைச் சுற்றிக்கொண்டு விண்வெளியில் நிற்கும் 'சோயுஸ்' விண்கலத்தில் நிற்பவர்களைப் பத்திரமாகப் பூமிக்குக் கொண்டுவர வேண்டுமே என்கிற பீதி, ரஷ்யா, அமெரிக்கா உட்பட்ட பதினாறு நாடுகளின் கூட்டு முயற்சிதான் 'சோயுஸ்' என்றாலும், எதிர்வரும் ஜூன் மாதம் சோயுஸ் விஞ்ஞானிகளைத் தரையிறக்கும்போது 'கொலம்பியா' மாதிரி எதுவித அனர்த்தங்களும் ஏற்பட இடமளிக்கக் கூடாது என்கிற அதிபர் புஷ்ஷின் அதீத அக்கறை, அப்படி துர்ப்பாக்கிய அனர்த்தங்கள் நிகழும் பட்சத்தில் அமெரிக்காவுக்கு நிச்சயமாய் தலை குனியும் ஒரு நிலை ஏற்படுவதைத் தடுக்க முடியாது. ஆக-தவிர்க்க வேண்டும் என்பதில் சர்வ சத்தியமாய் காட்டப்பட வேண்டிய வெறித்தனமான முயற்சிகள். எக்ஸெட்ரா... எக்ஸெட்ரா.

'சீ.ஐ.ஏ.யின் திறமையான பணிகள் மீது நம்பிக்கையிருக்கிறது. அமெரிக்கா மற்றும் அதுசார்ந்த பாதுகாப்பு விடயங்களில் சீ.ஐ.ஏ. வியூகம் அமைத்து லாவகமாய்க் காய்களை நகர்த்தும் விதம் பிடித்திருக்கிறது. வரவேற்கத் தக்கதுதான். என்றாலும் மிக அரிதான கவனயீனங்கள் மூலம் விடப்படும் ஓட்டைகளைப் பயன்படுத்தி ஒஸாமாவே, அல் காயிதாவின் பிற முஸ்லிம் தீவிரவாதிகளோ உள் நுழைந்துவிடக் கூடாதே! ஒஸாமா.... சர்வதேசப் பிரகடனம் செய்துவிட்டாயிற்று... இனி எந்நேரமும், எங்கேயாவது ஒரு அசம்பாவிதம் நடக்கும் வாய்ப்பிருப்பதை எதிர்பார்க்கத்தானே வேண்டும்.'

நினைக்கும்போதே தொண்டைக் குழிக்குள் உருவெடுத்த ஒரு திகில் பந்து, சர்ரென்று நேராக வயிற்றுக்குள் இறங்கிப் பாரமாக அழுத்த, பற்கள் நறநறக்க தானாகவே ஒரு சிம்பன்ஸியாகச் சிலிர்த்துக்கொண்டார் ஜோர்ஜ் டெனட்.


'பெண்டகன் தலைவர் ராம்ஸ்பீல்டும் இதே வேதனையான அவஸ்தையில்தான் இந் நேரம் துடித்துக் கொண்டிருப்பாரோ? தன்னைப் போல...'

அடிமனத்து விளிம்புகளில் மீண்டும் அலையடிக்க,

விரலிடுக்கில் இருந்த சிகரெட்டை உதட்டுக்குக் கொடுத்து, ஆழமாய்... வெகு வெகு ஆழமாய் உறிஞ்ச ஆரம்பித்தார் ஜோர்ஜ் டெனட்.

பக்கத்தேயிருந்த சீ.என்.என். குறுந்திரையில் ஒரு பெண்மைத்தனமான இளைஞனும், ரிட்டையர் ஆகும் வயதில், முகத்தில் ஏகப்பட்ட சுருக்கங்களை வாங்கியிருந்ததொரு பெண்ணும் சில சர்வதேச-உள் விவகாரங்களை அலச ஆரம்பித்திருந்தார்கள்.

**"அநியாயங்கள் அக்கிரமங்கள் நிறைந்த மேற்கத்தேய உலகையும், ஆப்கானுக்கு அடுத்து ஈராக் மீது வெறித்தனமாகப் போர் தொடுத்து அப்பாவி முஸ்லிம்களை அழிக்க முனைந்திருக்கும் அமெரிக்க அட்டூழியங்களையும் வெகுவாகக் கண்டிக்கிறேன். சர்வதேச சமூகம் ஆதரித்தாலும், ஆதரிக்காமல் போனாலும்... மக்களை அழித்து அகதிகளாக்கும், மனிதக் குருதி பார்த்து உயிரில் சந்தோஷிக்கும் அமெரிக்காவின், பலவீனப்படுத்தப் பட்ட மக்களுக்கு எதிரான வன்முறைகளை நூறுவீத அநியாயம்**



**என்பதைத் தவிர வேறு கூறுவதற்கில்லை. எல்லாம் வல்ல இறைவன் பெயரால்... அமெரிக்கா அதற்கான பாரிய விளைவுகளைத் தண்டனைகளாக ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அதே நேரம், ஈராக்கின் சதாம் ஹுசைனும் ஒரு சமூக/தேசத் துரோகி என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றேன்.'**

துல்லியமாய்த் துப்பறிந்து, பிரபஞ்சத்தைக் கிழித்து கதிரவனைக் கிழித்து வந்த ஒஸாமாவின் அந்த அல்ஜெஷீராச் செய்தியில், அமெரிக்காவின் அதியுன்னத விஞ்ஞான மூளைகளும் விழுந்துகொண்டிருந்த தருணம்.

அடிக்கடி படமெடுக்கும் புயலின் முச்சாய்... அமெரிக்காவையும்அரேபிய அரசுகளையும் பகைத்துக் கொண்டும் அல்ஜெஷீரா இப்படித்தான் அடிக்கடி ஒஸாமாவின் பேட்டிகளையும்-கருத்துக்களையும் வெளியிடுகின்றது. குவைட், ஜோர்தானில் அல்ஜெஷீரா அலுவலகங்கள் முடக்கப் பட்டும் கூட அதன் ஆக்ரோஷம் தணிந்ததாகயில்லை.

சூரியப் பொத்தல்களில் நீராவிக் கசிவாய்...

அமெரிக்கா தூண்டில் செய்து கொண்டிருக்கும்போதே, ஒஸாமா மீன் சமைத்திருப்பதாக ஒலிக்கும் குரலிது, கடந்த பெப்ரவரி 11 ஆம் திகதி 150 நாடுகளில்- 70 மொழிகளில் கேட்டிருக்கிறது.

மிகு கோபம், மிகு சோகம் போன்ற மிகை உணர்ச்சிகள் தேக ஆரோக்கியத்தின் எதிரிகள் என்ற போதும், மறுதலிக்க முடியாமல் அந்த மிகை உணர்ச்சிகளில் மிதந்து கொண்டிருந்தார் ஜோர்ஜ் டெனட்.

'ஒஸாமா சங்கு ஊதியாகி விட்டது.

இனி, எவ்வேளையிலும்அமெரிக்காவின் எப் பகுதியும் தாக்கப்படலாம்!'

ஜோர்ஜ் டெனட் மீண்டுமொரு முறை சிலிர்த்துக்கொண்டார்.

முழுநாள் தூக்கமின்மையில் உடம்பு வேறு அயர்ச்சியை வாங்கியிருந்தது.

எப்.பீ.ஐ.யின் எட்சர்கூவர் கட்டடத்தில் அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்தா லோசனைக் கூட்டத்தின் முடிவில் கூட, எம்.பீ.ஐ. பணிப்பாளர் ரொபர்ட் முல்லரும் இதையேதான் கூறு கிறார்.

> "ஒஸாமா.... சர்வதேசப் பிரகடனம் செய்துவிட்டாயிற்று... இனி எந் நேரமும், எங்கேயாவது ஒரு அசம்பா விதம் நடக்கும் வாய்ப்பிருப்பதை எதிர்பார்க்கத்தானே வேண்டும்."

எதிர்பார்க்கிறார். 'ஒஸாமாவின் சீற்றத்தில் சிவப்பு விளக்கு எரிகிறது... அமெரிக்கா எங்கேயும் தாக்கப்பட லாம்!'

அமெரிக்க உப ஜனாதிபதி டிக் செனே, உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் டொம் ரிட்ஜ் இருவரும், "அமெரிக்கா ஒரு அசம்பாவிதத்துக்கு முகம் கொடுக்க வேண்டியது உறுதியாகிவிட்டது. அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்துவது பற்றித்தான் அதிகமதிகம் யோசிக்க வேண்டியிருக்கிறது" என்று கூறுவதிலும் உண்மை இல்லாமல் இல்லை.

உண்மையில் தாக்குதல்கள் முன்னெப்போதைவிடவும் பயங்கரமாக இருக்கும் என்றே அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது. இலக்கு எங்கே என்பதுதான் புதிர். அல்காயிதாவின் தந்திரங்களை மாற்ற சீ.ஐ.ஏ. மேலும் முனைப்போடு செயற்பட வேண்டியும் இருக்கிறது. சுதந்திரத்தின் வேட்கையில்... ஒஸாமா கூட்டணி இம்முறைஅமெரிக்காவின் எங்கேயாவது ஒரிடத்தில் உயிரியல், இரசாயன ஆயுதத் தாக்குதலை நடத்தக்கூடும். என்றும் எம்.பீ. ஐ. சந்தேகிக்கிறது.

**இன்னும் அதிரும்....**

தருவது- இப்னு மாஜிதா

# என்றோ எழுதிவைக்கப்பட்ட உலகின் தலைவிதி



**04**

## நொஸ்ரடாமஸின் அதிசய ஆரூடங்கள்

**சென்ற இதழிலிருந்து....**

**ஒருநாள்....**

**நொஸ்ரடாமஸ் தனது பண்ணைக் கார நண்பனுடன் உலாவிக்கொண்டிருந்தபோது இரு பன்றிக் குட்டிகள் எதிர்ப்படுகின்றன. நொஸ்ரடாமஸ்ஸின் ஆருட சக்தியைப் பரீட்சிக்க எண்ணிய பண்ணைக்காரர் நொஸ்ரடாமஸ்ஸிடம் அந்தப் பன்றிக் குட்டிகளின் தலைவிதி என்னவென்று கூறும்படி கேட்கிறார். நொஸ்ரடாமஸ் அவற்றில் கறுத்தப் பன்றிக் குட்டியை அன்றிரவு ஆகாரமாக தாம் இருவரும் உண்ணப்போவதாகவும், வெள்ளைப் பன்றிக் குட்டி அன்றே ஓநாய்க்கு இரையாகப் போவதாகவும் கூறுகிறான்.**

*அதிசயம்-4*

நண்பன் சற்றுக் கேலியுடன் அவனிடம் கேட்டான். "என்ன உனக்கு மனிதர்கள் மட்டுமல்ல மிருகங்களின் தலைவிதியும் தெரியுமோ?" நொஸ்ரடாமஸ் பதில் பேசவில்லை. வெறுமனே சிரித்தான்.

நொஸ்ரடாமஸ் எதிர்வு கூறியதை எப்படியும் பொய்யாக்கிவிட வேண்டுமென மனதுக்குள் கங்கணம் கட்டிக் கொண்டார் அந்தப் பண்ணைக் காரர். இரகசியமாக ஒரு வேலை செய்தார். தனது சமையற்காரனைக் கூப்பிட்டு "அதோ அந்த வெள்ளைப் பன்றியைப் பிடித்து இன்றிரவு எம்மிருவருக்கும் கறி சமைத்துப் பரிமாறு" என உத்தரவிட்டார். நொஸ்ரடாமஸிடம் அவர் எதுவுமே சொல்லவில்லை. நொஸ்ரடாமஸ் கூறிய விதி எப்படிச் சரியாகப் போகிறது என்று பார்த்துவிடலாமென எண்ணிக் கொண்டார்.

அன்றிரவு...

உணவு மேசையில் பண்ணைக் காரர் சற்றுப் பரபரப்பாக இருந்தார். நொஸ்ரடாமஸ் சாப்பிட அமர்ந்தார். உணவு பரிமாறப்பட்டது. பன்றி இறைச்சிக் கறியை இருவருமே சுவைத்துப் புசித்தனர். பண்ணைக் காரர் நொஸ்ரடாமஸைத் தான் கவிழ்த்துவிட்டதாக எண்ணி உள்ளூரக் குதூகலமாக இருந்தார்.

உணவு உண்டுகொண்டே நொஸ்ரடாமஸிடம், சாதாரணமாகக் கேட்பது போல் கேட்டார். "ஆமாம், நாம் பண்ணையில் கண்ட பன்றிக் குட்டிகளுக்கு என்ன நடக்கப்போவதாய் சொன்னாய்?" நொஸ்ரடாமஸ் எவ்வித சஞ்சலமுமின்றி முன்னர் சொன்னதையே திரும்பச் சொன்னான்.

"அப்படியென்றால் இப்போது நாம் உண்பது நீ சொன்னபடி, அதே கறுப்புப் பன்றிக் குட்டி இல்லையா...?"

நொஸ்ரடாமஸ் பதில் சொல்லவில்லை. பண்ணைக்காரர் தனது சமையற்காரனை அழைத்தார். சமையற்காரன் வந்தவுடன் நொஸ்ரடாமஸை ஏளனமாய்ப் பார்த்தபடி "இதோ, நீ கூறியது பொய்யாகிப் போய்விட்டது. நீ ஓநாய்க்குப் பலியாகுமென்ற வெள்ளைப் பன்றியைத் தான் இங்கே கறியாக்கி நீயும் நானும் புசிக்கிறோம். என்ன அப்படித்தானே சமையற்காரரே...?"

சமையற்காரனின் முகம் சுருங்கியது. தடுமாறியபடி அவசரமாகச் சொன்னான்.

"ஐயா, ஒரு தவறு நடந்துவிட்டது."

பண்ணையார், குழம்பினார். "என்ன...?"

சமையற்காரன் சொன்னான். "நான் இரு பன்றிக் குட்டிகளையும் எங்கள் கொல்லைப்புறத்தில் விட்டிருந்தேன். ஆனால் அங்கே நாம் வளர்க்கும் ஓநாயின் கூடு திறந்திருந்ததை நான் கவனிக்கவில்லை. அந்த ஓநாய் கூட்டிலிருந்து பாய்ந்து வெள்ளைப் பன்றிக் குட்டியைக் கொன்று தின்றுவிட்டது. கறுப்புப் பன்றிக்குட்டியைத்தான் என்னால் காப்பாற்ற முடிந்தது. நீங்கள் பன்றிக் கறி சமைத்து இராப்போசனம் பரிமாறும் படி கேட்டதை நிறைவேற்ற அந்தக் கறுப்புப் பன்றிக்குட்டியைக் கொன்று கூறி சமைத்துள்ளேன்.."

பண்ணையார் திகைத்தார். நொஸ்ரடாமஸ் சொன்னதே இறுதியில் பலித்தது. சலனமேதுமின்றி அமைதியாக உணவருந்திக்கொண்டிருந்தான் நொஸ்ரடாமஸ். பண்ணையார் உணர்ச்சி மேலீட்டால் நொஸ்ரடாமஸின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒத்திக்கொண்டார்.

சமையற்காரனுக்கு ஒன்றும் புரியவில்லை. தனது தவறுக்குப் பண்ணையாரிடம் ஏச்சுக் கிடைக்காததையிட்டுத்தான் அவனுக்கு வியப்பாக இருந்தது.

★★★

ஆருட சக்தி என்பது உலகில் வாழ்ந்த சில மனிதர்களிடம் பண்டைக் காலங்களிலே இருந்து வந்தது. இச் சக்தி வாய்ந்த மனிதர்கள் மனித சமூகத்தின் நலனில் அக்கறைப் படுபவர்களாவும் மக்கள் படும் துன்பங்கள், வேதனைகள், சந்திக்கவுள்ள இடர்கள் குறித்துக் கவலைப் படுபவர்களாகவும் இருந்தார்கள். அந்த அதிகூடிய கவலையும் அக்கறையும் அவர்களைத் தூரதிருஷ்டியுடன் சிந்திக்க வைத்தது. இவர்கள் சுயநலமற்றவர்களாக, ஆடம்பரமற்றவர்களாக விளம்பர ஆசையற்றவர்களாக வாழ்ந்தார்கள்.

பண்டைக் காலத்திலேயே இந்தியாவிலும் பல ஞானிகளும் யோகிகளும் ரிஷிகளும் சித்தர்களும் இத்தகைய ஆற்றலைக் கொண்டிருந்தார்கள். வான மண்டலத்தில் சஞ்சரிக்கும் கோள்களையும் நட்சத்திரங்களையும் ஆராய்ந்து அவர்கள் வழங்கிய கிரக சாஸ்திரங்ளை இன்றும் நாம் பயன் படுத்துகிறோம். பல அவற்றின் பண்டைய கால எழுத்து முறை, பூடகமான தன்மை ஆகியவற்றால் புரிந்து கொள்ள முடியாதவையாக இருந்தன. மேலும் பல அழிந்தும் போய்விட்டன.

**பிரமிக்க வைப்பது**

**ராஜகுமாரன்**

அவ்வாறு சித்தர்களால் ஓலைகளில் எழுதப்பட்டு பரம்பரை பரம்பரையாக வந்த ஒரு ஆருடவகை தான் காண்டம் என்ற பெயரில் இன்றும் எம் மத்தியில் பரபரப்பாக உலவி வருகிறது. ஓலை களில் வரிவடிவங்களால் எழுதப்பட்ட இவ்வேடுகள் சாதாரண மனிதர்களுக்குப் புரிவதில்லை. காண்டம் வாசிக்கும் ஒரு சிலராலேயே அதன் விபரங்களை எடுத்துக் கூற முடியும். அவை பாடல் வடிவில் எதுகை மோனையுடன் எழுதப்பட்டிருக்கும். ஒவ்வொருவருடைய விபரங்கள் பற்றியும்- பெயர் வாழும் இடம், வாழ்க்கைத் துணை, எதிர்காலம் பற்றியெல்லாம் என்றோ வாழ்ந்த யாரோ ஒரு சித்தர் அன்றே எழுதி வைத்துவிட்டுப் போயுள்ளார் என்பதை எண்ணும் போது வியப்பு மேலிடுகிறது அல்லவா!

நொஸ்ரடாமஸ்ஸின் ஆற்றல்களும் அத்தகைய ஒரு ஆச்சரியகரமான சக்தி கொண்டதுதான்.

அவர் வாழ்ந்த காலத்தில் பிரான்ஸ் நாட்டை மன்னன் இரண்டாம் கென்றி ஆண்டு வந்தான். அவனுக்கு ஏற்படப் போகும் துரதிர்ஷ்டவசமான விதியை அச் சம்பவம் நிகழ்வதற்கு இரண்டு வருடத்திற்கு முன்னமே நொஸ்ரடாமஸ் எழுதி வைத்துவிட்டான். அது பலித்த பொழுது பிரான்ஸ் நாடே அதிர்ச்சியில் திகைத்தது அன்று...


(பிரமிப்புகள் தொடரும்)

---

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

(அரசியல் தொடர்)




**<u>மூன்று தேர்தல்கள்.</u>**

புலிகள் தங்களைத் தாக்கக்கூடும் என்பது கூட்டணித் தலைவர்களுக்கு நன்றாகத் தெரிந்த விடயம். அதனால்தான் 1988 ஆரம்பத்தில் சென்னையிலிருந்து கொழும்புக்குத் திரும்பிய கூட்டணித் தலைவர்கள் வசிப்பதற்கு நீலன் திருச்செல்வம் கொழும்பு நகரின் சுடலையான கனத்தைக்குப் பக்கத்தில் உயர்ந்த முன் கேற்றையும் சுற்று மதிலையும் கொண்ட ஒதுக்குப்புற வீடொன்றை ஒழுங்கு செய்தார். "மிகவும் கஷ்டப்பட்டுத்தான் நாங்கள் இந்த வீட்டை ஒழுங்கு செய்தோம்," என்று நீலன் சொன்னதாக அமிர்தலிங்கம்- யோகேஸ்வரன் ஆகியோரின் செத்தவீட்டில் சிலர் பேசிக் கொண்டனர்.

அமிர்தலிங்கமும் மற்றக் கூட்டணித் தலைவர்களும் அந்த வீட்டிற்கு வசிக்க வந்ததற்கு 1989 பெப்ரவரி 15ல் நடந்த பாராளுமன்றத் தேர்தல்தான் காரணம். அது, அடுத்தடுத்து நடந்த மூன்று தேர்தல்களில் இறுதியானது. அந்த மூன்று தேர்தல்களும் 1988 நவம்பர் 19, டிசம்பர் 19,1989 பெப்ரவரி 15 ஆகிய திகதிகளில் நடந்தன. அவற்றில் முதலாவது வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல். அடுத்தது ஜனாதிபதி தேர்தல். மூன்றாவது பாராளுமன்றத் தேர்தல். அந்த மூன்றுமே தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் பெரும் தலையிடியைக் கொடுத்த தேர்தல்கள்.

1987 ஜூலை 29ல் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியும் செய்துகொண்ட இலங்கை- இந்திய ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு அமைதியைக் கொண்டு வருவதற்குப் பதிலாக அல்லலைத்தான் கொண்டு வந்தது. அக்டோபர் 10ம் திகதி இந்திய அமைதி காக்கும் படைக்கும் (ஐ.பி.கே.எவ்.) புலிகளுக்குமிடையே போர் வெடித்தது. ஐ.பி.கே.எவ். ஒப்பரேஷன் பவான் என்ற பெயரிடப்பட்ட தாக்குதலை நடத்திப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது. ஐ.பி.கே.எவ்.வீற்கும் புலிகளுக்கும் இடையே போர் வெடித்ததும் ஜெயவர்த்தனா பிரபாகரனுக்கும் புலிப் போராளிகளுக்கும் வழங்கப்பட்ட பொது மன்னிப்பை வாபஸ் பெற்றார். புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்காவிட்டால் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கும் தன் முயற்சியைத் தொடரப்போவதில்லை என்று அவர் அறிவித்தார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்த பிரதம மந்திரி பிரேமதாச தன் ஒப்பந்த எதிர்ப்பு பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டார். "புலிகளைப் போரிட்டுத்தான் பணிய வைக்க வேண்டும் என்றால் அதை ஏன் ஓர் அந்நியப் படை செய்ய வேண்டும். இலங்கை இராணுவம் அதைச் செய்யலாமே," என்று அவர் சொன்னார். அந்த வாதத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை. "அது தமிழ் மக்களின் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும்" என்று இந்தியா கூறியது. "நாங்கள் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப் படுத்துகிறோம். நீங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்து புலிகளை அரசியல் ரீதியாக ஓரம் கட்டுங்கள்," என்று இந்தியா கூறியது. புலிகளை அரசியல் ரீதியாகப் பணிய வைப்பதற்கு அல்லது ஓரம் கட்டுவதற்கு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட பதின்மூன்றாவது அரசியல் திருத்தம், மாகாண சபை மசோதா ஆகியவற்றைப் பலப்படுத்த வேண்டும் என்று இந்தியா-ஜெயவர்த்தனா அரசுக்கு எடுத்துரைத்தது.

இவ் வேளையில் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளாக இலங்கைப் பாராளுமன்றத்தில் எவரும் அங்கத்துவம் வகிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. நவம்பர் 7 ஒப்பந்தம் அம் மசோதாக்களைப் பற்றி, கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோர் அக்டோபர் 28ல் ரஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையிலேயே அரசியலமைப்பிற்கான 13வது திருத்தம் செய்யப்பட வேண்டிய தேவையை இந்தியா வலியுறுத்தியது. அக் கடிதத்தில் கூட்டணித் தலைவர்கள்: 'இவ் யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை,' எனவும் "இம் மசோதாக்களைத் திருப்தியானவை என்றோ நிலைத்து நிற்கத் தக்கவை என்றோ தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களுக்குச் சிபாரிசு செய்ய முடியாத நிலையில் உள்ளது," என்றும்



குறிப்பிட்டனர். இதற்குத்தானா தமிழ் மக்கள் இவ்வளவு தியாகங்களைச் செய்தனர் என்ற ஏமாற்ற உணர்வையும் அவர்கள் தங்கள் கடிதத்தில் தெரிவிக்கத் தவறவில்லை. அம் மசோதாக் களை ஏற்றுக்கொள்ளுமாறு தமிழ் மக்களை கூட்டணி கேட்பதற்கு ஏழு விடயங்களில் திருத்தமும் தெளிவும் பலப்படுத்தலும் செய்தல் வேண்டும் என்றும் கூட்டணியினர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டினர்.

அந்த ஏழு விடயங்களும் இவைதான்: (1.) தனி நிர்வாக அலகு. (2.) சட்டமியற்றல் நிர்வாக அதிகாரம். (3.) அதிகாரப் பகிர்வு விடயங்களின் பட்டியல்கள். (4.) காணியும் காணிக் குடியேற்றமும். (5.) திருகோணமலை துறைமுகம். (6.) மாகாண அரசாங்க சேவை. (7.) தமிழ் உத்தியோக மொழியாக்கப்படுதலும் மத்திய அரசுடன் தொடர்புடைய விடயங்களும். இவ் விடயங்களில் திருத்தங்களைச் செய்யாமல் அம் மசோதாக்களை நிறைவேற்ற முயல வேண்டாம் என்று கூட்டணியினர் ரஜீவ் காந்தியையும் ஜெயவர்த்தனவையும் கேட்டுக் கொண்டனர்.

ஆனால் கூட்டணியினரின் வேண்டுகோளை ஜெயவர்த்தன ஊதாசீனம் செய்தார். இரண்டு மசோதாக்களையும் சுப்பிரீம் கோட்டின் பரிசீலனைக்கு அவர் சமர்ப்பித்தார். ஜே.வி.பி.யும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மற்ற எதிர்க்கட்சிகளும் அம் மசோதாக்களை எதிர்த்தன. அவற்றை நிறைவேற்றுவதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் ஆணையையும் பெற வேண்டும் என்று அவை தமது வழக்குரைஞர் மூலம் சுப்பிரீம் கோட்டில் வாதாடின. அவ் வாதங்களைக் கேட்ட ஒன்பது நீதியரசர்களைக் கொண்ட நீதிமன்றம் சர்வஜன வாக்கெடுப்புத் தேவையில்லையென்றும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றால் போதும் என்றும் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பை ஐந்து நீதியரசர்கள் கொடுத்தனர். மற்ற நாலு பேரும் மக்கள் ஆணையும் தேவை என்று கூறினர்.


**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**


நவம்பர் முதல் வார இறுதியில் நேபாள தலைநகர் காத்மண்டுவில் சார்க் மூன்றாவது உச்சி மகாநாடு நடக்கவிருந்தது. அம் மகாநாடு முடிந்து 7ம் திகதி ஜெயவர்த்தன டெல்கி ஊடாக கொழும்பு திரும்பவிருந்தார். அப்பொழுது டெல்கியில் சில மணித்தியாலங்கள் தங்கி தன்னுடன் பேசமுடியுமா என்று ஜெயவர்த்தனவைக் கேட்கும்படி ரஜீவ் காந்தி தீக்ஷித்துக்கு அறிவித்தார். ஜெயவர்த்தன அதற்கு இணங்கினார். மூன்று மணித்தியாலங்கள் நடந்த அச் சந்திப்பின்போது அதி முக்கியமான விடயங்கள் சில பேசப்பட்டன. ரஜீவ் காந்தி வலியுறுத்திய தமிழ் மக்கள் தரப்பிலான பல விடயங்களை சமாளிக்க ஜெயவர்த்தனா கையாண்ட ராஜ தந்திரம் நுட்பமானது. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் துரதிஷ்டவசமானது. அது பற்றி அடுத்த இதழில் விபரிக்கிறேன்.

(தொடர்ந்து வடியும்....)

# காலியாகும் ஸ்டேடியங்கள்




தமது அணி கொடுத்த ஏமாற்றத்தால் கிரிக்கெட் மீதே வெறுப்புற்றிருக்கிறார்கள் தென்னாபிரிக்க இரசிகர்கள். உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியிலிருந்து தென் ஆபிரிக்கா வெளியேறிவிட்டதால், ஆட்டங்களைப் பார்க்க வரும் இரசிகர்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது.

சனிக்கிழமை புளோயம்பாண்டீனில் நடைபெற்ற நியூஸிலாந்து, சிம்பாப்வே அணிகளுக்கிடையேயான சூப்பர் சிக்ஸ் ஆட்டத்தைப் பார்க்க 2 ஆயிரம் இரசிகர்களே திரண்டிருந்தனர்.

இந்தியா, இலங்கை அணிகளுக்கிடையேயான ஆட்டத்துக்கான டிக்கெட்டும்கூட கிடைக்கும் அளவுக்கு (!) இருந்தது.

போட்டிக்கு ஆதரவு தரவேண்டும் என ஏற்பாட்டாளர்களுடன் சேர்ந்து தென் ஆபிரிக்க அதிபர்



தாபோ மெபகி அறை கூவல் விடுத்தும்கூட கூட்டம்தான் வந்தபாடில்லை.

***

மழை காரணமாக இடையில் நிறுத்தப்பட்டதால் தென்னாபிரிக்க அணியைப் போட்டித் தொடரில் இருந்து வெளியேற்றக் காரணமாக இருந்த இலங்கை அணி வீரர்களை மோசமாகத் திட்டிய வானொலி அறிவிப்பாளர் ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் போட்டி நடைபெற்ற தினத்தன்று தென்னாபிரிக்க வானொலியில் பணியாற்றிய ஒரு அறிவிப்பாளர் "இந்த முட்டாள் வீரர்களின் பெயர்கள் மிகவும் நீளமானவை" எனக் கூறியதோடு இலங்கை கிரிக்கெட் அணியினரின்பெற்றோர்களையும் சேர்த்துத் திட்டித் தீர்த்தார். இது குறித்து இலங்கை கிரிக்கெட் அணி முகாமையாளர் அஜித் ஜயசுந்தர கடும் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து இந்த ஒலிபரப்பாளர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

# ஸ்போர்ட்ஸ்

## அரையிறுதிக்குள் நுழையும் வாய்ப்பு இலங்கை அணிக்கு முற்றாக நீங்கிவிடவில்லை

உலகக் கிண்ணப் போட்டிகளின் சுப்பர் சிக்ஸ் நிலையில், அவுஸ்திரேலியாவுடனும், இந்தியாவுடனும் இலங்கை தொடர் தோல்விகளைத் தழுவியபோதும் அரையிறுதிக்குள் நுழைவதற்கான வாய்ப்பு இன்னும் இலங்கை அணிக்கு இருக்கின்றது என்றே கூற வேண்டும். புள்ளிகளின் அடிப்படையில் இதனைச் சற்று ஆராய்ந்து பார்ப்போமாயின், இச்செய்தி எழுதப்படும் 11.03.2003 காலை வரை உள்ள பெறுபேறுகளின்படி தலா 16 புள்ளிகளைப் பெற்று அரையிறுதிக்கு உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவுஸ்திரேலியாவும் இந்தியாவும் உள்ளன. அதற்கடுத்தபடியாக முதற் சுற்றிலிருந்து கொண்டு வந்த 10 புள்ளிகளுடன் கென்யாவும் 8 புள்ளிகளுடன் நியூசிலாந்தும், 7.5 புள்ளிகளுடன் இலங்கையும், 3.5 புள்ளிகளுடன் சிம்பாப்வேயும் உள்ளன. இதன் பிரகாரம், இலங்கை அரையிறுதிக்குள் நுழைவதாயின் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற வேண்டும்.

1. எஞ்சியுள்ள ஒரேயொரு போட்டியான சிம்பாப்வேயுடனான போட்டியில் இலங்கை அவசியம் வெற்றி பெற்றாக வேண்டும்.

2. அத்துடன், எஞ்சியுள்ள இரு போட்டிகளிலும் கென்யா அல்லது நியூஸிலாந்து தோல்வியுற வேண்டும்.

இதுவரை இடம் பெற்ற ஒட்டுமொத்தமான போட்டிகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து, முதற் சுற்றிலே நியூஸிலாந்து, மேற்கிந்திய தீவுகள் போன்ற பலம் வாய்ந்த அணிகளை வெற்றி கொண்டும் தென் ஆபிரிக்காவுடனான போட்டியை சமன் செய்தும் தனது திறமைகளை வெளிக்காட்டிய இலங்கை அணி சிம்பாப்வேயினை வெற்றி கொள்வதற்குக் கூடுதலான வாய்ப்பு உள்ளது. அதேபோன்று அவுஸ்திரேலிய அணியும், சிம்பாப்வே அணியும் கென்ய அணியை வெற்றிகொள்வதற்கான வாய்ப்பும் அதிகமாக உள்ளது. எனவே இலங்கை அணி அரையிறுதிக்குள் நுழையும் வாய்ப்பு (இலங்கை அணியின் கைகளில் மட்டும் தங்கியிராத போதும்) இன்னும் பிரகாசமாகவே உள்ளது.

## கிண்ணத்தை இந்தியா வெல்ல முடியும்

# ஸ்டீவ் வோவ் நம்பிக்கை!




சச்சின் டெண்டுல்கரும், வேகப் பந்துவீச்சாளர்களும் நல்ல 'ஃபார்மில்' இருப்பதால் உலகக் கோப்பையை வெல்ல இந்தியாவுக்கு வாய்ப்பிருக்கிறது என அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் முன்னாள் காப்டன் ஸ்டீவ் வோவ் கூறியுள்ளார்.

இதே கருத்தை இங்கிலாந்து பத்திரிகைகளும் பிரதிபலித்துள்ளன.

'தி சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் ஸ்டீவ் வோவ் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் இந்தியா தொடர்ந்து முன்னேறி வருகிறது. அவுஸ்திரேலியாவுடன் இறுதி ஆட்டத்தில் விளையாட இந்தியாவுக்கு அதிக வாய்ப்புள்ளது. மேலும் இரண்டாம் முறையாகக் கோப்பையை வெல்லவும் இந்தியாவுக்கு வாய்ப்பு உள்ளது.

வெற்றி பெற அரை இறுதி, இறுதி என 2 ஆட்டங்களில் கடினமான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் போதுமானது.

இந்திய அணியால் இரண்டாவது பேட்டிங் செய்யும்போது எந்த இலக்கையும் அடைய முடியும். அவர்களுக்குக் கிடைக்கும் அபரிமிதமான ஆதரவை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டால் 'எதுவும்' சாத்தியமே எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியை இந்திய அணி வீழ்த்த முடியும் என்பதற்குக் காரணமே சச்சின்தான்.

அவரது சிறப்பான ஆட்டத்தால் கோப்பையை இந்தியா வென்றால், சச்சின் வாழ்வில் அது மற்றொரு மகுடமாக அமையும். தொடர்ந்து நன்றாக ஆடி முன்னேறி வருகிறது இந்தியா. அம் மாதிரிதான் தற்போதைய சூழ்நிலையில் ஆட வேண்டும். அதுதான் வெற்றிக்கு மிக முக்கியமானது. இந்தியர்கள் எப்போதுமே மற்றவர்களைக் கவரும் விதத்தில் ஆடுகிறார்கள். தற்போது ஒரு நோக்கத்துடன் விளையாட ஆரம்பித்துள்ளார்கள். அவர்கள் நொறுங்கும் நிலையில் இல்லை. என்று தி இன்டிபென்டன்ட பத்திரிகை கூறியுள்ளது. பத்திரிகையில் சைமன் ஒயில்ட் எழுதியுள்ளதாவது

சச்சின் டெண்டுல்கர் கோஹினூர் வைரம் போன்றவர். கோப்பையை இந்தியா வெல்ல அவரையே பெரிதும் சார்ந்துள்ளது.

நல்ல பிட்சுகளில் 'பல் இல்லாத புலி'யாகிவிடுகிறது இந்தியா. அத்தகைய சூழலில் வெற்றிக்கு சச்சினைத்தான் இந்தியா நம்பியுள்ளது. என்று சண்டே டைம்ஸ் செய்தித்தாளில் சைமன் வைல்ட் எழுதியிருக்கிறார்.



# சொந்தச் சாதனையை முறியடித்தார் சச்சின்




ஓர் உலகக் கோப்பைப் போட்டியில் அதிக ரன்களை எடுத்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் சச்சின்.

இலங்கையுடனான ஆட்டத்தில் 46 ரன்களிலிருந்து பவுண்டரி அடித்து 50வது ரன்னை எட்டியபோது, இந்த உலகக் கோப்பையில் இது வரை சச்சின் குவித்த ரன்களின் மொத்த எண்ணிக்கை 524 ஆக உயர்ந்தது.

இது வரை 523 ரன்களே சாதனையாக இருந்தது. 1996ல் அதைச் சாதித்தவரும் சச்சின்தான்.

இந்த உலகக் கோப்பைப் போட்டியில் இரண்டாவது முறையாகவும் சதத்தை நூலிழையில் தவறவிட்டார் சச்சின்.

பாகிஸ்தானுடனான ஆட்டத்தில் 98 ரன்களை விளாசிய சச்சின், இலங்கையுடன் 97 ரன்களில் ஆட்டமிழந்தார்.

இந்த உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் ஆட்ட நாயகனாக சச்சின் தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியம் அதிகரித்துள்ளது.

இலங்கை அணியின் சமிந்த வாஸ் அதிக விக்கட்டுக்களைக் கைப்பற்றி பந்துவீச்சாளர்கள் வரிசையில் முன்னிலையில் இருக்கிறார்.

## வக்கார் யூனிஸ் விலக மறுப்பு

# இன்சமாம் விலகத் தீர்மானம்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானின் தோல்விக்குப் பொறுப்பேற்றுப் பதவி விலக அணியின் தலைவர் வக்கார் யூனிஸ் மறுத்துவிட்டார்.

'அணியின் தோல்விக்கு காப்டனை மட்டும் குற்றஞ்சாட்டுவது நியாயமாகாது. எனவே நான் காப்டன் பதவியிலிருந்து விலகப் போவதில்லை' என வக்கார் கூறியிருக்கிறார்.

இதற்கிடையே துணைத் தலைவர் பொறுப்பிலிருந்து இன்சமாம் உல்-ஹக் விலகத் தீர்மானித்துள்ளார். 'இளைஞர் ஒருவரின் கையில் துணைக் காப்டன் பொறுப்பை அளிப்பதற்கு இதுதான் சரியான சமயம். எனவே துணைக் காப்டன் பொறுப்பிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளேன்' என்றார் அவர்.

லாகூரில் அணி மேலாளர் ஷாரியார் கான் மற்றும் வீரர்கள் கலந்துகொண்ட நிருபர்கள் கூட்டத்தில் இருவரும் தங்கள் முடிவைத் தெரிவித்துள்ளனர்.

'எதிர்பார்த்த அளவுக்கு நாங்கள் விளையாடவில்லை. இதற்காக மக்கள் எங்களை மன்னிக்க வேண்டும். இது வருந்தத்தக்க விஷயம்தான். ஆனால் நாங்கள் கடுமையாகப் போராடினோம். எங்களைத் தவிர இதற்கு யார் மீதும் குற்றஞ்சாட்ட முடியாது' என்றார் கான்.

அணியில் அனைவரும் சிறப்பாக ஆடத் தவறிவிட்டனர் என்றார் வக்கார் யூனிஸ்.

எவ்வாறெனினும் பாகிஸ்தான் அணிக்குள் ஏராளமான உட்பூசல் நிலவுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிறந்த சுழல் பந்துவீச்சாளரான சக்லைன் முஷ்தாக்கை அணியில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காதது குறித்து வக்கார் யூனிஸ் மீதும் சக வீரர்கள் பலரும் ஆத்திரத்தில் உள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் மூத்த வீரர்களின் ஓய்வு குறித்த முரண்பட்ட தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

# ஆறுமனமே ஆறு!

## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்-03

"பம்பாய் நகரப் பகுதியில் அடிக்கடி பாடசாலை மாணவிகள் காணாமல் போவதும், கொலை செய்யப்பட்டுக் கிடப்பதுமான சம்பவங்கள் காவல்துறையினரைத் திக்குமுக்காட வைத்தது. பருவமடையாத பாடசாலை மாணவிகளைக் கூலியாட்களைக் கொண்டு கடத்திப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய அந்த வசதி படைத்த காமுகன் பல கொலைகளையும் செய்திருக்கிறான்.

ஒரு நாள் கூலியாட்கள் ஒரு பாடசாலை மாணவியைக் கடத்திக் கொண்டு அந்தக் காமுகன் ரவியிடம் கொடுத்தனர். கடத்தப்பட்ட அந்தச் சிறுமி ரவியைக் கண்டதும் "மாமா" என்று அழுது கொண்டு கட்டிப் பிடித்தாள். கடத்தப்பட்ட அந்த மாணவி ரவியின் அக்காவுடைய மகள் என்பது தான் உண்மை. ஆனால் அந்தக் காமுகன் ரவியின் கண்களுக்கு சிறுமி தனது அக்காவுடைய மகள் என்பது தெரியவில்லை. அவனில் மிருகம் குடி கொண்டிருந்தது. அவன் சிந்தனைகள் மழுங்கடிக்கப்பட்டிருந்தன. அவனுடைய அக்காவுடைய மகளும் அவனது காமப் பசிக்கு இரையானாள். பசி தீர்ந்ததும் அநாதரவாக விடப்பட்ட அந்த மாணவி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டாள். அவள் காவல் துறையிருக்குக் கொடுத்த தகவலின்படி காமுகன் ரவி கைது செய்யப்பட்டான். அவன் மனநோயால் பாதிக்கப்பட்டிருந்ததை மனநல நிபுணர்கள் ஊர்ஜிதம் செய்தனர். பின் மனநல மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டான்."

பெரிய தம்பி நான் கூறியவற்றைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"பெரிய தம்பி! நான் சொன்ன உதாரணங்கள் போல சந்திரனுக்கும் உளவியல் ரீதியான ஒரு நோய் இருக்க வேண்டும். உடலில் ஏற்படும் நோய்களை விட மனத்தில் ஏற்படும் நோய்கள் ஆபத்தானவை. ஜீரணிக்க முடியாதவை."

"ஐயா. நீங்கள் கூறிய உதாரணங்களிலிருந்து நமது பிள்ளைகளை நாமே கவனமாக வளர்க்க வேண்டுமென்று தெரிகிறது."

"ஓம் பெரிய தம்பி! நமது நாட்டில் ஏற்பட்ட போராட்டமும், இடப்பெயர்வுகளும், அகதி வாழ்க்கையும் பலருடைய மனதைக் கல்லாக்கிவிட்டது. சமுதாயப் பார்வை, சேவை மனப்பான்மை, ஒற்றுமை என்பவை சுத்தமாக மறைந்து விட்டது. குறிக்கோள் இல்லாத வாழ்க்கை, தானுண்டு தன் குடும்பம் உண்டு என்ற குறுகிய எண்ணம், சேமிப்பின்மை, ஆடம்பரம், குடிவெறி இப்படிப் பலவிதமான சமூகக் கோட்பாட்டிற்கு மாறான நிலையில் எமது ஈழத் தமிழர்கள் முகாம்களில் வாழ்கின்றார்கள். இதற்கெல்லாம் அவர்களின் மன அழுத்தமே காரணமாக இருக்கிறது என்பதுதான் உண்மை. எனவே பெரியதம்பி. முகாம் வாழ்க்கையில் ஏற்படும் புதிய சவால்களை நாங்கள் எதிர்நோக்கத்தான் வேண்டும். நமது தாய் நாட்டிற்குச் சென்று சுதந்திரமாக வாழ வழி வரும் வரை இப்படியான பிரச்சனைகள் எம்மைச் சூழ்ந்து கொண்டேதான் இருக்கும்."

"சரி ஐயா, உங்களது ஆலோசனைகளுக்கு நன்றி." என்று பெரியதம்பி எழுந்தார்.

"பெரியதம்பி. சந்திரனை நான் உங்கள் முகாம் தலைவருடாக அழைத்து அவரை நல்வழிப்படுத்த முயற்சி செய்கிறேன். எங்கே உங்கள் மனைவியையும் மகன் ரூபிணியையும் கூட்டி வாருங்க" என்று கேட்டுக் கொண்டேன். மூவரும் சந்தோசமாக விடை பெற்றுக் சென்றனர்.

நான் முகாம் தலைவரைக் கேட்டுக் கொண்டபடி மூன்று நாட்களின் பின் முகாம் தலைவர் சந்திரனைக் கூட்டி வந்திருந்தார்.

இருவரையும் அன்புடன் வரவேற்றேன்.

"வாருங்கள் தலைவர்! சந்திரன்! இந்தக் கதிரைகளில் உட்காருங்கள்" என்று கேட்டுக் கொண்டேன்.

"ஐயா நீங்கள் கேட்டுக் கொண்டதன்படி சந்திரனைக் கூட்டி வந்திருக்கிறேன்" என்று தலைவர் சொன்னார்.

"சரி தலைவரே! மிகவும் நன்றி நான் சந்திரனுடன் தனியாகப் பேச வேண்டும். நீங்கள் கொஞ்ச நேரம் வெளியில் இருங்கள்" என்று தலைவரைக் கேட்டுக் கொண்டேன். தலைவர் எழுந்து வெளியில் சென்றார்.

"சந்திரன்! உங்களை ஏன் இங்கு வரச் சொன்னேன் என்பது தெரியுமா"

"ஓம்"

"நீங்கள் முகாமிலுள்ள சில குழந்தைகளுடன் தவறாக நடந்து கொண்டதாகக் கூறுப்படுவதைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்."

"நான் செய்தது குற்றம்தான்."

என்ற சந்திரன் தலை குனிந்தபடியே இருந்தார்.

"சந்திரன் குற்றம் என்று தெரிந்திருந்தும் பல தடவை ஏன் இப்படி நடந்து கொண்டீர்கள்."

அமைதியாக இருந்தார் சந்திரன்.

"சந்திரன், நீங்கள் கடைசியாக ரூபிணி என்ற குழந்தையைக் காட்டுப் பக்கம் கூட்டிச் சென்றதை மட்டும் எடுத்துக்கொள்வோம். என்ன நடந்தது என்று கூறுங்கள்."

**தொடர்ந்து வரும்....**

### எஸ்.பி.லெம்பட் வங்காலை

---

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

பிறின்சிப்பல் கூப்பிட்டார் போனன்.
கிளாஸ் ரீச்சர் கூப்பிட்டார் போனன்.
இப்ப மொனிட்டர் கூப்பிடுற அளவுக்கு வந்திட்டுது
நாளைக்குப் பியோன் கூப்பிடுவார் போக ஏலுமோ?

நியாயமான கேள்விதான். இந்தக் கதிக்கு வந்திருக்கிறதா அங்கலாய்க்கிறது ஒண்டும் பள்ளிக்கூடப் பிள்ளைகளில்லை. நாங்கள் என்னவோ கௌரவ, மாண்புமிகு எண்டெல்லாம் உசத்தியான அடைமொழி போட்டுப் பேசுவமே, அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொஞ்சப் பேர்தான். அதாவது கூட்டுக் கட்சி பா.உ கள்.

இந்தப் புறுபுறுப்பும் உள்ள இருந்து கேட்டதுதான். பாராளுமன்ற உறுப்பினரெண்டால் திறக்காத கதவும் திறக்கும், அடிக்காத சலூட்டும் அடிபடுமெண்டு குஷியாய் இருந்தவைய அந்தக் காட்டுக்க கூட்டிவைச்சு மாசாமாசம் பிரம்போட பாடம் நடத்திறதெண்டால் வெளியால காட்டாட்டாலும் உள்ளூர அவமானம் உதைக்கத்தானே செய்யும்.

அது வாயால கொட்டுறதயும் சிலதுகளால கொன்ரோல் பண்ண முடியுதில்லை. நம்பகமெண்டு நம்பி நம்ப முடியாதவைக்கு உளறிக் கொட்டிப் போட்டினம்.

உளறலோ, குழறலோ, பரிதாபமான நிலைமையெண்டது மட்டும் புரியுது. 'கம்'மெண்டால் காலடியில போய் நிக்கிற நாய்க்குட்டிகூட வண் மாஸ்ரர் எண்டால்தான் சொல்லுக் கேக்கும். இங்க ஊருக்கொருத்தரா ஏழெட்டுப் பேர் நிண்டு ஆளாளுக்குக் கூப்பிட்டால் நாய்க் குட்டிக்குக்கூடப் பயித்தியம் பிடிக்குமெல்லோ? இது நான் சொல்லேல்ல, அவுங்க சொன்னது.

உண்மைதான் வன்னிக்குப் போய் வாறதுதான் பரவாயில்லையெண்டு பாத்தால் யாழ்ப்பாணப் பொற்பதி றோட்டுக்கு வாவெண்டாலும் பஸ்ஸேறிப்போய் டாப்பு மார்க்பண்ணுற அளவுக்கு எம்பிக்கள் வெறும் ஈக்களாக் குறைஞ்சு போயிட்டனமோவெண்ட தன்மான உணர்வு தலைதூக்கிறது நாயந்தான்.

ஆனால்பாருங்கோ, உதே உணர்வு அப்ப,- எப்ப...? அப்பவே வந்திருந்தால் தேர்தலுக்கு நிக்கக்க ஆற்ர நிழலில நிக்கிறமெண்டாவது அண்ணாந்து பாத்திருக்கலாமெல்லே? தேர்தல் எண்டுவந்தால் ஆற்ர தோளில ஏறியாவது தேரேறலாமெண்டு வெளிக்கிட்டவைக்கு இப்ப தேர்ச் சில்லில கட்டி இழுபடுற நிலையாப் போச்சு.

சங்கரியாரின்ர சங்கதியக் கேக்கக்கதான், சங்கதி முத்திப்போட்டுதெண்டு தெரியுது. என்னதான் இருந்தாலும் அந்தாள் மூத்த மனிஷன். தேர்தல் களம் பல கண்ட மனிஷன். ஆரும் கம்பு வைச்சு நட்ட கத்தரி வெருளிபோல சொந்தக் காலில்லாத ஆளில்ல. யாழ்ப்பாணத்தில, போன லெக்ஷனில கூட வோட்டெடுத்தவரும் அந்தாள்தான்.

இப்ப கொஞ்சக் கொசுறுகள் - அரசியல் கஷ்டகாலத்தில எங்கயிருந்தவையெண்டே தெரியாத மூஞ்சிகள் - இப்பவும்கூட இருக்கிற சிலமனே இல்லாமல், முகத்தில இலையான குந்தினாலும் சிலிர்ப்புக் காட்டாத பேர்வழிகள் - இருந்த கதிரையிலேயே இருந்திட்டால் போதுமெண்டு இருக்குதுகள். ஆனால் இப்ப இருக்கிறவைக்குள்ள தங்கட கட்சியின்ர எல்லாத் துன்ப துயரங்களிலயும் நிண்டு பிடிச்சாள் அந்தாள்தான். யாழ்ப்பாணத்தில கூட்டணியெண்டு சொன்னால் அதின்ர நல்லதுக்கும் கெட்டதுக்கும் கிளைம்பண்ணக்கூடின ஒதோரொட்டியான ஆளெண்டால் சங்கரியாரேதான். மற்றவையெல்லாம் மலைக்கும் மடுவுக்குமிடையில இருக்கிற வித்தியாசம்.

இந்தக் கணக்கில இருக்கக்க, ஆளை வேரோட கிண்டி வெளியால எறியச் சில பெருச்சாளிகள் புத்தெடுக்கினமாம். தங்களால முடியாத காரியத்தை பெரிய கையப் பிடிச்சுச் சாதிக்கிறதுக்கு முண்டியடிக்கினமாம்.

ஒரு கட்சியின்ர தலைமையை இன்னொருத்தர் சொல்லிவிச்சு மாத்திறதெண்டால் கட்சிகளுக்கெண்டு என்ன சுதந்திரம் மிஞ்சிக் கிடக்கப்போகுது? பாலஸ்தீனத் தலைவர் யாசீரை மாத்தச் சொல்லி புஷ் கேக்கிறதுபோல கிடக்கு. ஈராக் தலைவரை மாத்தாட்டால் புஷ் கோவிப்பாரெண்டு அரபு நாடுகள் சொல்லுறமாதிரியும் இனி எங்கட பேப்பர்கள் எழுதும்.

ஆனாலும் பாருங்கோ சங்கரியார் நிண்டு பிடிக்கிறதா நினைச்சிட்டார். வன்னிக்கு வரவழைக்கப் பாத்தினம். மற்றவை போய் வரட்டுமெண்டிட்டு ஆள் இந்தியாவுக்கு வெளிக்கிட்டிட்டார். இது சரிப்பட்டு வாற காரியமில்லைக் கண்டியளோ. ஒரு கட்சிக்க மாற்றம் செய்யிறதெண்டால் அந்தக் கட்சிக்காறரெல்லாம் ஒத்து முடிவெடுக்க வேண்டிய விஷயம்.

சேனைக்கு அதிபதியாய் இருக்க வேண்டினவருக்கெல்லாம் ஏன்தான் இந்தச் சின்னப்புத்தியோ தெரியேல்லை. சில்லறைப் புத்தியெண்டால் இன்னும் தகும். முந்திச் சொன்ன ஒரு குதிரைக் கதையத்தான் ஞாபகப்படுத்த வேண்டிக் கிடக்கு ஆளுக்கு.

ஒரு குதிரைக்கும் கொம்பு மானுக்கும் குளத்துத் தண்ணிக்குச் சண்டை வந்திட்டுதாம். கொம்பைக் கண்டு பயந்த குதிரை வேட்டைக்காரனிட்ட போய் மான் றெச்சி ருசியெண்டு சொல்லி ஆசை காட்ட, அவனோ, குதிரையில ஏறிப்போய் மானை வேட்டையாடித்திண்டிட்டு குதிரையை நிரந்தரமாவே கடிவாளம் போட்டுச் சவாரிக்கு வைச்சுக்கொண்டானாம். தேவையோ இது...?

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

---

**அ**ந்தக் இரும்பு வேலை செய்பவனுக்குக் கடுமையாக வேலை செய்து அலுத்துப் போய்விட்டது. தனக்கு உதவியாக ஒரு இளைஞனுக்குப் பயிற்சி கொடுக்கத் தீர்மானித்தான். வேலை கேட்டு வந்த இளைஞனிடம் "இதைப் பாரப்பா, நான் என்ன சொல்கிறேனோ அதை அப்படியே செய்தாப்போதும். சும்மாகேள்வி கேட்டுட்டிருக்கக் கூடாது" என்று எச்சரித்தான். "சரி" என்று தலை ஆட்டினான் இளைஞன். கொல்லன் ஒரு பெரிய இரும்புக் கம்பியை எடுத்தான். அதன் மீது உளியைப் பொருத்திக் கொண்டான்.



"தம்பி அந்தச் சம்மட்டியை எடு." இளைஞன் எடுத்தான். "நான் தலையை ஆட்டினதும் அது மேல சம்மட்டியால ஓங்கி அடி" என்றான். அப்படியே செய்தான் இளைஞன். ஊர்க்காரர்கள் புதுக் கொல்லனுக்காகக் காத்திருந்தார்கள்.

---

# இந்தவாரம் உங்கள் பலன்

16.03.2003 தொடங்கி 22.03.2003 வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

**கும்பம்** – சூரியன், புதன், **இடபம்** – சனி, இராகு, **கர்க்கடகம்** – வியாழன், **விருட்சிகம்** – கேது, **தனு** – செவ்வாய், **மகரம்** – வெள்ளி,
**சந்திரன் கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.**

**மேடம்:-**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) எடுத்த கருமங்களில் வெற்றி. தொழில் மேன்மை, பண வரவு என்பவைகளுக்கு இடமுண்டு. உத்தியோகத்தர் எதனையும் யோசித்துச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியுண்டாகும். விவாசாயிகள், வியாபாரிகள் நல்ல இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**இடபம்:-**
(கார்த்திகை பின்முக்கால், ரோகினி, மிருகசீரிடதது முன்னரை) நினைத்த காரியம் கைகூடும். அலைச்சல் அதிகரிக்கும். அதற்கேற்ற இலாபமும் கிடைக்கும். சிறு உபாதைகள் ஏற்படலாம். உத்தியோகச் சிறப்பு. மாணவர் கல்வி உயர்ச்சி. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**மிதுனம்:-**
(மிருகசீரிடத்துப் பின்னரை திருவாதிரை புனர்பூசத்து முன்முக்கால்) பணவரவு. வெளியூர்ப் பயணம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். மாணவர் கல்வி உயர்ச்சி. விவசாயிகள், வியாபாரிகள் நல்ல வருமானம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**கர்க்கடகம்:-**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) செலவு அதிகம், தொழில். இடப் பெயர்வு. மாற்றம். வார இறுதியில் நிலைமை மேம்படும். உத்தியோகத்தர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனைப் பெறுவர். உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் லாபம் பெறுவர். விவசாயிகள் சற்று சிரமப்பட வேண்டியிருக்கும்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட எண்:- 03.

**சிங்கம்:-**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) பணவரவு. உல்லாசப் பயணம். வழக்கு முடியும். உத்தியோகத்தர்கள் பொறுப்புகள் அதிகரிக்கும். வியாபாரப் பங்காளிகளிடம் மனக்கசப்பு ஏற்படலாம். விவாசாயிகள் குறைந்த இலாபம் அடைவர். மாணவர்கள் கல்விப் பேறு.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**கன்னி:-**
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மன மகிழ்ச்சி தம்பதிகளிடையே அன்பு பெருகும். உத்தியோகச் சிறப்பு மாணவர்கள், ஆசிரியர்களுக்குக்குக் கீழ்ப் படிந்து நடப்பது நல்லது. வியாபாரிகள், விவசாயிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**துலாம்:-**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழிலில் மறைமுக எதிர்ப்பு. பொருள்வரவு தாமதம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளினால் தொல்லை. மாணவர்களுக்கு கல்வியில் வளர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இல:- 04

**விருட்சிகம்:-**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை) வீண் விவகாரங்கள் வந்து சேரும். வார மத்தியில் பெரியோர் உதவி பிரச்சனைகள் தீரும். மாணவர்கள் படிப்பில் அக்கறை செலுத்துவது நன்மை பயக்கும். வியாபாரிகள், விவசாயிகளுக்கு பணமுடை உருவாகும்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**தனு:-**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில்பிரச்சனைகள் தீரும். பணவரவு திருப்திதரும். பெரியோர்களின் உதவியுண்டாகும். உத்தியோகத்தர் சிலருக்குப் பதவி உயர்வு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**மகரம்:-**
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) மனக்குழப்பங்கள் தீரும். ஆன்மீகத்தில் நாட்டம். உத்தியோக மேன்மை. மாணவர்கள் படிப்பிலும் கலைகளிலும் திறமையை வெளிக்காட்டுவர். வியாபாரிகள் விவசாயிகள் இலாபம் அடைவர்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**கும்பம்:-**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) பண வரவு. பெரிய அளவில் நன்மையோ தீமையோ ஏற்படாது. காரியானுகூலம். உத்தியோகத்தர்களில் பணம் புரளும் துறைகளில் பணிபுரிபவர்களுக்கு உகந்த வாரம். மாணவர்கள் கல்வி உயர்ச்சி. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**மீனம்:-**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) வாரமத்தியில் அபச் செய்தி வரலாம். பண உதவி. திறமைகள் மதிக்கப்பட்டு பாராட்டப்படும். உத்தியோகச் சிறப்பு. வெளியிடப் பயணம். மாணவர்கள் வீதிகளில் எச்சரிக்கை தேவை. விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.




இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியை ஒரு யுத்தம் போல் கருதிக்கொண்டு இரு நாட்டு இரசிகர்களும் தங்களுக்குள் மோதிக்கொண்டாலும் இந்த அணிகளில் விளையாடும் வீரர்கள் பெரும்பாலும் நட்பாகவும், ஒற்றுமையாகவுமே இருக்கிறார்கள்.

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான லீக் போட்டிகளின்போது இங்கிலாந்து வீரர்களைத் துவம்சம் செய்த இந்திய வேகப் பந்து வீச்சாளர் ஆஷிஷ் நெஹ்ரா தனக்கு இந்த உலகக் கிண்ணப் போட்டியில் கிடைத்த மிகப் பெரிய மகிழ்ச்சி தனது 'குரு' வான வசீம் அக்ரமை இரண்டு வருடங்களின் பின்னர் சந்திக்கக் கிடைத்ததுதான் என்று கூறியிருக்கிறார்.



## ஓய்வு?

⬅ பலம் வாய்ந்த இங்கிலாந்து அணி இம்முறை இரண்டாவது சுற்றுக்குத் தெரிவாகாமலேயே உலகக் கிண்ணப் போட்டிகளில் இருந்து விடைபெற்றது.

இந்த உலகக் கிண்ணப் போட்டியுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறும் ஏராளமான மூத்த வீரர்களின் வரிசையில் நசார் ஹுசைனும் ஒருவர்.

இவர் இனிமேல் ஒரு நாள் போட்டிகளில் இங்கிலாந்து அணிக்கு தலைமை தாங்கமாட்டார் என அறிவிக்கப்படுகிறது. ஆனால் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவாரா என்பதில் நிச்சயமற்ற நிலை.

இந்திய முஸ்லிம் தம்பதிகளுக்குப் பிறந்து இங்கிலாந்து கிரிக்கெட் அணியைப் பல வருடங்கள் சிறப்பாக வழி நடத்திய பெருமையுடன் நசார் ஹுசைன் ஓய்வுபெறவுள்ளார்.




# எல்லைகளைத் தாண்டி ஒரு கிரிக்கெட் நட்பு



நெஹ்ராவுக்குப் பந்துவீச்சுத் தொடர்பான ஏதேனும் சந்தேகம் வந்தால் உடனே அவர் வசீம் அக்ரமிடம் தொலைபேசியில் பேசுவார். அக்ரமும் மிகுந்த மகிழ்ச்சியுடன் நெஹ்ராவின் சந்தேகத்துக்குத் தொலைபேசியிலேயே விளக்கமளிப்பார். இந்த உறவு வருடக் கணக்கில் தொடர்கிறது.

அக்ரமை வெகுவாகப் புகழும் நெஹ்ரா ஒரு பந்து வீச்சாளர் என்ற வகையில் வசீம் அக்ரம் தனக்கு வழங்கிய ஆலோசனைகள், அறிவுரைகள் தன்னுடைய வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமைந்ததெனத் தெரிவிக்கிறார்.

நெஹ்ராவும் சஹீர்கானும் கங்குலியின் அணிக்குக் கிடைத்த இரண்டு முக்கிய துருப்புச் சீட்டுக்கள் எனக் கூறும் அக்ரம் தன்னிடம் கிரிக்கெட் தொடர்பில் ஆலோசனை கேட்க வருபவர் இந்தியரா-பாகிஸ்தானியரா என்பது பற்றிச் சிந்திப்பதில்லை எனத் தெரிவிக்கின்றார்.

ஒரு நாள் போட்டிகளில் 500 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ள வசீம் அக்ரம் கிரிக்கெட் வாழ்விலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.



## வேகம்

ஜாசன் கிலஸ்பி அவுஸ்திரேலிய அணிவசமுள்ள மற்றொரு மெக்கிராத். சிறந்த வேகப் பந்து வீச்சாளர். இந்த அணியின் பந்துவீச்சுப் பலத்தில் முக்கிய அம்சமாக விளங்கும் கிலஸ்பி, லீக் போட்டிகளின்போது இந்திய அணி அவுஸ்திரேலியாவிடம் மோசமாகத் தோற்பதற்குக் காரணமாக இருந்தவர்.

சிம்பாப்வேயுடனான ஆரம்பப் போட்டிகளிலும் இவர் சிறப்பாகப் பந்து வீசினார்.

சுப்பர் சிக்ஸ் சுற்றின் இலங்கை அணியுடனான முதல் போட்டியில் கிலஸ்பி இடம்பெற்றிருக்கவில்லை.

பயிற்சியின்போது ஏற்பட்ட காயம் காரணமாக இவர் ஆடவில்லை. 'அதனாலென்ன நாம் பார்த்துக் கொள்ள மாட்டோமோ' என்பது போல் மெக்கிராத்தும் பிரட்லீயும் இலங்கை வீரர்களை நொருக்கி விட்டார்கள்.



இந்திய அணியுடனான போட்டியில் விக்கெட் ஒன்றை வீழ்த்திய கிலஸ்பியை ஆரத்தழுவி வாழ்த்தும் சக வீரர்கள்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து 07.03.2003



செல்வி கோதை-கோவிந்தன்

காரைநகர் இலகடி கோவிந்தராஜன்- பூங்காசி சித்தன் குறிச்சி மயர்விழி தம்பதிகளின் செல்வப் புதல்வி கோதை 07.03.2003 அன்று தனது பிறந்த நாளை LONDON SOUTHAL இல் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவார். கோதைக் குட்டியை அன்பு அப்பா அம்மா, காரைநகரில் இருக்கும் அம்மப்பா- அம்மம்மா, பிரான்ஸில் இருக்கும் அப்பப்பா- அப்பம்மா மற்றும் கொழும்பு பெரியத்தை குடும்பம், லண்டன் பெரியமாமா குடும்பம், பிரான்ஸ் பெரியமாமா குடும்பம், ஜேர்மனி சின்னத்தை குடும்பம், கனடா ஆசையத்தை குடும்பம் மற்றும் கனடாப் பெரியப்பா, நோர்வே சின்னமாமா, ஜேர்மன் ஆசைமாமா, பிரான்ஸ் குஞ்சுமாமா, குட்டிமாமா மற்றும் கனடா மணி சித்தப்பா, சிவாமாமா, லண்டன் பவுண் சித்தப்பா, சங்கர் சித்தப்பா, ஜெயந்தன் சித்தப்பா, ராணி அத்தை, சிவன்மாமா, சசி மாமா, வசிமாமா, காமல் மாமா, வசந்தன் அண்ணா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் நோய் நொடியின்றி சீரும் சிறப்புடன் சகல செல்வமும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல நாராயணன் அருள் வேண்டி வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: தெ.சந்திரசேகரன் (மாமா) 229/1-F, வாசல தோட், கொழும்பு-13.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 8A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் மார்ச் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.